ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# சைவகண்டசபேடிகையின்
முதற்பிரிவாகிய
## சிவாதிக்ய ரத்நாவளி நிரஸனம்
என்னும்
# பாஷண்டமதசபேடிகை
முதற்பாகம்.

இஃது,

ஸ்ரீமத் - உபயவேதாந்தேத்யாதி
**காட்டுமூர் - சரபசம்ஹார ஸ்வாமிகளது**
ஸஹாயத்தைக்கொண்டு
பரசமயக்கோளரியாரும், நன்மதிவிளக்கத்தாருமாகிய
**ஸ்ரீமான் - க. நாராயணஸ்வாமி நாயுடு**
அவர்களாலியற்றப்பட்டு

சுபேதார் மேஜர் குமாரரும்,
ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதரேணுவுமாகிய
ஸ. பு. குருஸ்வாமி நாயுடவர்களால்
லேகந ப்ரமாதாதி தோஷங்களற
பரிசோதிக்கப்பட்டு
த்ராவிடவேதவிளக்கச்சங்கத்தாரது நியமநப்படி
சிந்தாத்ரிபேட்டை
ஸ்ரீபக்தாங்க்ரிரேணுவாகிய
**கா. நாராயணஸ்வாமி முதலியாரால்**

சென்னை:
கொம். பெ. செங்கல்வராயசெட்டியாரது
ஸ்ரீநிலய முத்ராக்ஷரசாலையில்
முத்ரிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீபராங்குசர் திருவவதாராப்தம் ௪௲௮௧.




ஸ்ரீ

ஸ்ரீபராங்குஸாயநம:

# பிரகடநபத்திரிகை

இதனால் ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவர்க்குந் தெரிவிப்ப தியாதெனில் "దాక్షిణ్యరమ్యాగిరిశస్యమూర్తిః దేవీసరోజాసనధర్మపత్నీ వ్యాసాదయోఽపివ్యపదేశ్యవాచస్స్ఫురంతిసర్వేతవశక్తిలేశైః।" என்கிறபடியே தக்ஷிணாமூர்த்தியென்ற சிவனையும், ஸரஸ்வதியையும், வ்யாஸவால்மீக்யாதிகளையும் தம்முடைய சக்திஸாகரசீகரத்தாலே யிடுக்கிச் சகலவேதஸாஸ்த்ரங்களையும்ப்ரவர்த்திப்பிக்கும் ஸ்ரீ ஹயக்ரீவரா லியற்றப்பட்டு, சைவாத்வைதமதஸ்தாபநதிக்ருதனான க்ருஷ்ணமிஸ்ரனைவாய்மாளப்பண்ணினசங்கல்பஸூர்யோதயத்திலே "యతీశ్వరసరస్వతీ సురభితాశయానాంసతాంవహామి చరణాంబుజంప్రణతిశాలినామౌలినా తదస్యమతదూషణదజ్వలితచేతసాంవాదినాంశిరస్సునిహితంమయాపదమదక్షిణాంలక్ష్యతాం" என்கிற ஸ்லோகத்தைக் காஞ்சிமஹாஸதஸ்ஸில் அபிநயிக்கும்போது ஸரஸ்வத்யாவேஸத்தாலேபரவசகாத்ராயானதேவதாசியானவள் அப்பையதீக்ஷிதர்தலையிலே "శిరస్సునిహితంమయా పదమదక్షిణంలక్ష్యతాం" என்றுசொல்லிக்கொண்டு, இடதுகாலைத்தூக்கிவைக்கப்புக, அவ்வளவிலே, அவர்மஹாஸதஸ்ஸிலேவெட்கப்பட்டோடிப்போய், பின்பு அதற்கொரு ப்ரதிக்ரந்தமாவது செய்யமாட்டாதே மௌநத்தையேசரணமடைந்தாராகையாலேக்ருஷ்ணமிஸ்ரனையும் அப்பையதீக்ஷிதரையும் வாய்மாளப்பண்ணின வீறுபாட்டையுடைய சங்கல்பஸூர்யோதயத்திலேவிவேகமஹாராஜன் தன்னுடையதிவ்வியஸதஸ்ஸிலே பாசுபதர்கள்ப்ரவே

சித்தபோது அநேகர், லிங்கதாரிகளாய், ஜடாமண்டலாதிபா ஹ்யவேஷங்களாலே மஹர்ஷிகளைப்பரிஹாஸம்பண்ணுமவர்க ளாய், வேதாந்தசாஸ்த்ரங்களுக்கு மூதேவியைப்போலேயும், ஏழையாட்டைச்சனியைப்போலேயும் பீடாகாரிகளாயிருக் குமவர்களான இவர்கள் யாவரென்று குருவைக்கேட்க, கு ருவும் "పరిమషగణానుకారిణః కేచనదురాచారా వివిధైకమికధర్మకాక్ష మోపమదిన్వనః కేంఠరియా ఇవదూరీకరణీయాః "என்றுபஸ்மதாரண திதுராசாரங்களாலேபூதப்ரேதாதிகளையநுவர்த்தித்து, வைதி கதர்மங்களுக்குக்களையாயிருக்கும்பாசுபதர்கள் இவர்களாகை யாலே இவர்களைவேர்ப்பிடுங்கலாகப்பிடுங்கிநாட்டைவிட்டோ ட்டவேண்டுமென்று ராஜாவுக்குஆஜ்ஞாபித்தவளவிலே, சிஷ் யரிதைக்கேட்டு, தன்கடையேயோடிப்போமிவர்களை, செத் தபிணத்தைத் தடிகொண்டடிப்பாரைப்போலே நாமோட்ட வேண்டாவென்றுசொல்லி; அதுக்கடியென்னென்னில் "కణల కణాదబుద్ధ కపలంఘనతంత్రకథా కథకథకోవిదేషుకథకేషుగతన్తిషు మునీ జరసావపాథజనమోహనకౌశలినా పశుపతినాయదత్తమపయాంత్యథత్ర్య వణాః" என்று காபிலவைசேஷிக பௌத்தஜைநாதிவாதிகளெ ல்லாரும் ஸ்ரீ ராமாநுஜ தர்சநபராஜிதர்களாய்ப்பறந்தோடும் போது "మహాగజాఃపలాయంతేమకతనాంతంకథా" என்கிற நியா யத்தாலே கௌதமர்திசாபத்தாலும்,ஸப்தமோஹநார்த்த பா சுபததுர்மதப்ராவண்யத்தாலும், ஸ்வயம்நஷ்டகல்பர்களான பாசுபதர்கள் இனிப்பறந்தோடாமற் செய்வதென்னென்று சொன்ன இவ்வார்த்தைகளைக்கேட்டபாசுபதர்கள், மாயாப்ர யோகம்பண்ணத்தொடங்க,அப்போது குருவானவர் "సకైట భతమోరవిమర్దధురరాగజంఝసిరోహిరణ్యకశిదారణదత్తలటితకాలనేమిదుర్మ మః కిమతిబహునాభజద్ధవపయోదమష్టింపయంత్రపభుఃప్రతిభటైకౄతాంవి పటయేతమాయామిమామ్" என்று ஸ்ரீ மந்நாராயணனைப்பிரார்த் தித்தவளவிலே, பாசுபதர்களும்,அவர்களுடையமாயையும்,இ ருந்தவிடந்தெரியாமற்போய்விட்டார்களென்று சொல்லியிரு ப்பதையெல்லாம்ஸங்க்ரஹமாகநன்மதிவிளக்கத்தில்காட்டியி ருந்தும்,அதற்கிப்போதுள்ளசைவர்களுமோருத்தரம்சொல்ல

மாட்டாமல்,வாய்மாண்டு, திருடனைத்தேள்கொட்டினாற்போ லேமௌனமாய்ச்சிவாதிக்யரத்நாவளியிலே அச்சங்கதியையெ டுத்துக்காட்டினால் அதற்குச்சமாதானம்கூறவேண்டுமே,க்ரு ஷ்ணமிஸ்ரனும் அப்பையதீக்ஷிதரும் சகலசாஸ்த்ரபாரங்கதர் களாயிருந்தும்,வெற்றியிழந்தஇவ்விஷயத்தில் நாம்வாயிட்டா ல்பிழைக்கமாட்டோமல்லவாவென்று " శీఘ్రమేవ పలాయామః " என்று,மந்த்ராலோசனைசெய்தகுள்ளநரியைப்போலேதீர்க்கா லோசனைசெய்து, ஸங்கல்பசூர்யோதயாதிவிஷயங்களைமாத்ர மொளித்துவிட்டுக்கீழுமேலும்சிலபொய்யும்புளுகுமாகப்புனை ந்து,காட்டாவூர்ச்சுந்தரசிவாசாரியனென்னும் சிவத்விஜர் நன்ம திவிளக்கத்தை முழுமையுங்கண்டித்து விட்டவரைப்போல யெழுதிவிடுத்த சிவாதிக்யரத்நாவளியானது வஞ்சனாக்ரந்தமா கையால், அது நம்பத்தக்கதன்று. மேலும் ஹயக்ரீவோபாஸ னத்தாலே மிக்கஞானமுடையராகிய ஸ்ரீ மத்வேதாந்ததேசி கர் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் என்னும் விருதுடையராயிருக்கும வர்; வேதத்திலும் அக்ரவர்ணத்திலுமேயூற்றத்தையுடையரா யிருந்தும், " பொய்கைமுனிபூதத்தார் பேயாழ்வார்தண்பொ ருநல்வருங்குருகேசன்விண்டுசித்தன்-துய்யகுலசேகரனம்பா ணநாதன் றொண்டரடிப்பொடி மழிசைவந்தசோதி-வையமெ லாமறைவிளங்கவாள்வேலேந்து மங்கையர்கோனென்றிவர்க ள் மகிழ்ந்துபாடும் - செய்ய தமிழ்மறைநான்குந்தெளியவோ தித் தெளியாதமறைநிலங்கள்தெளிகின்றோமே " என்று ஆழ் வார்களையே ஸதாசார்யர்களாகவும், திவ்யப்ரபந்தங்களையே ப்ரமாணதமங்களாகவும்,அருளிச்செய்கையாலும் " దైత్యవ్రాత ప్రమథనరుచినా మోహశాస్త్రాణికుర్వన్ తేనోద్దిష్టో హ్యపథం త్రం గిరిజమకృత తత్తన్న శిష్టోపజీవ్యమ్ " என்றுபாசுபதமானது ஆஸுரமோஹனார் த்தமாகப்பகவதாஜ்ஞையாலே ருத்ரனால் செய்யப்பட்டதா கையாலே அது சிஷ்டர்களுக்குத்யாஜ்யமென்றும், " శైవాద్యా ఖ్యావిశేషైః పశుపతిసమయస్యాచ్చతుర్ధాన్యధావా శ్రుత్యాన్యోన్యస్యాంచ బాధ స్ఫుటఇహ తపసా శాపహస్తా హ్యుక్తః అన్యైశ్చాన్యైర్విరుద్ధానామనుస్మృతసిగ వామాస్సస్మరుస్తత్పరిపిష్టాం స్తత్వైష్యతారిత్యధాత్మాసుగతజినమతానంతరోక్తిః

ஜூனு॥'' என்று இப்பாசுபதமானது சுருதிவிருத்தமாய் ஸ்வவசநவிருத்தமுமாயிருக்கையாலே கௌதமசாபதப்தர்களுக்கேயிஃதேற்குமென்றுமஹர்ஷிகளாலேசொல்லப்பட்டதென்றும், வேதாநுயாயிகளானமங்வாதிகளெல்லாரும்பாசுபதரை வைதிகராயிருப்பார் தீண்டலாகாதென்று விதித்திருக்கிறார்களென்றும், பாசுபதோக்தமானபராவரதத்வங்களும்,விருத்தங்களென்றும்,மோஹநார்த்தமாகவிஷ்ணுவாலேப்ரவர்த்திப்பிக்கப்பட்டபௌத்தஜைநமதங்களைக்கண்டித்தவுடனேபாசுபதத்தைவ்யாஸர்கண்டித்ததுவும், விஷ்ணுமோஹநாநந்தரம்ருத்ரமோஹநமென்கிறக்ரமப்ராப்தியைப்பற்றவாகையாலே பௌத்தாதிகளைக்காட்டிலும்பாசுபதம்ஹேயமென்றும்சொல்லிக்கண்டிக்கையாலும், பாஞ்சராத்ரத்தைக்கண்டித்த சைவபாஷ்யகாரருங்கூடச்சைவருடைய பாட்டுகளையாதல், அவற்றைப்பாடினவர்களையாதல் வேதவைதிகக்ருத்யமாகக்கொள்ளாமையாலும், ஆழ்வார்களுடைய சித்தாந்தமேசித்தாந்தம். சைவசமயிகளுல்வருடையமதம்கேவலம்மோஹநமாகக்கடவது. இஃதெல்லாம் நன்றாகவெளிப்படவேண்டில் நாம்செய்தசைவகண்டசபேடிகையையச்சிட்டுவெளிப்படுத்திக்கொள்ளலாம். சைவகண்டசபேடிகையில்முதற்பிரிவாகிய சிவாதிக்யரத்நாவளிநிரஸநமென்னும்பாஷண்டமதசபேடிகை முதலில்அச்சிடுக.

யுவஹூ }
தை மீ }

இங்ஙனம்
தாஸன்
க. - நாராயணசாமி நாயுடு.



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# சிவாதிக்யரத்நாவளிநிரஸனமென்னும் பாஷண்டமதசபேடிகை.

காப்பு.

అకారార్థవిస్తారమూలమంత్రాదిగోచరం। సర్వాశ్రయఃపతింకుర్వే శైవ కణ్ణచపేటికాం

நாற்பத்தெண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

கார்பூத்தபூங்குழற்றிருமகிழ்நன்வைகுந்தகதிநிகேதனனவாவும் காமமிலனெப்புயர்வி லாதநாரணனண்ட காரணமுமவ்வண்டமும் காணப்படைத்த வற்றுட்பிரமாரரொடாகண்டலர் களாதியாகக் கடவுளர்மனுடர்விலங்கவை பறவைதாவரங்கண் முதலயாவுநிருமித்.

தேர்பூத்தவாங்கவற்றுள்ளும்புறம்புமாயிலகியவைசெய்தவத்துக் கேளுமாறொருநான்குமுகனைந்துமுகனமா ரேந்தலாந்தலைமைநல்கி இயற்றினருமொருசிறிதுமாசுமின்றித் தினமு மியல்வுறும்பழமறைக ளில், இயம்புமெல்லாமொழிப்பொருளுமாய்ப்புன்சமயமேத்துபண்ண வர்போலன்றிச்.

சீர்பூத்தவேதன லொழுக்கினுக் குரியமெய்த்தேவனையவ் வார ணம், தேர்ந்துதுணி தனிமுதல்வனாகியெல்லாந்தருஞ் செயலொருங் குய்த்து ணர்ந்தே, தெய்வநாயகனடித்தாமரைகடொழு தெழுஞ்சீர்ப் பராங்குசன்மங்கைமன், தெளிஞானமுனியாசி ராமாநுசன்புதீந்தி ரப்பிரவணுதியர்கழல்.

பேர்பூத்த பரவல்வழுவாதுபுரிகுரவனடி பேணியாந் தொன்று தொட்டுப், பேர்வரிய வவ்வப்பொருட்டன்மை யுருவினவ் பிறழ்ந் திடச்செயலுக்குமப், பெற்றிநாட்டற் குந்தமாலி யனுமுதெனப் பெ ரிதுணரமாட்டாமுழுப், பேதையர்செய் பிழைமொழிப்போ லிநூல் பாறப் பிறங்குநூல்பேசுவமரோ.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திருத்தகுநான்மறை முடிவும்பிறவு மொருமுதற் கடவுள்செழுங் கொண்மூவே, யொருத்தகுசெந்திருமாலென்றுணர்த்துநனிவாய்மை நிலையொருங்குகாட்டிச், செருத்தகுபுன் புறச்சமய முகங்கவிழ்புலை ந்துணங்கத்தேமலர்க்கா, மருத்தகுபூதூரில்வரு மெதிராசன்மாண டியாம் வழுத்தல்செய்வாம்.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பொய்ந்நிலையைக் கடைப்பிடித்துக் கயவர்வன்கட்பூரி யருளிறு ம்பூதுபூப்பவேதத, மெய்ந்நிலைச்சீர் வைணவமாண்சமயமீதா மிறை விள்ழ்பூபேதைமையை முற்றும்வீழ்ப்பான், செய்ந்நிலைசெம்முளரிமி சைஞிமிறுபாண்செய்திருக்கு ருகையடிகளடிசிரம்பொறுத்து,வெந்நி லையசைவகண்டசபேடிகைப்பேர்வீறுநா லறிஞர்முனங்கூறுவாமே.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தவம்புரியுயிர்க ளரனயன்குலிசி சந்திரனேனையோராக்க, நவு ம்புரி நளினவிழிமுதற் கடவுணலங் கெழுமார்பின் வீற்றிருந்திட், டி வம்புரியாவவ்வருட்டனி முதலுக்கருண்மொழி யுரைதருமமலே, சிவ ம்புரிமறைச்செஞ்சேறடி யுள்ளந்திருந்துறப்பொருந்தி வாழ்குதுமால்.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கறையேற்ற நீலமணி மிடற்றுமுக்கட்காரிகையோர் கூற்றனறு ங்கமலமேலோன், பொறையேற்றபல்லுயிரும் பிறவுமுற்றும்புணரி யெழு காலகட்டோர் புரையின்வைத்து, நிறையேற்ற வவ்வனைத்து மீண்டுங்காட்டி நெடும்புரவுபுரியுமுதற்கடவுண் முந்தை, மறையேற் றநதிகறங்குமனை மலர்த்தாண்மனமொழிமெய்களிற்கருதி வழுத்தித் தாழ்வாம்.

## நூல்

உலகில்வீடுபேற்றிற்குரிய மன்னுயிர்உணர்ந்துய்யும்படி, சிலநா ள்களுக்குமுன்னே யாம் வெளியிட்டநன்மதிவிளக்கத்துக்குமாறாக,

"యస్తునారాయణం ద్వేష్టి । తంవిద్యాదంత్యరేతసం।" என்றும்'

"బ్రాహ్మణ్యాంనిధవాయాంతు విప్రాజ్జాతస్తుకుండకః। విధవాయాంయస్తో[illegible] న్యస్య దుపనేయాంచతస్త్రితః। తౌపుంగన్యఫూజా[illegible]నవదకర్తు బహి ష్కృతౌ." என்றும் மஹர்ஷிகளாலே சொல்லப்பட்டு, ஸ்ம்ருதிஸ

ங்க்ரஹூர்திகளிலே யுதாஹ்ருதமானபடியே, சண்டாளஜன்மத்தையும், அதிலுங்கடையான விதவாபுத்ரத்வாதிகளையும் அசாதாரணநிரூபகமாகவுடைய சிவத்விஜவம்ஸாக்ரகண்யராண், காட்டானூர்ச் சுந்தரசிவாசாரிய ரென்பவர், தம்மிருமருங்குந் தூய்மையெல்லாம் விளங்க, சிவாகம சித்தாந்த ஞானநிஷ்டர் என்று விருதுகூறிக்கொண்டதுமன்றி, புலியைப்பார்த்துப் பூனை சூடிக்கொள்வதுபோல உபயவேதாந்தப்ரவர்த்தகாசார்யர் என்று பாகவதகுண நாமதேயத்தையும் திருடிக்கொண்டு, அமங்களவாரத்தை மங்களவாரமென்பதுபோலும், அசிவநாமமானமுண்டையை சிவநாம மென்பதுபோலும், அதிஹேயமான லிங்கபகங்களைப் பரமசிவமென்று கொண்டு அதின்தலையில் இல்லாத பழிகளையெல்லாமுண்டென்று ஸ்தாபிக்கைக்காக, பொய்ம்மொழிகளையெல்லா மொருங்குதிரட்டி, அப்பொய்ம்மொழித்திரட்டுக்கு, அழுகியொழுகுங்கழிச்சலை அதிசாரமென்பதுபோலச் சிவாதிக்கிய ரத்நா வளியென்னும் பெயர்புனைந்து வெளிப்படுத்தின ரன்றே? அப்பாழ்மொழியெல்லாம் பாறிப்பறக்கவும், பறக்கு மதுகண்டு சுடுசாம்பராண்டிகள் நாற்றிசையும் புகலற்று நடுங்கியொடுங்கவும், ஒடுங்குமதுகண்டு நல்லோர் பொலிகபொலிகவென்றுகக்கவும், கரைகடந்த காவிரியாய் நிகரற்று நெறியுற்று எமது நாவீறுவருமாறு.

அவ்வழு மூஞ்சி வெளிப்படுத்தின பொய்ம்மொழித் திரட்டில் சங்கரபாஷ்யத்தில் சைவாகமத்தைக் கண்டித்தாரென்பது கற்பனையென் றழுதவுடனே, ஈஸ்வரனுக்கு நிமித்தகாரணத்வம் சைவர்கூறுவது விருத்தமென்பதுவே சங்கராசார்யருக்குச் சித்தாந்தமென்று தாமேயொப்புக்கொண்டு, முன்பின்தெரியாதே மெய்யே சித்தாந்தஞ்செய்வாரைப்போலே பிதற்றினர். சைவர்களெல்லாரும் ஞானமில்லாத பசுக்களென்பதற்கீ தொன்றுமேபோதுமான நிதர்ஸனம். இப்படி முதலடியிலேயே தமது மதத்தைத் தாமேகண்டித்துப் பிதற்றுகிற இம்மஹாநுபாவரும் "ஆசைவெட்க மறியாது" என்கிறதற்கிணங்க, சிறிதாயினும் வெட்கமில்லாமல் ஒரு நூல்செய்யத்தொடங்கினரோ இது என்ன ஆச்சரியம்? இதுநிற்க, நன்மதிவிளக்கத்தில் சங்கராசார்யர் சைவாகமத்தைக் கண்டித்தாரென்பதே யுண்மையென்று தாமுமொப்புக்கொண்டு, இவ்வளவாலே தம்சித்தாந்தத்தை ஸ்தாபித்து விட்டதாக நடனஞ்செய்து, மேல் வைஷ்ணவ சித்தாந்தத்துக்கு மிந்தத்தோஷமுண்டென்று சொல்லுவாராகக் கோவியெடுத்த சூத்ரங்களில் "ఉజ్ఞానాదిభావేవిశస్యస్వేతః ప్రతిషేధాత్" என்று

ஒரு சூத்ரத்தை யெழுதித்தொலைத்துவிட்டார். இச்சூத்ர மொருபாஷ்யத்திலுங் காணப்படவில்லை. இவரொரு குருமுகமாகப்படித்தாலல்லவோ சூத்திரத்தினுண்மை தெரியும். தாமெழுதின இந்தவபத்தக்கந்தலுக்கு இம்மூடாக்கிரேசர் என்ன அர்த்தம் சொல்லுவாரோ தெரியாது. சூத்ரத்தையும் வாயாற்சொல்ல வல்லமையில்லா விவ்வெலி யெனும்பர பரசமயக்கோளரியாரும், நன்மதிவிளக்கத்தாருமாகிய எம்மை எதிரிடத்தொடங்கின தென்னபுதுமை? இதுமட்டோ, மேலும் எல்லாந் தெரிந்தவனைப்போலே, "వాసుదేవాత్సంకర్షణాత్ప్రద్యుమ్నాదనిరుద్ధః" என்று ஒரு வாக்யத்தைக்கற்பித்தெழுதி விட்டார். இதுவென்ன சுருதியோ? புராணமோ? இதிஹாசமோ? அல்லது சாக்ஷாத்தாக லிங்கத்வாராவெளிபட்டுப்புலப்பட்டதோ? வஞ்சனையாலே இவ்வெறியர் தாமேகற்பித்ததோதெரியாது: ஶ்ரீகண்டாசார்யர்செய்ததாக இவ்வெறியரால் மதிக்கப்பட்ட சைவபாஷ்யத்திலு மிப்படிப்பட்ட சூத்ரமும், வாக்கியமுங் காணப்படவில்லை; ஆராய்ந்துபார்க்கும்போது "విజ్ఞానాదిభావే వా తదప్రతిషేధః" என்னும் சூத்ரத்தையும், "ఉత్పత్త్యసంభవాత్." இத்யாதி காரணவிஷயவாக்யத்தையு முள்ளபடிசொல்லத்தக்க ஞானமில்லாமையாலே இப்படி மாறுபாடாகச் சொல்லியழுதாரென்று புத்திமான்களெண்ணத்தக்கதா யிருக்கிறது. இதுகிடக்க, வைஷ்ணவமதத்தில் ஜீவர்களுக்கு உத்பத்திகூறுவதைச் சங்கராசார்யர்கண்டித்ததாகப் புலம்பினர். ஸமஸ்தவைஷ்ணவ க்ரந்தங்களிலும் ஜீவர்களுக்கு உத்பத்தியில்லையாதென்று ஸ்தாபித்திருக்க, அதனை அறியாமல் பிதற்றுவதென்ன வறிவுக்கேடு? வாசுதேவனிடத்தில் நின்றும் ஸங்கர்ஷணனென்கிற ஜீவன்பிறந்தானென்கிற ஶ்ரீ பாஞ்சராத்ரவாக்கியத்தில் மேலெழத் தோன்றுகிற அர்த்தங்கொண்டு, அதுவே வைஷ்ணவ சித்தாந்தமென்றாரோபித்துக் கண்டித்தாரெனில், அப்போது பூர்வபக்ஷத்தைக் கண்டித்து ஶ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தைச் சங்கராசார்யர் ஸ்தாபித்தாரென்பதேபெறப்படுகையாலே, வைஷ்ணவ சித்தாந்தத்தை அவர்கண்டித்தாரென்பது பழுதாம். சைவாகமங்களில் ஈஶ்வரதத்வமும், ப்ரக்ருதிதத்வமும், புருஷதத்வமும் காலதத்வமுமாகிய இவையெல்லாவற்றிற்கும் உத்பத்திசொல்லா நிற்க, அதைக் கேட்டறியாதே, வைஷ்ணவ சித்தாந்தத்தில் ஜீவோத்பத்தி சொல்லுவதாகக்கொண்டு தூஷிப்பது பிறவிக்குருடன் சூர்யனைக் கண்கெட்டவனென்று பழிப்பதுபோலப் பரிஹாஸஹேதுவாமத்தனை

சைவாகமத்தில், பரமசிவன் தானனஸ்ருஷ்டிசிவன்ஶாந்தியதீத சிவனென்றும், சதாசிவனென்றும், ஈஶ்வரனென்றும், வித்யையென்றும், நாலுபடியாயிருப்பன். இந்நாலுவகைப்பட்டஸ்ருஷ்டிசிவனும் பரமசிவன்தானனபடியென்னெனில் "తత్త్వంవస్తుతఏకంశివసంజ్ఞం చిత్రశక్తిశతఖచితం శక్తివ్యాపృతిభేదాత్తస్యైతేకల్పితాభేదాః" என்ற சைவவசனத்தின்படியே, ஸ்ருஷ்டிசிவன்களுக்கும் பரமசிவனுக்கும் பேதமில்லையென்னுமிடம்பெறப்பட்டது "తతోమాయాతతోవ్యక్తం శివాచ్ఛక్తిమతఃప్రభోః శాంత్యతీతపదంజజ్ఞే తతశ్శాంతిపదంక్రమాత్" என்றும் "ప్రకృత్యాద్యయంబిందుఃష్ఠోభ్యస్తేసాఖిలాత్మనాంతత్రయఃశుద్ధభాగోస్యశాంత్యతీతకలాతుసా శాంతిభువనాత్మాయఃపరిణామస్సబైందవఃశివతత్త్వంతదేవోక్తమ్" என்றும், சாந்தியதீதசிவனுக்கு உத்பத்தி சொல்லப்பட்டது. "జ్ఞానక్రియాఖ్యశక్త్యోరపకర్షోత్కర్షయోరభావేసయః ప్రసరస్తంప్రాహుస్సదాశివాఖ్యంబుధాస్తత్త్వమ్" என்றும் "న్యగ్భవతియత్రశక్తిర్జ్ఞానాఖ్యోద్రిక్తతాంక్రియాభజతేఈశ్వరతత్త్వం తదిహప్రోక్తంసర్వార్థకర్తృసదా" என்றும் "న్యగ్భవతిక్రియాశక్తిర్జ్ఞానాఖ్యోద్రిక్తమశ్నుతేయత్ర తత్తత్త్వంవిద్యాఖ్యమ్" என்றும் சதாசிவனும், ஈஶ்வரனும் வித்யாசிவனுமாகிய இம்மூன்றுஸ்ருஷ்டிசிவன்களுக்கும் சாந்தியதீதசிவனிடத்தினின்றுமுத்பத்திபிரகாரமிருக்கும்படி சொல்லியது "తతఃప్రాధానికం తత్త్వం కలాతత్త్వాదజీజనత్ సప్తగ్రంథినిదానస్యయత్త్రిగుణస్యకారణం" என்றுமஹதஹங்காரங்களும், பஞ்சதன்மாத்திரைகளுமாகியவெழுதத்துவங்களுக்கும் மூலமானஸத்வரஜஸ்தமோமய குணதத்துவத்துக்குங்காரணமானபிரதானமென்று சொல்லப்பட்டப்ராக்ருதிதத்துவத்துக்குக்கலாதத்துவமென்னும் பெயரையுடைய தத்துவாந்தரத்தினின்றுமுத்பத்திசொல்லப்பட்டது. இதுதான் "అజామేకాం" இத்யாதிஶ்ருதி விருத்தமாயிருக்கும். இப்படியே "పుంస్తత్త్వంతతఏవాభూత్ పుంప్రత్యయనిబంధనం ఆపూరకంప్రధానాదేర్భావనేదప్రదనాంశ్రయం" என்றுமாயாதத்துவத்தினின்றும் ஜீவதத்துவத்துக்கு உத்பத்தி சொல்லப்பட்டது இதுதான் "నిత్యోనిత్యానాం" இத்யாதிஶ்ருதிவிருத்தமாய் அசேதனத்சேதனேத்பத்திகூடாமையாலே ந்யாயவிருத்தமுமாயிருக்கும். இப்படியே "తదనురాగాహ్వకంతత్త్వం కాలాఖ్యంతైజసంహంకః మాయాంశతోభ్య

ஸமுதேபஸ்த்யாம்ப்ரம்ஹதி" என்றுகாலதத்துவத்துக்குமாயாதத்துவத்தினின்றும்உத்பத்திசொல்லப்பட்டது. இதுதான், "ప్రలయకాలః" இத்யாதிப்ரமாணங்களுக்கும், ப்ரளயகாலாந்யதாநுபபத்திந்யாயத்துக்கும்விருத்தமாயிருக்கும். ப்ரளயதசையில்காலமில்லையாகில் ப்ரளயகாலமென்னக்கூடாதிறே. இப்படியுத்பத்திதூஷணம்சைவாகமத்திலேகுடிகொண்டிருக்க, இதையறியாதேதாமுமொருசைவனென்றுபேரிட்டுக்கொண்டுநாணமில்லாமல்பிதற்றுவதென்னபேய்த்தனம் "యో వాసుదేవో భగవాన్ క్షేత్రజ్ఞో నిర్గుణాత్మకః జ్ఞేయ స్సతస్సభగవాన్ జీవస్సంకర్షణః ప్రభుః సంకర్షణాచ్చ ప్రద్యుమ్నో మనో భూతస్సఉచ్యతే ప్రద్యుమ్నాద్యో నిరుద్ధస్తు సోహంకారో మహేశ్వరః" என்று, சூத்ரகாரரே ஸ்வஸித்தாந்தமாக வாசுதேவரிடத்தினின்றும் ஜீவாபிமானியாய்க்கொண்டுஜீவனென்னும்பேர்பெற்றஸங்கர்ஷணவ்யூஹத்துக்குஉத்பத்திசொல்லியிருக்க, ஈதறியாமல்சங்கராசாரியர்வைஷ்ணவத்தைக்கண்டித்தாரென்பதை யார்மெய்யென்றுநம்புவார்கள்? இதுநிற்க, "న చ కర్తుః కరణం" என்கிற சூத்திரத்திற்கிந்த மூடசிரோமணியானவர் கர்த்தாவுங் கரணமுமொன்று என்பதைவிலக்குகிறதென்றுபொருளைவிளக்கியிருக்கின்றார். இப்பேயருக்குவையதிகரண்யமேசாமாநாதிகரண்யமாய்த்தலைகீழாய்த்தோன்றுவதுமுறைமையாய்விட்டது; தாமஸஜாதிக்கு விபரீதஞானம்முறைமையல்லவா? இவ்வசடர்வாயால்இங்ஙன்பிதற்றினும்உள்ளே வேறுபாடுண்டாகில் விசாரிப்போம். கர்த்தாவினிடத்தினின்றுங் கரணமுண்டாகக்கூடாதென்று சங்கராசாரியர்சொல்லுவதாகக்கருத்தாகில், சங்கராசாரியருடைய மதத்தில்ப்ரபஞ்சஸ்ருஷ்டிக்குக்கருவியானஅஜ்ஞாநம், கர்த்தாவாகிய ப்ரஹ்மஸ்வரூபத்திலேயுண்டானதாகவே யொப்புக்கொள்ளப்பட்டிருப்பதை யறிவாராகில், அவ்வெண்ணத்தைவிட்டுவிடுவார். கர்த்தாவினிடத்தினின்றும் அந்தக்கரணமுண்டாகக்கூடாதென்பதையெண்ணுவாராகிலும் "సమన్యత" இத்தியாதிகளில் ஸ்ருஷ்டிஹேதுவானஸங்கல்பத்துக்குக் கருவியானபரப்ரஹ்மத்தினுடையமனஸ்ஸும், பரப்ரஹ்மஸ்வரூபத்திலே கல்பிதமென்றே சொல்லவேண்டுகையாலே அவ்வெண்ணத்தையும் விடுவார். ஜீவனுடைய வுள்ளமானது ஜீவனிடத்தினின்று முண்டாயிற் றென்னும் பக்ஷத்தைச் சங்கராசாரியர்விலக்கினாராக வெண்ணுவாராகில், இவ்வாறுகொள்கைவைஷ்ணவமதத்தில் கிடையாமையாலே வைஷ்ணவத்துக்குமாறுபாடானமதத்தைக்கண்

டித்துவைஷ்ணவத்தை ஸ்தாபித்தாரென்பதாய் முடியும். இதுநிற்க, சைவமதத்தில் "యస్మిన్నిలీయ్యనిఖిలాఇచ్ఛాద్యాశ్శక్తయ యస్యైకం కృత్యం కుర్వాతితేనతదిదం సర్వమ సృగాత్రిహాకం పృభోః।" என்கிறபடியே ப்ரபுவான சிவனேகர்த்தாவென்றும், அவனிடத்திலுண்டான இச்சாதி சக்திகளேகரணமென்றும், மாயாத்வயம் உபாதாநமென்றும் சொல்லுகையாலே, சக்தியாகிய கரணங்கர்த்தாவான சிவனிடத்திலே யுண்டானதாகச்சொல்லாநிற்க, அதனையே சங்கராசாரியர் கண்டித்ததாகச் சொல்லித் தம்முடையசித்தாந்தத்தின் வேரைப் பிடுங்கி விட்டு, வைஷ்ணவசித்தாந்தத்தையெல்லாம் மூலதோஹாநி செய்துவிட்டதாக அம்மணக்கூத்தாடாநின்றார். ஓகோ! உலகத்தில் புத்திமான்கள் இவருடைய பேதைமையைக் கண்டாலென்னபாடுபடுவார்களோ? இதுமட்டோ? கீழே ஒருசூத்ரந்தாமே கற்பித்தெழுதினவர் அதற்கொரு பொருள்சொல்லாதொழிந்தது முன்மறந்து போனதினாலேயோ? அல்லது அப்பிழைமொழிக் கந்தலுக்குச் சைவமதத்தா ரொருவரும் அர்த்தம் சொல்லமாட்டாமையாலேயோ? அல்லது சைவ தீக்ஷையுடையார்களுக்கே சொல்லவேண்டுமென்றோ? அன்றிக்கே குணமுங்குணியும் வேறென்பதும் விருத்தமென்று மேற்சொல்லுகிறவதுவே அச்சூத்திரத்தின் பொருளென்று இப்பேயர்கருதிக் கொண்டதினாலேயோ? தெரியவில்லை. கடையிற்சொன்னபடியாகில், இதைவிட இவரது அறிவுக் கேட்டுக்கு வேறொரு நிரூபகமுந்தேடவேண்டா. ஆவா இப்படிப்பட்ட பதிதர் தாமும் ஒரு நூலாசிரிய ராகும்படியாய் விட்டதல்லவா? சீச்சீ, கலிபுருஷனும், மூதேவியும், சோழன்ப்ரஹ்மஹத்தியும் ஒன்றாகக்கூடி இப்பிசாசுரூபமாய்ப் பிறந்தனவோ என்னையோ அறியேன்? இப்படிப்பட்ட குருடனாயொழியச் சைவசித்தாந்த ஸ்தாபநத்துக்கு ஆளில்லாமற்போய் விட்டதல்லவா? இதுகிடக்க, சங்கரமதத்திலும் ஸகுணஶ்ருதிகளில், குணமுங் குணியும்வேறென்பதற்கு அவரிசைந்திருக்க, அதைக் கண்டித்தாரென்பதை எவர்நம்புவார்? குட்டிச்சுவரில்முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? மேலும் சைவர்க்குங்குணமுங் குணியும் வேறென்பதே கொள்கையாயிருக்க, அதைச்சங்கராசாரியர் கண்டித்தாரென்றால் சைவமதத்தைப் பூஷித்ததாகுமோ? ஒருமூடன் ஆகாசத்தின்மேலே கோபஞ்செய்து சேற்றைவாரி யெறிந்தால் அது அவன்தலையிலேதானே விழுமாப்போல, இம்மூடமதியார் பேதைத்தனத்தாலே வைஷ்ணவ மதத்தின்மேல்சொன்ன தோஷமெல்லாம் தம்தலையிலே விழுந்தபடியைக்கண்டு புத்திமான்க ளெல்

லாரும் விலாவிறச் சிரிப்பர்களென் றெண்ணுகிறேன். இதுநிற்க மேலே "భక్తా భాగవతాశ్చైవ వైష్ణవాః పాంచరాత్రిణః। వైఖానసాః కర్మహీనాః షడ్విధా వైష్ణవా మతాః।" என்கிற ஆறுவகையான வைஷ்ணவத்தையும் சங்கராசாரியரொடுத்துக் கண்டித்திருப்பதாகவும், ஒரு பச்சைப்பசும் பொய்யை எழுதியிருதார். இதுபொய்யென்பது ,புத்திமான்கள் கோசங்களைப் பார்வையிட்டால் நன்றாகவெளியாகும் "తత్ర యత్తావదుచ్యతే యోఽసౌ నారాయణః పరోఽవ్యక్తాత్ప్రసిద్ధః పరమాత్మా సర్వాత్మా స ఆత్మనాత్మానమనేకధా వ్యూహ్య వ్యవస్థిత ఇతి తన్న నిరాక్రియతే" என்றும், "యదపి తస్య భగవతోఽభిగమనాదిలక్షణమారాధనమజస్రమనన్యచిత్తతయాభిప్రేయతే తదపి న ప్రతిషిధ్యతే." என்றும், ஸ்ரீசங்கராசாரியர் நாராயணனே பரதத்வமென்றும், அவனுக்கு மேற்பட்டதோ ராத்மாவில்லாமையாலே அவனே பரமாத்மாவென்றும், தன்னை யொழிந்த சகலபதார்த்தங்களுக்கும் இந்தநாராயணனே அந்தராத்மாவென்றும், அந்த ஸ்ரீமந்நாராயணன் ஸ்வேச்சையாலே வாசுதேவஸங்கர்ஷண ப்ரத்யும்நாத் யநேக வ்யூஹாவதாரத்தை யடைந்திருப்பனென்றும், அப்படிப்பட்ட எம்பெருமான் விஷயத்திலே பஞ்சஸம்ஸ்காராதி பூர்வகமான பஞ்சகாலாராதன பரர்களாய், தேவதாந்தரங்களையெல்லாம் அடிப்பிடுக்கல்லோபாதியாக நினைத்து அந்யராய்க்கொண்டு, ஸர்வரும் வர்த்திக்கக்கடவதென்றும், ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் சொல்லுகிற வர்த்தமெல்லாம் ஶ்ருதிசித்தமாய் ஸத்யமாயிருக்கையாலே அவற்றைநாம் கண்டிப்பதில்லையென்று கண்டோக்தியாகச் சொல்லியிருப்பதை இப்போது ராமாநந்தீயத்துடன் தெலுங்கக்ஷரத்தில் அச்சிட்டிருக்கிற சங்கரபாஷ்ய புஸ்தகத்தில் ( உஅச - ஆம் பக்கம் உ0-ஆம் வரிதொடங்கி ) புத்திமான்கள் படித்துப்பார்த்துக் கொள்ளலாம்.

இப்படியே மேற்கூறிய சங்கரபாஷ்ய புஸ்தகத்தில் (உஅக-ஆம் பக்கம்.உரு-ஆவது) வரிதொடங்கிப்பார்வையிட்டால்"పరస్యాపి సర్వజ్ఞ ప్రణీతాగమసద్భావాత్ప్రమాణమాగమబలమితి చేన్న ఇతరేతరాశ్రయప్రసంగాత్ ఆగమప్రత్యయాత్సర్వజ్ఞత్వసిద్ధిః సర్వజ్ఞత్వ ప్రత్యయాచ్చాగమసిద్ధిః" என்று சைவாகமத்தைஸர்வஜ்ஞனசிவன்பண்ணுகையாலேப்ரமாணமென்றுசொல்லவொண்ணாது.சைவாகமத்துக்குக்கர்த்தாவானசிவன்ஸர்வஜ்ஞனென்கைக்குச்சைவாகமத்தை யொழியப்ரமாணமில்லாமையாலே சிவன்ஸர்வஜ்ஞனென்னுமது அசித்தம். சைவாகமத்தைக்கொண்டே அவனைஸர்வஜ்ஞனென்று ஸாதிக்கப்பார்த்தால்,சைவாக

மந்துக்குக்கர்த்தாவாகிய சிவன்ஸர்வஜ்ஞனென்னுமிடம்ஸித்தித்தா லொழியக் கடைப்படாது. ஆகையால் அந்யோந்யாஶ்ரயமென்கிற தோஷத்தாலே சைவாகமம் ப்ரமாணமாகமாட்டாமையால், சைவம தம் அஸமஞ்ஜஸமென்று ஸ்ரீ சங்கராசாரியர் கண்டோக்தியாகச் சித்தாந்தம் செய்திருப்பதும் வெளியாகும். இப்படி ஸ்ரீசங்கராசா ரியர் சைவமதத்தை நிர்மூலமாக்கி, ஸ்ரீமந்நாராயணபரத்வாதி வை ஷ்ணவசித்தாந்தாதாரங்களையெல்லாம் ஸ்தாபித்திருக்குமதை யறியா தே, அவர் சைவம்வைஷ்ணவ மிரண்டையும் கண்டித்து விட்டா ரென்று குழறிவழிந்து சைவசமயத்தை நாட்டத்தேடுகிறது எப்படிப் பட்ட மூர்க்கத்தனம்.?

இதுநிற்க, ஆநந்தகிரியாரால் செய்யப்பட்ட புராதந சங்கரவிஜ யத்தில் (௬அ- ஆவது) ப்ரகரணத்தில் நிஸ்த்ரைகுண்யர்களான பரம ஸாத்விகர் விஷயத்தில் ஸகல மநுஷ்யமோக்ஷகரமான ஷட்வித வை ஷ்ணவசித்தாந்தத்தையும்,சங்கராசாரியர் ஸ்தாபித்தாரென்று சொ ல்லியிருப்பதை யெல்லாருமறிந்திருக்க, அவர் வைஷ்ணவ சித்தாந்த த்தைக் கண்டித்து விட்டாரென்பதை யாவர்நம்புவார்கள் ? இப்ப டிபொழுர், "న హ్యూవాచ వ్యాసః పారాశర్యః।" என்று வேதத்தில் ஸத்ய வாக்யராகக் கூறியது வ்யாஸரையே யல்லது சங்கராசாரியரை யல் லவாகையால் சிவமதத்துக்கொரு குறையுமில்லையென்று வந்தினர் "పత్యురసామంజస్యాత్।" என்று சைவமத மிளிம்பாகையாலே ஹே யமென்றுதொடங்கி, பலஸூத்திரங்களாலே சைவமதத்தைக் கண்டித் தவ்யாஸர் பின்பு, "పత్యుస్సామంజస్యాత్।"என்று ஒரெழுத்தாகிலும் தம்வாயாற்சொல்லிச் சைவமதத்தை நாட்டியதாகச் சைவபாஷ்யத் திலும் கற்பிக்கப்படாதிருக்க, இவ்வசடர்இப்படிப் பேய்க்கூத்தா டுகின்ற தென்ன பேய்த்தனம்?

இதுநிற்க, சங்கராசாரியர் சைவமதத்தைக் கண்டித்தது ஏகா ன்மவாதத்தைச் சாதிக்கவென்றால், ஸத்யவாக்யரான வ்யாஸர் "న ద్వైతం శైవాత్పరం।" என்றும், "పత్యురసామంజస్యాత్।" என்றும் கண்டித்தது எதுக்காக ? "శైవాః పాశుపతాః స్పృష్ట్వా స్నానం సచేలమాచరేత్।" என்று சைவர்களைத்தீண்டினு லுடுத்தவுடையோடேமுழுக க்கடவ னென்றுப்ரஹ்மாண்ட புராணத்திலும், சதுர்விம்சதிமதம்மு தலானவற்றிலும் சைவத்தை நிந்தியமாகச் சொல்லுவதெல்லாம் எந் தவாதத்தை ஸ்தாபிக்கைக்காக? அவையெல்லாம் வேதமதத்தை ஸ் தாபிக்கவெனில், சைவம் அவ்வேதவிருத்தமென்பதே நாட்டப்

பட்டதாகும். ஸ்ரீசங்கராசாரியர் "ఉత్పత్త్యసంభవాత్|" என்னும் அதிகரணத்தில், ஸ்ரீமந்நாராயண பரத்வமுதலான ஸ்ரீபாஞ்சராத்ரார்த்தங்களை யெல்லாம் ப்ராமாணிகமென்று அங்கீகரித்து, ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் மேலெழத்தோன்றுகிற ஜீவோத் பத்திவாதத்தைக்கண்டித்தது சரியானதென்றே வைஷ்ணவமதஸ்தர் கொண்டிருக்க, அதனை யறியாதிகழ்வதில்விவாதமில்லை. இதுவொழிய, அவ்வதிகரணத்தில் அவர் பாஞ்சராத்ரமெல்லாம் அப்ரமாணமென்று சொன்னமை கிடையாது. இங்ஙனமிருக்க நன்மதிவிளக்கத்தில் ஒன்றையொளித்தொன்றைச் சொல்லுமதுபெருவஞ்சமென்று இவ்வழுமூஞ்சியார்அழுததெல்லாம் அறியாமையென்க.

இதுநிற்க, இச்சர்வமூடர் சைவ பாஷ்யத்தை ஸ்ரீ பாஷ்யத்தோ டொப்பாக்க் கொண்டு நாக்குவளைக்கத்தேடினால், ஸ்ரீபாஷ்யத்திலே ஸூத்திரகாரர் பாஞ்சராத்ர சித்தாந்தத்தைக் கண்டித்தாரென்னுமதுவே பூர்வாசாரிய ஸம்ப்ரதாயமென்று செப்பியிருக்க வில்லை. ஸ்ரீ கண்டாசாரியர் செய்த சைவ பாஷ்யத்தில் "శివాగమైకదేశే శివస్యపరబ్రహ్మణః కేవలనిమిత్తత్వముపపాదితంతత్పరిహారార్థ మిదమధికరణమితి పూర్వాచార్యాణాం వ్యాఖ్యానంతు వేదశివాగమయోర్భేదన్న పశ్యామః వేదోపి శివాగమ ఇతివ్యవహారో యుక్తః.

என்றற்றொடக்கத்து வாக்யங்களில் சைவாகமங்களில் வேதாந்தவிருத்தமாகச் சிவனை யேபரப்ரஹ்மமாகக்கொண்டு, அந்தச் சிவனுக்கே கேவலநிமித்தகாரணத்வத்தைச் சொல்லுகையைப்பற்றிச்சைவாகமமெல்லாம் அவைதிகமாய் அப்ரமாணமுமாய்விட்டபடியாலே, அந்தச்சைவாகமத்தை விலக்குகைக்காகவே வ்யாஸரால் "పత్యురసామంజస్యాత్" என்னுமதி கரணமியற்றப்பட்டதென்றேஸூத்ரகாரர்தொடங்கி, ஸ்ரீகண்டசிவாசாரியரளவும் பாரம்பர்யமாய்ச் சைவமதபூர்வாசாரிய ஸம்ப்ரதாயவ் யாக்கியானம் வந்ததாகவும், ஸ்ரீகண்ட சிவாசாரியர்தாமே சைவமதத்தை ஸ்தாபிக்கையிலுள்ள ஆவலாலே மேற்சொன்ன சைவஸம்ப்ரதாயவ்யாக்யானத்தைத் தள்ளிவிட்டு, ஸ்வகபோலகல்பிதமாகநூதனசித்தாந்தம் செய்யத் தொடங்கி, வேதத்துக்கே சிவாகம மென்று பேரிடுகிறதாகவு மெழுதியிருக்கிறார். இப்படிப்பட்டசைவபாஷ்யத்தினுடைய தன்மையை அறியாதே, அதிவிததகஹந கம்பீரமாய்ப், போதாயன டங்கத்ரமிட குஹதேவ, ப்ரஹ்மநந்தி, ஸ்ரீவத்ஸாங்க, நாதயாமுநாதிஸம்ப்ரதாயாநுஸாரியான ஸ்ரீபாஷ்யத்தோ டொப்பாகச் சொல்வது ரத்நசரீஷ வைஷம்ய மறியமாட்டாதகுருட்டுத்தனமாமத்தனை.

இதுநிற்க, அநாதியாகவந்த சைவஸம்ப்ரதாயத்தைவிலக்கி, நானே, நூதனமாகச் சித்தாந்தம்பண்ணுகிறேனென்று வெளியாகச் சொல்லிக்கொண்டு, ஸ்ரீகண்டசிவாசாரியெழுதிவிட்ட சுவடியை இந்தச்சைவர் சைவ சித்தாந்த ஸ்தாபனமாகக் கொள்ளாநின்றுரோ இதென்ன அறியாமைத்தனம்? ஆவா, சீச்சீ இவரோடொத்த மூடர்நாட்டில் காணக்கிடையார். சைவமதத்தில் பூர்விகர்களைமூடமொன்றுஸ்தாபித்து, அவர்கட்கேசிஷ்யனுன ஸ்ரீகண்டசிவாசாரிசெய்த பிழைமொழித்திரட்டைச் சைவரெல்லாங் கூடிக்குலாவிக்கொண்டாடுகிறது உறவினர்தாய்க்குவ்யபிசாரதோஷத்தை ஸ்தாபித்துமகளைக்கொண்டாடுவதோடொக்குமல்லவா? சங்கராசாரியர் முதலானுரைவேதஞ்சொல்லாமையாலே அவர்கள் சைவாகமத்தைக் கண்டித்தாலும் அதற்குஉத்தரஞ் சொல்லவேண்டுவதில்லையெனத் தள்ளிப்போட்டஇவ்வசடர் சைவமதத்தின் பூர்விகர்களுடைய கொள்கையை விலக்கி, நூதனபாஷ்யம்செய்த ஸ்ரீ கண்டசிவாசாரியரைஎந்த வேதத்திலோதப்பட்டவராகக் கேட்டு, இவருடையவசனத்தையே வேதவாக்ய மாகநம்புகிறுரோதெரியாது. முற்காலத்தில் சைவாசாரியரெல்லாரும் சைவாக மத்தை வேதத்திலும் மிக்கதாகக் கொண்டுவேதத்துக் காகமவிரோதம் பழிப்பாமேயல்லது வேதவிரோதம்ஆகமத்துக்குப் பழிப்பாக மாட்டாதென்று உறுதிப் பாட்டையுடையராயிருந்தபடியால், வேதாந்தஸ் தாபனம்செய்யத் தொடங்கின வ்யாஸர் சைவாகமத்தைக் கண்டித்தாரென் பதிலோர் நாணமாதல் அச்சமாதல் இல்லாமலே உண்மையைவிளக்கிவந்தார்கள். நவீனசைவர்களுக்குச்சைவாகமத்திலுறுதிப்பாடு குலைந்தபடியால் வேதாந்தசூத்ரத்தில் ஆகமத்தைக் கண்டித்தாரென்பதில் நாணி' சைவாகமத்தையும் வேதத்தோடொருமைப்படுத்த வேண்டுமென்றுபார்த்து, சைவாகமத்தில் முக்காற்பங்கையும் வாமபாசு பதமென்று பேரிட்டுக் கழித்துவிட்டு, வேதத்துக்குச்சிவாகமமென்றும், ஆகமத்துக்குவேதமென்றும்பெயர்புனைந்து, பூர்விகர்களுடைய கொள்கைகளையும் விலக்கிச்சிலேட்டுமத்திலே விழுந்த ஈப்போலேகுழம்பிச்சித்தாந்தஞ்செய்கையாலேஇவர்களைமிகவும் விவேகிகளென்றேநினைக்கவேண்டும். இப்படி இவர்களிப்போது உபயப்ரஷ்டர்களாயிருந்தபோதிலும்பிற்காலத்தில் இவர்கள் இப்போது பற்றியிருக்கிற காற்பங்காகமத்தையுங் கைவிட்டு வைதிக சித்தாந்தத்திலே வந்து விடுவார்களென்று புத்திமான்களுக்குத் தோற்றப்படுமாகையால், இன்னுஞ்சிலகாலத்தில்சைவமதமெல்லாம் நிர்மூலமாய் விடுமென்றேநினைக்கிறோம். இப்போது

ஒன்றிலுஞ்சேராதே அற்பப்ரிபாஷிகளாய்ச் சாம்பற்பொதிசுமக்கும் சைவகரங்களில் தலையாய், பசுக்களிலும் இழிந்த பசுவான இம்மூடர் தம்முடைய குணத்தையெல்லாம் வைதிகரிடத்திலேறிட்டு வைஷ்ணவசித்தாந்திகளைப் பசுஞானிகளென்பதை அவையார்கேள்விப்படில் சூத்தாற்சிரிப்பார்களே. இம்மூட சூடாமணியானவர் ஸ்ரீகண்டசிவாசாரியர் வாக்கையே ப்ரமாணமாகக்கொண்டிருப்பதாகச் சொல்லுவதுமெய்யே? கொஞ்சிலுமுண்டாயிருக்குமாகில் தங்களுடைய பூர்விகர் கொள்கையி னுண்மையை யுள்ளபடி விளக்குகிற கீழ்வாக்யத்தை வெளிப்படுத்தாமல் ஒளித்து "వయన్తు వేదశివాగమయోర్భేదం న పశ్యామః" என்கிறமேல்வாக்கியத்தைமாத்திரம்சொல்லுவதென்ன பெருவஞ்சகம்? இதுநிற்கவேதத்தையே சிவாகமமென்று இவர் நம்பியிருக்கிறது மெய்யாகில் வேதமாகிற சிவாகமத்தில் "అంతర్బహిశ్చ తత్సర్వం వ్యాప్య నారాయణః స్థితః॥" என்றும் "ఏష సర్వభూతాంతరాత్మాపహతపాప్మా దివ్యో దేవ ఏకో నారాయణః" என்றும் "నారాయణాద్ బ్రహ్మా జాయతే నారాయణాద్రుద్రో జాయతే॥" என்றும் "తత్త్వం నారాయణః పరః" என்றும் பலவிடங்களிலும் நாராயணனே பரத்வமென்று காட்டியிருப்பதைக்கண்டு தம்முடைய சிவாகமத்தைத் தாமே சகியாமல் அதைக்கண்டிக்கத்தேடுவது என்னத்ரோஹத்தனம்? இப்படிப்பட்டவேதத்தைச் சிவாகமமென்று கொண்டவர் வைஷ்ணவமதத்தையே சைவமதமாகக் கொள்ளத்தடையென்ன? வைஷ்ணவர்கள் சைவாகம முழுமையும் ஒப்புக்கொள்ளாமல் வேதத்தைமாத்ரமொப்புக்கொள்ளுகையாலேசைவர்களாகமாட்டார்களெனில் சைவர்களிலும் வாமபாசுபதத்தைப்பற்றினவர்கள் தக்ஷிணபாசுபதத்தையும், தக்ஷிணபாசுபதத்தைப்பற்றினவர்கள் வாமபாசுபதத்தையும் விலக்குகையாலொருவரும் சைவாகமமுழுமையும் அங்கீகரியாமையாலே சைவர்களும் சைவர்களாகமாட்டார்களே. இதுநிற்க, சைவாகமத்தை வேதமென்றால் பரப்ரஹ்மத்துக்கு அபின்னநிமித்தோபாதாந காரணத்வத்தை வேதத்திற்சொல்லுவதுபோலச் சைவாகமத்திலும் சொன்னவிடமுண்டாகில் எடுத்து வெளியாகக் காட்டவேண்டும். அப்படியோ ரெழுத்தாகிலு முண்டென்பதைக் காட்டாமல் சைவாகமத்தை வேதமென்றுசத்தியம்பண்ணினால் இவ்வசடருடைய வசனத்தைவாய்க்குழறலை யாவர்நம்புவார்; மேலும் "శక్తిః ప్రథమసంభూతా శాన్త్యతీతపదోత్తరా తతో మాయా తతోऽవ్యక్తం శివాచ్ఛక్తిమతః ప్రభోః శాన్త్యతీతపదాజ్జజ్ఞే తతశ్శాన్తిపదాత్క్రమాత్" என்றும் "శక్త్యాదిచప్ర்ధి

వ్యంతంశివతత్వసముద్భవం । తేనైకేనతుతద్వ్యాప్తం మృదాకుంభాదికం యథా" என்றும், சக்தியையுடைய சிவன் நிமித்தகாரணமாகவும், சக்தியே காரணமாகவும், கலங்கிய மாயையாகியபிந்து விக்ருதிவிசேஷமான சாந்த்யதீததத்வமே யுபாதானகாரணமாகவும்சொல்லி, இப்படி சகலஜகத்துக்கும் உபாதானகாரணமாகிய சிவதத்வமென்னும் பேரையுடைய பிந்து விகாரமாகிய சாந்த்யதீதத்துக்கும், ஸகலகார்ய காரணமாகிய சக்திரூப கார்யத்துக்கும் உபாதானகாரணமேதென்னும் ஆகாங்க்ஷையிலே "చిదాత్మహిదేవేంతస్థితమిచ్ఛావశాద్బహిః। యోగీవనిరుపాదానమర్థజాతంప్రకాశయేత్" என்று பரமசிவன் தன்னிடத்திலே ப்ரளயகாலத்தில் மறைந்துகிடந்த வஸ்துக்களை முதலிலே வெளிப்படுத்தும்போது உபாதான காரணமே வேண்டுவதில்லை யாகையால் அவை நிருபாதானமாகவே யுண்டாக்கப்பட்டனவென்று சொல்லுகையாலும், கீழ்ச்சொன்ன வசனங்களில் "మృదాకుంభాదికంయథా" என்கிறவிடத்தில் பானைசட்டிகளெல்லாவற்றிற்கும் மண்போலே யுபாதானகாரணமாகச் சொல்லப்பட்ட சிவதத்வத்தினுடைய ஸ்வரூபத்தையும் "ప్రకృతిత్వాద్వ్యాప్యసంబంధః క్షోభ్యస్తేనాఖిలాత్మనా" என்றுதொடங்கி, "శివతత్వంతదేవ" என்னுமளவாலே அசேதநாத்மகமென்னுமிடத்தை வெளியாகச் சொல்லுகையாலும், த்ரிவித காரணங்களையும் ஒன்றிலொன்று வேறுபட்டனவாகச் சைவாகமங்களெல்லாம் முறையிடாநிற்க, அதில் ஸகல ஜகதேககாரணத்வம் வேதத்தோடொக்கச் சொல்லப்படுகிற தென்பது பெருவஞ்சகமாமாகையாலே கிழக்கேயுதிக்கிற சூரியன் மேற்கேயுதயமானாலும் சைவாகமம் வைதிகமாகமாட்டா. சைவாகமங்களில் சிலவிடங்களிலே இப்படி காரணபேதத்தைச் சொன்னபோதிலும் இதுகொண்டுசைவாகம முழுமையும் அவைதிக மென்னலாமோவென்னில், ஒருபானைச்சோற்றுக்கோரவிழே பதமாகிறாப்போலே சிலவிடங்களிற் காணப்பட்டவேதவிரோதமே சைவாகமகர்த்தாவினுடைய ப்ரமவிப்ரலம்ப ப்ரமாதாதி தோஷங்களுக்கெல்லாம்ஸாதகமாகையாலே சைவாகமமுழுமையும் அப்ரமாணமென்னத் தட்டில்லை. அல்லாதபோதுபௌத்தமதத்திலும் லோகாயதிகமதத்திலும் சிற்சிலவிடங்களே வேதநிந்தாதிகளைப் பண்ணாநிற்க அதுகொண்டு முழுமையுந் தள்ளக் கூடாரவல்லவா?

வேதவாக்யத்தைக் காதாற்கேட்கவும் பாக்யமில்லாத இக்கர்ம சண்டாளர் வேதத்தி னுண்மையெல்லாம் கையிலங்கு நெல்லிக்

கனியாகப் பெற்றவனைப்போலே வேதமெல்லாம் சிவாகம மெ
ன்பதைத் தம் பொய்ம்மொழியால் விளக்கத்தொடங்கினர். சிவா
கமங்களில் சிவதர்மிணீ தீக்ஷைபெற்ற வீரசைவனுக்குச் சைவ
தர்மமொன்றே கர்த்தவ்யமென்றும், வைதிக தர்மமெல்லாம் பரி
த்யாஜ்யமென்றும், ஸமயாசாரத்தை விதித்து, பின்பு இந்தச்சமயத்
தை மீறிநடந்தவன் பிசாசாய்ப்பிறப்பானென்றும் சொல்லுகிற இட
ங்களில் வேதத்தை ஆகமத்தில் வேறுபட்டதான லௌகிக மென்
றும், ப்ராஹ்மமென்றும் நிந்தித்துச்சொல்லுகிற சிவாகம வசனங்க
ளுக்கெல்லாம் இம்மூட மதியார் என்னசித்தாந்தம் செய்யப்போ
கிறரோ? "స్వశాస్త్రోక్తంపరికర్తవ్యం । పరశాస్త్రన్న కారయేత్ సం
గ్రాహ్యంవైదికంశైశ్చైచ్చైవకర్మానిరోధియత్ విరుద్ధంచేత్పరిత్యాజ్యంనతు
శైవంపరిత్యజేత్ ఇతరోవీతరాగాత్మాలౌకికార్థ పరాఙ్ముఖః । కుర్యాద్బ్రా
హ్మంనవాకుర్యాచ్ఛైవమేవనియోగతః । శైవీతునియమేనైవ సేవ్యాపతనమన్య
థా । సమయాచారలోపేనయాంతిశైవాఃపిశాచతాం" என்று சைவாகம
ங்கள் வேதத்தைச் சைவாகமத்தைக் காட்டில் வேறுபட்ட லௌகி
க ப்ரஹ்மாகமமாகச் சொல்லுகின்றனவல்லவா?

இதுமட்டோ, ஆகம மார்க்கங்களுக்கு ப்ரபல விரோதிகளான
அத்வைதிகளைப் பஸ்மதாரணுதி பாஹ்யவேஷமாத்ரத்தாலே சைவர்க
ளாகக்கொண்டு இருகண்ணையும்சும்புளித்துத் தவஞ்செய்கிற பூனை
யைநம்பின எலியைப்போல இச்சைவர்கள் அவர்களையே சைவசித்
தாந்த ஸ்தாபகர்களாக நம்பி, அவர்களிடத்தில் ஆகமத்தைப் படி
த்துவந்தபடியால் அவர்களுடைய வஞ்சகத்தில் பழுத்த ஸ்ரீகண்ட
சிவாசார்யர் சைவக் குடிமரத்துக்கெல்லாம் கோடாலிக்காம்பாகப்பு
குந்துசைவாகமங்களி னுட்பமும் பெருமையு மறியாதேபிதற்றுகிற
பிழைமொழித்திரட்டையே இவ்வசடரும் ப்ரமாணமாக நம்பிவிட்
டார். சிவாகமங்களில் தீவ்ரதீவ்ரதராதிசக்தி நிபாதங்களாலே சிவ
தர்மிணீமுதலான தீக்ஷை பெற்றவர்களுக்கு, "దీక్షాప్రవేశ మాత్రేణ
బ్రాహ్మణోభవతిక్షణాత్" என்றும், "కాపాలంవ్రతమాస్థాయ యతిర్భ
వతిమానవః" என்றும், அப்போதே ப்ராஹ்மண்யமுண்டாய்விடுமென்
றும், அப்போதே அவன் ஸந்யாசியாய்விடுமென்றும், அப்போதே
மலமாயைகள் தொடக்கமானபாசமெல்லாமகன்று பசுத்வமும் நீங்
கி முக்தரோடு சமானமாய்விடுவானென்றும் பரமசிவன் முறையி
டாநிற்க, அதின்பெருமை யறியாதே, ஸ்ரீகண்ட சிவாசாரியென்பவர்

அபசூத்ராதி காணத்துக்கு பாஷ்யஞ் செய்யும்போது "శూద్రాః బ్రహ్మవిద్యాయా మనధికారిణఏవ" என்று சூத்ரர்களொருக்காலும் ப்ரஹ்மவித்யைக் கதிகாரிக ளாகார்களென்று சித்தாந்தம் செய்துவிட்டபடியையும், "సంస్కారపరామర్శాత్" என்கிற ஸூத்ரத்தில் "చతుర్థఏవర్ణఏకజాతిః" என்று தொடங்கி, சூத்ரனுக்கு மாத்ருயோனி ஜன்மமொன்றொழிய விரண்டாஞ்ஜன்மங் கிடையாமையாலே ஒருவகைப்பட்ட ஸம்ஸ்காரங்களுக்கும் சூத்ரனுரியனல்லனென்று சித்தாந்தம் செய்தபடியையும், சிவாகமங்களில் சிவனுக்கு வாஸஸ்தானமாகிய ருத்ரபூமியை அத்யந்தபாவநமாகச்சொல்லாநிற்க, அதுக்கெதிர்த்தட்டாக "అనుజ్ఞాపరిహారౌ దేహసంబంధాజ్జ్యోతిరాదివత్" என்கிற சூத்ரத்தினுடைய பாஷ்யத்தில் ப்ராஹ்மணஜாதியையொழிந்த ஜாதியெல்லாம் ஶ்மஶாநாக்நியோ டொக்க அஶுசியாயிருக்குமென்று சித்தாந்தம் செய்துவிட்டபடியையும், வர்ணாபிமானமில்லாதா னொருமஹாநுபாவன் சைவாகமக்கண்ணாலே நோக்கி யிருப்பனாகில் அப்போதே யந்த ஸ்ரீகண்டாசார்யர்செய்த சைவமதபாஷ்யத்தின் பெருவஞ்சகத்தையெல்லா மறிந்து கிழித்து நெருப்பி லிட்டுப் பேய்க்கூத்தாடுகிற விம்மதிக்கேட்டையும் நல்வழிநடத்தச் செய்வதற்குச்சந்தேகமிராது. ஸ்ரீபாஷ்யகாரர் ஆழ்வாருடைய சிஷ்யராய் அபிமாநமற்றிருந்தபடியாலே திருக்கச்சி நம்பிமுதலானோ யநுவர்த்தித்து த்ராவிடாகமசித்தாந்தமாகிய ப்ரபத்தியே பரமார்த்தமென்பதை யவருபதேசிக்கக் கேட்டருளி, அப்படிப்பட்ட ப்ரபத்திவித்யை பரமதகண்டனமான பாஷ்யத்தில், "న్యాసవిద్యాయాం" இத்யாதி சூத்ரத்தில் ஸங்க்ரஹமாகக்காட்டி, கத்யத்ரயத்தில் விஸ்தரித்துக்காட்டி, த்ராவிடவேதாந்தத்தில் சுருக்கமற ப்ரவசனம்செய்து வர்ணாபிமானமற்று, பிள்ளை யுறங்காவில்லிதாசர்முதலானோர்விஷயத்தில் பாகவதர்களுடைய பாவநதையெல்லாம் வெளியிட்டு, ஆழ்வார்களுடைய திவ்ய சூக்திகளைப் பரமவேதங்களாக ப்ராஹ்மண ஶ்ரேஷ்டர்களெல்லா மோதும்படியாகவும், எம்பெருமான்களுக்குமுன்னே யியலாக ஸேவிக்கும்படியாகவும், திவ்யாஜ்ஞையிட்டருளியும்; ஸ்ரீ பாஞ்சராத்ரத்தை வேதத்திற்காட்டில் வீறுடையதாகக்கொண்டு ஸர்வாம்ஶத்திலும் ப்ரமாணமாக நிலைபெறுத்தி வைஷ்ணவசித்தாந்தத்தைவாழ்வித் தருளினர். சைவபாஷ்யகாரர் வர்ணாபிமாநியாய்க் கோமுக வ்யாக்ரமமாய், ப்ரச்சன்னாத்வைதியாயிருக்கையாலே, வேதத்தில் யாகாதிகளில் மாம்ஸமத்யாதிகளை விதிக்கிற வாக்யங்களை மா

த்திரம் ஒன்றொழியாதே ப்ரமாணமாகக்கொண்டு, சைவாகமங்களில் மத்யாதிகளை விதிக்கு மிடங்களெல்லாம் வேதவிருத்த மாகையாலே சிவன்சொன்னவேயாகிலும், அப்ரமாணமாகக் கடவனவென்று நெஞ்சிலே யீவிரக்கமில்லாமல் தள்ளிவிட்டு, தீக்ஷாவைபவங்களையெல்லா மடியறுத்து, ப்ராஹ்மணஜாதிவர்ணத்தையே பலப்படுத்தி, வேதமே சிவாகமம். மற்றொருசிவாகமங்கிடையாதென்று முதல்மோசத்துக்கும் அடியிட்டு, சைவாகமத்தின் பெருமையையெல்லாம் மூலதோஹாநி செய்துவிட்டார். இவரைவிட வேறொருவைஷ்ணவசித்தாந்தியை இந்தச்சைவாகமத்துக்குச் சித்தாந்தம்செய்யும்படிகோரிக்கொண்டபோதிலும் சைவாகமத்துக் கிவ்வளவுகேடு நேரிடாது. ஸ்ரீவைஷ்ணவசித்தாந்தியும் ஒரு ஆகமத்துக்குக் கடவனாயிருக்கையாலே, அவன்நெஞ்சிலே யீவிரக்கமில்லாமல் ஆகமத்தின்மகிமையைக் கெடுத்துவிடமாட்டானல்லவா ? வேதத்துக்குங்கூடச் சிவவாக்கியமென்னுமத்தாலே ப்ராமாண்யமென்று சைவாகமஸ்தர்கொள்கையாயிருக்க, வேதத்துக்கு விருத்தமென்று சிவவாக்யங்களைத் தள்ளிவிடுகையும், மிடற்றைப் பிடித்தாற்போலப் பொருள்மாறாட்டம்பண்ணுகையும், ஆகமத்தின்முறைக்கேலாதல்லவா? மத்யமாம்ஸாதிகளைச் சொல்லுகின்றனவென்றே சிவவாக்கியங்களைத் தள்ளிவிடவேண்டுமென்பது ஸ்ரீகண்டன்முதலான சைவாப்பஸர்களுக்கு வஞ்சனையின்றிக்கே மெய்யாயிருக்குமாகில் பசுஹிம்ஸாதிகளோடேகூடிய யாகத்தை முறையிடுகிற வேதங்களையும் வாமபாசுபதத்தோடொக்கத் தள்ளிவிட்டிருப்பர்க ளல்லவா ? வேதத்தில்மாத்ர மெவ்வளவு ஹேயங்களைவிதித்தாலும் அது ப்ரமாணந்தானென்றுகொண்டு, சைவாகமங்களை மாத்ர மேதேனு மொரு கண்ணழிவு சொல்லித் தள்ளிவிடுகிறவர்க ளெப்படி சைவசித்தாந்த த்ரோஹிகளாகாமல்போவார்கள் ? ஆகையால் ஒருவன் சைவாகம சித்தாந்தியென்பது மெய்யாகில், அவன் சிவாகமத்தோடு வேதம் விரோதிக்குமாகில் வேதத்தையே தள்ளிவிடுவானே யல்லது சிவவாக்யத்தைத் தள்ளிவிடமாட்டானல்லவா ? இவற்றையெல்லாம்நோக்குகையில் இப்போது சைவமதம் கெட்டதுபோல மற்றொருமதமும் கெட்டில்லை. அந்தோ சைவமெல்லாம் அப்ரமாணமென்பதற்குச் சைவர்களுடைய மதிமயக்கமே எமக்கும் சாக்ஷியாய்விட்டதே. இதுகிடக்க், இவ்வசடரெல்லாந் தெரிந்தவரைப்போலே "ప్రాణావంతో హైపశవః । ద్విపాదశ్చచతుష్పాదశ్చ" என்கிற ஶ்ருதிவாக்யத்தில், சைவாகமத்தோடொக்க ஸகலசேதனர்களையும் பசுக்களாகச் சொல்லுகி

றதென்றார், இந்தவாக்யத்துக்கடுத்த கீழ்வாக்யத்திலே "అపశవోవా అన్యేగోఅశ్వేభ్యః" என்று மாட்டையுங் குதிரையையுமொழிந்த மற்றவையெல்லாம் பசுக்களேயல்லவென்று சொல்லுமதை யறியாமல், இவ்வாக்யத்தில் சேதநர்களெல்லாம் பசுக்களென்று சொல்லுகிறதாகப் பச்சைப் பசும்பொய்யைச் சித்தாந்தமென்று வெளியிட்டால் இனி யுலகத்தார் சைவர்பேச்சை எவ்வாறு நம்புவர்?

இவரெழுதின வாக்யத்திலும் இருகாற்சீவனும் நாற்காற்சீவனுமேபசுவாவனவென்று சொல்லியிருக்க, எல்லாச்சீவர்களும் பசுவென்று சிவாகமத்திற்சொன்னபடியே இதிற்சொல்லுகிறதாகப் பொருளுரைப்பதென்னமடமை? பாம்பு புழுமுதலானகாலில்லாச்சீவன்களும், வண்டுமுதலான ஆறுகாற் சீவன்களும், சிலந்திமுதலான எண்காற்சீவன்களும், செய்யான்முதலான பலகாற்சீவன்களும், விஜ்ஞாநகலம் ப்ரளயாகலம்முதலான பேருடலில்லாச் சீவன்களுமாகியவிவையெல்லாவற்றிற்கும் பசுத்வமுள்ளதாகச் சிவாகமங்களிற் சொல்லுகையாலே, அதற்கிப்பேதை யுதஹரித்த ஶ்ருதிவாக்யமே நேர்கோடு நேர்மாறாய்விட்டதென்க. இவர் பூர்வ சைவமார்க்கத்தை விட்டு நவீனமான கொள்கையை நம்பி வழியல்லாவழியிலே இழிந்தபடியாலே இப்பேதையின்வாக்யமே இப்பேதைக்குக் கண்டனமாய்விட்டது. இம்முழுப்பேதை எழுதின வேதவாக்யத்தின் பொருளையுள்ளபடியாராய்ந்தால், பூர்வ மீமாம்ஸையில் ப்ரஶம்ஸாதிகரணசித்தாந்தத்தாலே இது ப்சுஶப்தம் யாகங்களுக் குபயுக்தமான நரபசுவையும் ஆடுமுதலான நாற்காற் பசுவையுமே காட்டுகிறதென்பதே பெறப்படும். இப்படியே இப்பேதை "తస్మాద్రుద్రః పశూనామధిపశూనామధిపతిః" என்கிற வாக்யத்தில் சைவாகமத்திற் சொன்னபடியே பரசிவனுக்கு ஸகலசேதநேஶ்வரத்வமாகிற பசுபதித்வத்தைச் சொல்லுகிறதென்றார், அவ்வாக்யத்துக்குக் கீழேதொடங்கி "తేషాం స మస్కృత్య। అగ్నిమనీకం। సోమంశల్యం। విష్ణుంతేజనం। తేబ్రువన్ కఇమా మసిష్యతీతి। రుద్రఇత్యబ్రువన్। రుద్రోవైక్రూరః। సోస్యత్వితి। సోబ్రవీత్। వరంవృణై కహమేవపశూనామధిపతిరసానీతి। తస్మాద్రుద్రఃపశూనామధిపతిః" என்று தேவதைக ளெல்லாரும் த்ரிபுரஜயார்த்தமாக உபஸத்யாகத்தாலே எம்பெருமானை யாராதித்து; தத்ப்ரஸாதத்தாலே விஷ்ணுஶக்த்யுப ப்ரஹ்மிதமானதொரு பாணத்தை யமைத்து, இதை த்ரிபுரத்தின்மேலே யிடிவிழுந்தாற்போல நெஞ்சிரக்கமற்று ப்ரயோகிக்கவல்லார் தேவப்ரக்ருதிகளி லாரொன்று தேடுகிறவளவில், ருத்ர

ஞனவன் பரஹிம்ஸைக்கே யிட்டுப்பிறந்து நெஞ்சிரக்கமில்லாத க்ரூரனுயிருக்கிறபடியைக்கண்டு, கழுவுக்கேற்றவன் கோமுட்டி யென்னுமாபோலேயும், மடம் மெழுகுவான் அப்ரோத்திரிய னென்னுமாபோலேயும், ருத்ரனே யிந்த்ரப்பாணத்தை த்ரிபுரத்தின்மேலே ப்ரயோகிக்கக்கடவனென்று ருத்ரனைத் தேவர்க ளாஜ்ஞாபித்தவளவிலே, ருத்ரனும் தேவதைகளைப்பார்த்து நீங்க ளெனக்கொரு வரங்கொடுத்தால் நீங்கள் நியமித்தபடி செய்கிறேனென்று கூலியாக வொருவரங்கேட்க, அந்தவரந்தானிருக்கும்படி யென்னென்றவளவிலே, உலகத்தில் ஸம்ஹாரங்களுக்கெல்லா மென்னையேகடவனுக்கிவைத்திருக்க, வைதிகமான ஹிம்ஸைகளில்மாத்ர மென்னையொழியப் பசுஹிம்ஸைபண்ணுகின்றுர்களாகையால், அதுவெனக்கு மிகவும் மானக்குறையா யிராநின்றது, ஆகையால் வைதிகங்களில் கொல்லத்தக்க பசுக்களுக்கும் நானே நிர்வாஹகனுகவேண்டுமென்றுகேட்டுக்கொள்ள, அந்தத்தேவர்கள் அப்படியேயாகக்கடவாயென்று வரங்கொடுக்கையாலே, ருத்ரனே யாகங்களில் கொல்லப்படும் பசுக்களுக்கும் யஜமானனுய்விட்டானென்று வேதத்தில் பரக்கச் சொல்லாநிற்க, இதையறியாதே, இவ்வாக்யத்தை ருத்ரனுடைய பூரத்வத்துக்கு ஸாதகமாக இம்மூடாக்கிரோஸர் பிதற்றுவதென்ன பேய்த்தனம்? இவரிவ்வாக்யத்தில் சைவாகமத்திற் சொல்லுகிற பசுபதித்வத்தையே சொல்லுகிறதாகவெளிப்படுத்தினமையால், சைவாகமங்களும் பாழாய்விட்டன. சைவாகமத்திற்சொல்லுகிற பசுபதித்வமுமிவ்வாறு தேவதைகளுடைய வரப்ரஸாதத்தாலே சிவனுல்பெறப்பட்டதென்றே யிவருடைய வசனத்தால் நாட்டப்பட்டதல்லவா? இப்படியே "[illegible]" என்கிற ஶ்ருதியை, சைவாகமத்தில் மலமாயா கர்மங்களிற் பண்ணுகிற பாஶபந்த வ்யவஹாரத்துக்கு ஸமாநார்த்தமென் றுதஹரித்தார். இதிலும் கீழ்வாக்யத்தில் "[illegible]" என்று க்ஷரஸ்வரூபங்களான அசேதநங்களில், ப்ரதானமான ப்ரக்ருதிக்கும், அக்ஷரஸ்வரூபங்களான பத்தசேதந வஸ்துக்களில் ப்ரதானனுகிய ஹரஶப்தவாச்யனை சிவனுக்கும், நியாமகனுகிறுன் "[illegible]" என்று ஏகதேவனுக அந்தர்யாமி ப்ராஹ்மணுதிகளில் முறையிடப்பட்ட ஸ்ரீமந்நாராயணனென்று சொல்லுகையாலே, அதுக்குச்சேர இவ்வாக்யத்தில்சொல்லுகிற பாசமாவது ஸ்ரீமந்நாராயணனலே விடுவிக்

கப்படும் ஸம்ஸாரபாசமேயல்லது சைவாகமத்திற் சொல்லுகிற ஸாங்கேதிகபாச மென்னக்கூடாது.

இப்படியே யிவருதஹரித்த "జ్ఞాననిమర్దనాభ్యాం సాంసారిక హతిసంశితః" என்கிற வாக்யத்திலும், கீழே "ఆత్మాన మరణింకృత్వా" இத்யாதியாலே பக்தி யோகத்தைச் சொல்லுகையாலே, அத்தாலே தஹிக்கப்படுகிற பாசமாவது ஸம்ஸாரபாரமே யாகவேண்டுகையாலே, வேதாந்த ப்ரஸித்யநுகுணமாகப் பாரபப்தம் கௌணவ்ருத்தியாலே பந்தகமான ஸம்ஸாரவிஷ யமாகவேண்டி யிருக்க, அதைவிட்டு, தாந்த்ரிகா ப்ரசித்த ஸங்கேதத்தை யாரயிக்கை யதிஹேயமாகையாலு மிப்பேதை பிதற்றியதெல்லாம் பாழாய்விட்டதென்க. சைவாகமத்திற் சொல்லப்பட்ட பாசங்கள். தீக்ஷாகாலத்திலே தீக்ஷாகுருவைப்பற்றி நிற்கின்ற பரமசிவனுடைய குண்டமண்டல பூர்விகையாகிய ஹௌத்ரீ ரக்தியாலே தஹிக்கப் படுகின்றனவென்று சிவாகமங்களிற் சொல்லியிருக்க, இவ்விடத்தில் த்யாநயோகத்தால் தஹிக்கப்படுகிறதாகச் சொல்லும்பாரத்தைச் சைவாகம ஸாங்கேதிகபாரமென்றால், ப்ரமென்பது தீக்ஷையால் கழியுண்ணமாட்டாதென்று சைவ மதத்தின் முகத்தின்மேலே யடித்தாற்போலே சித்தாந்தம் பண்ணப்பட்டதாமல்லவா?

இப்பேயர் சைவமதத்திற் பிறந்திருந்தும் சைவமதத்துக்கெல்லாம்நிறக்கேடாக விப்படி தப்புந்தாறுமாகப் பிதற்றுவதெல்லாம் புத்திபூர்வகமல்ல. இவர் ஸ்வயம் ஜ்ஞானசூன்யராகிவிட்டு மற்றையாரோவொரு வஞ்சகனை நம்பிச் சைவாகமத்தை நீ ஸ்தாபனம்செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவன் வஞ்சனையாகவே சைவாகமத்தை ஸ்தாபிப்பதுபோலக் கண்டன மெழுதிக் கொடுத்ததைநம்பி அச்சிட்டு ப்ரசுரஞ் செய்துவிட்டார். அத்தாலே யிப்படி சைவமதம் ஊர்கூடிச் சிரிக்கும்படியாய்விட்டது. பாரம்போகைக்கு ஜ்ஞாநநிர்மதனப்யாஸமே வேண்டுமென்று ச்ருதிசொல்லுவதாகவும், அந்த ச்ருதியே சைவாகமமென்று மிவரொப்புக்கொண்டபடியாலே "ఆచార్యమూర్తిమాస్థాయ చతుర్థాంశశక్తిపాతతః । భగవాననుగృహ్ణాతి నివనకలానపి । యోగురుస్సశివః ప్రోక్తో యశ్శివ స్సగురుస్స్మృతః" என்றுதொடங்கி "శక్తిర్జ్ఞానశక్తిస్సా దయాపాశాభినత్త్యసౌ । సాకలాపరమాసూక్ష్మ తంత్రాణాంచోద్దీపకా" என்று, தீக்ஷாகாலிக சிவரூப குருரக்தியே பார நிவர்த்தகமென்கிற சைவாகமத்தின் ஜீவகலையேபோய்விட்டது. இந்தக்குருரக்தி

வைபவம் வைஷ்ணவ சித்தாந்தத்தில் சரமபர்வ காஷ்டையாகவும் த்யானயோகமாவது ப்ரதமபர்வத்தின் முதலடியாகவும் வழங்குகை யர்லே, இந்தச் சைவசிகாமணியைப்போலே வைஷ்ணவ மதத்தி ல்புகுந்து வஞ்சனையாக வொருவன் சரமபர்வ காஷ்டைக்கு நிறக் கேடாம்படி ப்ரதமபர்வத்தையே கொண்டாடுவானாகில் அவன்முக த்திலே யொன்றுமறியாத பேதைப்பாலகனும் தூ தூவென்று காறி யுமிழ்ந்து சாணியைப்பூசிவிடும். சைவமதஸ்தர்கள் பசுக்களென்ப தைத் தாங்களே யொப்புக்கொள்ளுகையாலே "పశూనాం భుక్తిము క్త్యర్థం మూ ప్తః పశుపతిశ్శివః। యదా ప్తవాక్యమకరోదా ప్తనాక్యం తదాగమః"

என்று சைவமதத்துக்கு ப்ரமாணதமமான சிவவாச்யம் பலகோடி நூறாயிரங்க்ரந்தங் கிடக்கச்செய்தே, அதையெல்லாம்விட்டு ஸ்ரீகண் டசிவாசார்யனென்பதொரு பூனையின்பேச்சையே நம்பி, சிவாகம த்துக் கெதிர்த்தட்டாய் லோகதர்மிணீ விஷயமாய், பசுத்ருஷ்டிகளுக் கே யுபாதேயமாய்க் கல்பாதியிலே ப்ரஹ்மாவாலே சொல்லப்பட் டதாகையாலே ப்ராஹ்மியென்று பேர்பெற்றதாய், சைவாகம சித் தர்களாலே சாமான்யமென்று சுழிக்கப்பட்டுள்ள வேதத்தையே சிவாகமமாகக்கொண்டு, அதுக்கு விரோதமென்று சிவாகமங்களை யெல்லாம் முக்காலேமூன்றுவீசம் பாகத்தையும் கைவிட்டு, தீக்ஷை யினுடைய வைபவத்தையுங்குலைத்து, இவ்வளவு செய்ததுவும் சை வசித்தாந்தத்துக்கு ஸ்தாபனம் செய்ததாகவே யபிமானித் திறு மாந்திருக்கும்படியாய்விட்டது. சைவாகமமும் ஸ்ரீ பாஞ்சராத்ரமு மொன்றிலொன்று மாறுபட்டதா யிருந்தபோதிலும், கர்ஷணாதி ப்ர திஷ்டாந்தங்களான பலவிஷயங்களி லொருமைப்பட்டிருக்கையா லே, இவ்வெள்ளறிவர் தம்மதிப்பையெல்லா மழித்துக்கொள்வதை ப்பார்த்தா லெனக்கே ஐயோவென்று மனமுருகி விசனமுண்டா காநின்றதே. இதுநிற்க, மேலே "సద్యోజాతం ప్రపద్యామి" இத்யாதி ஶ்ருதியைப் பஞ்சசிவமூர்த்தி ப்ரதிபாதகமென்றுசொல்லி யழுதார் இவ்வாக்யம் தைத்திரியோபநிஷத்தில் ஸ்ரீமந்நாராயணமென்று ஸ மாக்யையையுடைய ப்ரகரணத்தி லோதப்பட்டதென்று சிறுகுழவி கட்டும் நன்றாகத்தெரியும். இவ்வாக்யத்தை பஞ்சருத்ரமூர்த்தி பர மென்றாலும், பஞ்சருத்ரமூர்த்திகளும் ஸ்ரீமந்நாராயண விபூதிகளென் னுமிடம் மஹாப்ரகரண பலத்தாலும் ஸமாக்யா பலத்தாலும் நாட்ட ப்பட்டதா மல்லவா? இதுநிற்க, ஸ்காந்தபுராணத்தில் நிர்வாணகண் டத்தில், ஸ்ரீராமகீதையில், "ప్రవృత్తిశ్చ ప్రతిష్ఠా చ విద్యాశ్శాంతి స్తథో త్త

మా । శాంత్యతీతా పరా సూక్ష్మా సమనా చోన్మనా తథా । సీతా విలసితం సర్వం నానాకారేణ దృశ్యతే । తథానుగ్రహశక్త్యైవ తస్యా దైక్యమభిలభ్యతే । సద్యోజాతః ప్రవృత్తేస్త్వమిశిష్టే క్షేత్రరక్షకః । నామదేవః ప్రతిష్ఠాయా వాసనాతను మాశ్రితః । విద్యానామప్యఘోరస్త్వం తేజసాం నిధిరక్షయః । ప్రాంశుస్తత్పురుషశ్శాంతే స్తనూనాం యంత్రవాహకః । ఈశానశ్శాంత్యతీతాయా వ్యాపకో వ్యోమవిగ్రహః । విష్ణుశ్చ సమనాయాస్త్వమున్మనాయా నిరంజనః" என்று, ப்ரவ்ருத்தியென்றும், ப்ரதிஷ்டையென்றும், வித்யையென்றும், சாந்தியென்றும், சாந்த்யதீதையென்றும், சமனையென்றும், உந்மனையென்றும், ஜநககுலநந்தினியான பிராட்டியினுடைய விபூதிவிலாசங்களைச்சொல்லி, அவ்விபூத்யநுக்ராஹகரான பெருமாளுக்குத் தத்த தவஸ்தாநுகுணமாக ஸத்யோஜாதரென்றும், வாமதேவரென்றும், அகோரரென்றும், புருஷரென்றும், ஈசானரென்றும், விஷ்ணுவென்றும், நிரஞ்சனரென்றும் அடைவே யேழு திருநாமங்களையுடைய வேழு திவ்யரூபங்களைச்சொல்லி, இந்த ஸத்யோஜாத மித்யாதியான பஞ்ச ப்ரஹ்மாநுவாகத்தை "భవాన్నారాయణో దేవః" என்று ஸ்ரீமந்நாராயணரூபியான சக்ரவர்த்தித் திருமகன்விஷயமாக உபப்ரஹ்மணம்பண்ணி யிருக்கையாலும், இதில் சரமமான "ఈశానస్సర్వవిద్యానాం" இத்யாதிமந்த்ரத்தை ஸ்ரீமந்ருஸிம்ஹதாபநீயோபநிஷத்திலே அழகிய சிங்கர்விஷயமாக ஓதுகையாலும், இங்கு "తత్పురుషాయ విద్మహే" இத்யாதிமந்திரமும் கீழே விஷ்ணுகாயத்ரீ ஸாஹசர்யாதிகளாலே ஸ்ரீமந்நாராயணாத்மக புருஷபரமென்னுமிடமும் நிச்சிதமாகையாலும், ஸோபப்ரஹ்மண ஸ்ருத்யர்யாநுக்ரஹித ஸ்ருதிஸ்வரஸ்யங்களாலே ஸத்யோஜாதாதி மந்திரங்களெல்லாம் ஸ்ரீமந்நாராயணைக பரமாக நாட்டப்பட்டிருக்கின்றமை யறியாதே, ருத்ரன் மோஹநார்த்தமாகப் பண்ணின சைவாகமத்தில் ஆஸுர ப்ரக்ருதி மோஹநார்த்தமாகக்கொண்ட தன்னுடைய ரூபங்களுக் கெம்பெருமானுடைய திருநாமங்களில் சிலவற்றை யிட்டுக்கொண்டு பௌண்ட்ரக வாசுதேவனைப்போலே கபடநாடகமாடினதைக்கண்டு மோஹித்துச் சைவராகிற அம்மணக் கூத்தெல்லாம் பாழாய்ப் பறந்துவிட்டது.

ஸ்ரீராமகீதையில், பிராட்டியினுடைய விபூதிகளில் ப்ரவ்ருத்தி யென்பது ஸ்ருஷ்டயவஸ்தையை. ப்ரதிஷ்டை யென்பது ஸ்தித்யவஸ்தையை. வித்யையென்பது ப்ரஹ்மவித்யைகளை. ஶாந்தி

யென்பது ப்ரஸித்தத்தை. ஸாந்த்யகீதையென்பது கூர்வேற்கொடுந் தொழிலீராய் அடியோமென்று ஸ்வமங்களாஸாஸந பராகையை. ஸம்ஸையென்கிறது வைகுந்தத்தமர ரொன்னலா யிருக்கையை. உந் மஸையென்பது வைகுந்தத்து முனிவரொன்னலா யிருக்கும்படியை. இவற்றில் ஸ்ருஷ்டிதான் ஜகத்ஸ்ருஷ்டி ரூபமாகவும், முமுக்ஷு ஸ்ருஷ்டி ரூபமாகவு மிரண்டுபடியாயிருக்கும். இவ் விருவகையான ஸ்ருஷ்டிக்கும் நிர்வாஹகஞன வெம்பெருமானை ஸத்யோஜாதனென்னல் ஸ்ருஷ்டியை ஸங்கல்பித்தபோதே ஜநித்து நினைத்தபடி தலைக்கட்டுகையாலே யாகக்கடவது.

இங்கு ஜகத் ஸ்ருஷ்டயர்த்தமான ஜந்மமாவது "బహుస్యాం" என்று ஸங்கல்பித்தபடியே ஜநிக்கை. முமுக்ஷு ஸ்ருஷ்டயர்த்தமான ஜந்மமாவது "బహుధా విజాయతే" என்கிறபடியே யெதிர்சூழல் புக்குத் திருவவதரிக்கை. இப்படி யிரண்டுவகையான வெம்பெருமானுடைய ஜன்மவிசேஷங்களிலே யீடுபட்டுச் சொல்லும் பாசுரமாயது "సద్యోజాతం ప్రపద్యామి సద్యోజాతాయ వై నమః" என்கிற ப்ரதமாநுவாகம். இதில் பூர்வகண்டம் த்வயத்தில் பூர்வகண்டார்த்தத்தையும், உத்தரகண்டம் உத்தரகண்டார்த்தத்தையும் பிரதிபாதிக்கின்றன. மேல் "భవే భవే నాతిభవే భజస్వమాం భవోద్భవాయ నమః" என்கிற இரண்டாமநுவாகம் முமுக்ஷு ஸ்ருஷ்டிக்காக ப்ராக்ருத ஸஜாதீயனாகத் திருவவதரிக்கு மெம்பெருமானுடைய குணங்களிலே யீடுபட்டெழுதிக் கொடுக்கும்படியைச் சொல்லுகிறது. "భవే భవే" ஏழேழு பிறவிக்கும் "నాతిభవే" தேவரீரை யதிக்ரமித்தவனாகக்கடவேனல்லேன். அதிக்ரமிக்கையாவது தனக்கும் பிறர்க்கு முரித்தென்றிருக்கை. "భజస్వమాం" தேவரீர் அடியேனையுயரவைத்துத் தொழுது போகதசையிலழித் தூண்ணக்கடவீர் "భవోద్భవాయ నమః" இந்த ஸம்ஸாரமண்டலத்திலே ஐஶ்வரமான மேன்மைதோற்றும்படி திருவவதரித்தருளின தேவரீருக்கேயற்றுத் தீர்ந்தவடியேன் எனக்குரியேனன்றிக்கே யொழியக்கடவேனென்றபடி. மேலே "వామదేవాయ నమో జ్యేష్ఠాయ నమో రుద్రాయ నమః కాలాయ నమః కలవికరణాయ నమో బలవికరణాయ నమో బలప్రమథనాయ నమస్సర్వభూతదమనాయ నమో మనోన్మనాయ నమః" என்கிற மூன்றுமநுவாகத்தில், ஜகத்ப்ரதிஷ்டாபனார்த்தங்களான மத்ஸ்யாத்யவதாரங்களிற்றோற்றெழுதிக் கொடுக்கும்படி சொல்லுகிறது.

தானே யறிந்துகொண்டு யஜ்ஞபாகங்களிலே சிஷ்டகோஷ்டிக்கு வெளியிலே ஏகாகியாகவே நிற்பனென் றோதுகையாலும், ருத்ரனைக்காட்டில் நிக்ருஷ்டதேவதாந்தர மில்லையென்று நாட்டப்பட்டிருக்கையாலே அதனோடு விரோதிக்குமல்லவா. ஆகையால் இப்படிப்பட்ட பசுபதியாலே கேவலமோஹ நார்த்தமாகக் கற்பிக்கப் பட்டவையாகையாலே பாசுபதமெல்லாம் அதிஹேயமென்க. இங்ஙனன்றிக்கே ஸாக்ஷாத் ப்ரஹ்மஸூத்ரகாரராலே ஸ்ரீ பஞ்சமவேதத்திலே ப்ரமாணதமமாகக் கொண்டாடப்பட்ட ஸ்ரீ பாஞ்சராத்ரமே ஸர்வர்க்கு முபாதேயமாகக்கடவது. ஸ்ரீபீஷ்மபர்வத்திலே "బ్రాహ్మణైః క్షత్రియైర్వైశ్యైశ్శూద్రైశ్చ కృతలక్షణైః। అర్చనీయశ్చ సేవ్యశ్చ పూజనీయశ్చ మానవైః। సాత్వతం విధిమాస్థాయ గీతస్సంకర్షణేన యః।" என்று ஸ்ரீஸங்கர்ஷணவ்யூஹ ரூபியான ஸ்ரீமந்நாராயணனாலேயாதொரு ஸாத்வதமென்கிற ஸ்ரீ பாஞ்சராத்ரவிதியை யுட்கொண்ட சாஸ்த்ர மருளிச்செய்யப் பட்டதோ அதின்படியே பஞ்சஸம்ஸ்காரங்களாலே க்ருதலாஞ்சநர்களான ப்ராஹ்மணதிகளாலேயே ஸர்வேஶ்வரன் ஆராதநீயனென்று சொல்லிற்று. ஸ்ரீநாராயணீயத்தில் உபரிசரவஸு வ்ருத்தாந்தத்திலும் "పాంచరాత్రవిదో ముఖ్యాస్తస్య గేహే మహాత్మనః। ప్రాపణం భగవత్ప్రోక్తం భుంజతే చాగ్రభోజనం।" என்று ஸ்ரீபஞ்சராத்ர நிஷ்டர்களே அக்ரபூஜாபாகிகளானார்களென்று சொல்லுகையாலும் "కామ్యనైమిత్తికా జస్రా యాజ్ఞీయాః పరమాః క్రియాః। సర్వాస్సాత్వతమాస్థాయ విధించక్రే సమాహితః।" என்று ஸ்ரீமதுபரிசரவஸுவும் சகலகர்மங்களையும் ஸ்ரீ பாஞ்சராத்ரத்தின்படியே அநுஷ்டித்தானென்கையாலும் "యే హి తే మునయః ఖ్యాతాస్సప్తచిత్రశిఖండినః। తైరేకమతిభిర్భూత్వా యత్ప్రోక్తం శాస్త్రముత్తమం।" என்று ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரத்தை ஸப்தரிஷிகளும் ஏககண்டர்களாக ப்ரவசநம் செய்தார்களென்கையாலும் "ఇదం శ్రేయ ఇదం బ్రహ్మ ఇదం హితమనుత్తమం।" இத்யாதியாலே ஸ்ரீ பாஞ்சராத்ரமே நிஸ்ஸமாப் யதிகமான ப்ரமாணமென்று கொண்டாடுகையாலும், "ఆరాధ్య తపసా దేవం హరిం నారాయణం ప్రభుం। దివ్యం వర్షసహస్రం వై సమస్తే ఋషిభిస్సహ। నారాయణానుశిష్టా హి తదా దేవీ సరస్వతీ। వివేశ తానృషీన్ సర్వాన్ లోకానాం హితకామ్యయా।" என்று ஸப்தருஷிகளும் ஸ்வாயம்புவ மநுவும்மற்றும் அநேக மஹர்ஷிகளுமாகக் கூடி, தேவமாநத்தாலே ஆயிரம் வருஷம் ஸ்ரீமந்நாராயணனை யாராதிக்க; பிறகு பகவத் ப்ரஸாதத்தாலே அவர்களுக்கு ஸ்ரீபாஞ்சராத்ர ஸித்தி லோகோஜ்ஜீவநகரமாக வுண்டாயிற்றென்கையாலும்,

“ ప్రవృత్తేచనివృత్తేచ యోనిరేతద్భవిష్యతి । ఋగ్యజుస్సామభిర్జుష్ట మథ వాంగిరసైస్తథా ।” என்று ஸர்வவேதமயமான ஸ்ரீ பாஞ்சராத்ரமேத்யாஜ்யோ பாதேயங்களை எல்லாம் விளக்கக் கடவதென்று அஶரீரியாக ஸ்ரீமந் நாராயணன் அருளிச்செய்கையாலும் “ యస్మాత్ ప్రమాణంచ మద్వాక్యతో బ్రహ్మప్రసాదజః । రుద్రశ్చ క్రోధజో విప్ర ।” என்றுதொடங்கி “సర్వంప్రమాణంహి యథాతథైవ శాస్త్రముత్తమం ।” என்று ப்ரஹ்மருத்ராதி ஸ்ருஷ்டிகளோடொக்க ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரவர்த்தநமும் யதாபூர்வமாகையாலே ஸ்ரீபாஞ்சராத்ரமும் அநாதியாயிருக்குமென்று சொல்லி, இதுவேதத்தோடொக்க ஸர்வாம்ஶத்திலும் ப்ரமாணமென்று சொல்லுகையாலும் “ భవిష్యతి ప్రమాణం వై ఏతదేవానుశాసనం । అస్మాత్ప్రవక్ష్యతే ధర్మాన్ మనుస్స్వాయంభువస్స్వయం ।” என்று இனி வரப்போகிற க்ருதயுகாதியிலே இந்த பாஞ்சராத்ரமொன்றுமே ப்ரமாணமாகப் போகிறதென்றும், “ యద్వై కించమనురవదత్తద్భేషజం ।” என்று ஶ்ருதிபரிக்ரஹமுடைய மநுஸ்ம்ருதியும் இந்த ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் நின்றுமே ப்ரவசநம்செய்யப்படுமென்றும் சொல்லுகையாலும், இப்படியே பலவிடங்களிலும் கொண்டாடுகையாலும், ஸ்ரீராமாயணத்திலும் உத்தரகாண்டத்தில், “ సురాసురైర్నతో నిత్యం హరిర్నారాయణః ప్రభుః । యస్యనాభ్యుద్భవో బ్రహ్మా విశ్వస్యజగతః ప్రభుః । పురాణైశ్చైవ వేదైశ్చ పంచరాత్రైస్తథైవచ । ధ్యాయంతి యోగినో నిత్యం స్తుతిభిశ్చ యజంతితం ।” என்றும் ஸ்ரீபாஞ்சராத்ரத்தை வேதத்துக்கும் மேலானதென்று காட்டுகையாலும், ப்ராஹ்மாண்டபுராணத்திலும், “ ఋగాద్యా భారతం చైవ పంచరాత్రమథాఖిలం । మూలరామాయణం చైవ పురాణం చైతదాత్మకం । యేచానుయాయిన స్తేషాం సర్వేతే చ సదాగమాః । దురాగమాస్తదన్యేయే తైర్నజ్ఞేయో జనార్దనః ।” என்று பாஶுபதாதிகளை துராகமங்களென்று கழித்து ஸ்ரீ பாஞ்சராத்ராதிகளையே ஸதாகமமென்று விவேகிக்கையாலும், கூர்மபுராணத்திலும், “ వేదేన పంచరాత్రేణ భక్త్యా యజ్ఞేనచ ద్విజ । ప్రాప్యోహం నాన్యథా ప్రాప్యో వర్షకోటిశతైరపి ।” என்று வேதரூபமான ஸ்ரீ பாஞ்சராத்ரத்தாலன்றி பகவத் ப்ராப்திகிடையாதென்கையாலும், “ కర్మక్షయే చ మద్భక్తో యదికశ్చిద్భవిష్యతి । తస్యవేదాః పాంచరాత్రం హృది నిత్యం వసిష్యతి ।” என்று யாவனொருவன் என்னிடத்தில் பக்தனாய் கர்மக்ஷயமாகிற மோக்ஷத்தையடையப் போகிறானோ, அந்த பகவானுடைய ஹ்ருதயத்திலே தான் வேதங்களும்

ஸ்ரீ பாஞ்சராத்ரமும் துல்யப்ரமாணமாக வர்த்திக்குமென்று ஸர்வேச்வரன் சொல்லுகையாலும், ஸ்ரீ வாராஹத்திலும், " బ్రాహ్మణక్షత్రియవిశాం పాంచరాత్రం విధీయతే । శూద్రాదీనాం తు తచ్ఛ్రోత్ర పదవీం నోపయాస్యతి । ఏవముక్తం విప్రేంద్ర పురాకల్పే పురాతనం । పాంచరాత్రం సహస్రాణాం యదికశ్చిద్గ్రహీష్యతి । కర్మక్షయే చ మాం కశ్చిద్యదిభక్త్యాగమిష్యతి । తస్యవేదాః పాంచరాత్రం నిత్యం హృది వసిష్యతి । అన్యచ్చ తే వరం దద్మి శృణు నారద సాంప్రతం । యదిదం పంచరాత్రం మే శాస్త్రం పరమదుర్లభం । తద్భవాన్వేత్స్యతే ధర్మం మత్ప్రసాదాన్న సంశయః । వేదేన పంచరాత్రేణ భక్త్యా యజ్ఞేన చ ద్విజ । ప్రాప్యోఽహం నాన్యథా ప్రాప్యో వర్షకోటిశతైరపి । " என்று ஸ்ரீ பாஞ்சராத்ரம் தேவருஷிகளுக்கும் அதிதுர்லபமாயிருக்குமென்றும் மோக்ஷைக ஹேதுவென்றும் இப்படி பஹுமுகமாக ஸ்லாகிக்கையாலும், ஸ்ரீ பாஞ்சராத்ரத்திறுடைய வீறுபாடு மற்றொன்றுக்கும் கிடையாதிறே. இப்படிப்பட்ட ஸ்ரீ பாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தையும் ஸ்ரீமந்நாராயணனையும்விட்டு யாதொரு பாபியினுடைய விபரீத புத்தியானது சைவாகமத்திலும் சிவனிடத்திலும் ப்ரவ்ருத்திக்குமோ அவன் வெளிக்கு மநுஷ்யனோடொக்கக் கையுங் காலுமாயிருந்தானே யாகிலும் ' జ్ఞానేన హీనః పశుభిస్సమానః । " என்கிறபடியே ஜ்ஞாநசூந்யதையாலே கேவலம் பசுவென்றே சொல்லப்படுவானாகையாலே சைவர்களை யெல்லாம் பசுக்களென்று சைவாகமத்திற் சொல்லுகிறதே ஸத்யமாய்விட்டது. ஆகையாலன்றோ. " శివేశవాగమేశైవ ధర్మేశివపరిగ్రహే । విపరీతాభవేద్బుద్ధిర్యస్యస్యాత్సహిసన్నరః । " என்று இவர் காட்டின வசநம் இவர் தலைக்கே யிடியாய்விட்டது. உலகத்திலே யிவர்களையொழிய மற்றையாரை நிக்ரஹித்தாலும் பாவமுண்டாகும், ஹிரண்ய ராவணாதிகளான சைவாக்ரேசரர்களை யெல்லாம் சல்லிவேரோடே கல்லுகைக்காகவே சகல தேவதைகளும் க்ருஷிசெய்து தலைக்கட்டினார்களென்று புராணேதிஹாஸாதிகளெல்லாம் முறையிடுகையாலே இப்படிப்பட்ட இவர்களைக்கண்டிப்பதே சகலதேவதைகளுக்கும் சந்தோஷகரமாய் சகலபாப ப்ராயஶ்சித்தமென்னலாயிருக்கையாலே, இது கைவந்தார்க்கு வ்யபிசாராதி தோஷங்களுண்டானாலும் சிரபராதிகளான நாலு காற்கழுதைகளைக் கொன்று யாகம் செய்கை முதலான வேறுவகையான ப்ராயஶ்சித்தம் பண்ண வேண்டுவதில்லை, ஆகையிறே, " శివనిందాపరోభూత్వా శివశాస్త్రవినిందకః । తస్యనో నిష్కృతిర్దృష్టా శాస్త్రైశ్శాస్త్రేకదాచన । " என்று இவர் காட்டிக்கொடுத்த வசநமு மிவர் தலையோடே போம்படியாய் விட்

டக. "చతుర్వేదధరో విప్రో వాసుదేవన్న విందతి । వేదభారభరాక్రాంత
స్స వై బ్రాహ్మణగర్దభః ।" என்று இச் சைவக் கழுதைகளை யல்லாத
நாலுகாற் கழுதைகளைக் காட்டிலும் மேன்மையுடையனவாகக்
கொண்டு ப்ராஹ்மணக் கழுதையென்று சாஸ்த்ரங்களிலே யர்த்த
வாதம் பண்ணி ஸ்தோத்ரம் செய்கையாலே இக்கழுதைகளே
யாக யோக்யங்களல்லவா, "స వై బ్రాహ్మణగర్దభః ।" என்கிற சாஸ்
த்ரம் நிந்தை யல்லவோவெனில், அப்போது மஹர்ஷிகளே சைவ
நிந்தை அவஶ்யா நுஷ்டேயமென்று அநுஷ்டித்துக்காட்டின
வர்களா மல்லவா. இது நிற்க, இவ்விவேகபுஞ்சம் வெக்கைக் கழிச்
சலை மாஹேஶ்வரீயென்று சொல்லுமாபோலே அதிஹேயமான சை
வாசாரத்துக்கே மாஹேஶ்வர வ்ரதமென்று பேரிட்டு, "ఇత్యాగమే
షు వేదేషు వేదాంతోపనిషత్సు చ । ధర్మస్తు శాశ్వతః ప్రోక్తో ముక్త్యై మాహే
శ్వరో మహాన్ ।" என்கிற வசநத்தைத் தனக்கு ஸாதகமென்று உத
ஹரித்தது, இவர் நினைவின்படியே இதற்குப் பொருளாகில், "యథా
గమం యథాన్యాయం సిద్ధో నారాయణః ప్రభుః ।" என்றும், "యే చ వేద
విదో విప్రా యే చాధ్యాత్మవిదో జనాః । తే వదంతి మహాత్మానం కృష్ణం ధర్మం
సనాతనం । ఆలోడ్య సర్వశాస్త్రాణి విచార్య చ పునః పునః । ఇదమేకం సునిష్ప
న్నం ధ్యేయో నారాయణస్సదా ।" என்றும், "తత్త్వజిజ్ఞాసమానానాం
హేతుభిస్సర్వతోముఖైః । తత్త్వమేకో మహాయోగీ హరిర్నారాయణః ప్రభుః ।"
என்றும் வருகிற எண்ணிறந்த வசநங்களோடும் விரோதிக்கு மா
கையாலே. ஸ்ரீவாராஹத்திலே "నిశ్వాససంహితాయాం హి లక్షమాత్రా
ప్రమాణతః । శైవపాశుపతీదీక్షా యోగః పాశుపతక్షమః ।" என்றும், "విష్ణు
రూపేణ యాజ్ఞే హ్యహం సర్వదేవైర్ద్విజోత్తమ । సాత్వికీ సా సమాఖ్యాతా
వృత్తిర్మే మునిపుంగవ ।" என்றும், "ఏతస్మాద్వేదమార్గాద్ధి యదన్య
దిహ జాయతే । తచ్చ క్షుద్రకమర్ధం విజ్ఞేయం రౌద్రం శౌచవివర్జితం ।" என்
றும், "జటామకుటధారీ చ నాగభూతైస్సమావృతః । సిద్ధాంతనయమార్గస్థై
రహం రుద్రైశ్చ పూజితః । రాజసీం మే తు తాం వృత్తిం జానీహి ద్విజసత్తమ ।"
என்றும், "యే రుద్రముపజీవంతి కలౌ వైలాలికా నరాః । ఉచ్ఛిష్టరుద్రాస్తే జ్ఞే
యా నాహం తేషు వ్యవస్థితః ।" என்றும், "తేషాం గౌతమశాపాద్ధి భవిష్యం
త్యన్వయే ద్విజాః ।" என்று தொடங்கி, "తేషామధ్యసదాచారా యే తే
మచ్ఛాసనే రతాః । తే స్వర్గమపవర్గం చ యాంత్యేవ ఖలు నిశ్చయః । వైలా
లికా మే యాస్యంతి నమసంతతిదూషకాః । ప్రాగ్గౌతమాగ్నినిర్దగ్ధాః పున

మహద్వచనాద్ద్విజాః । నరకంతుగమిష్యంతి నాత్రకార్యావిచారణా । " என்றும் மாஹேஶ்வர பூஜையை ஶ்ரௌத மார்க்கமென்றும், ஸித்தாந்த மார்க்கமென்றும், காபாலிக மார்க்கமென்றும் மூன்று வகையாக வகுத்து; அவைமூன்றும் அடைவே ஸாத்விக ராஜஸ தாமஸ ரூபமா யிருக்குமென்று சொல்லி, "హంసస్త్ర్యక్షమాలాహృదిరామమంత్రం" என்கிறபடியே சிவனை ஸ்ரீவைஷ்ணவ வேஷத்தோடே ஸ்ரீமந்நாராயணனுக்குச் சரீரதயா சேஷமாகப் ப்ரதிஷ்டைசெய்து பூஜிக்குமது வைதிகமாகவும் ஸாத்விகமாகவும் இருக்கும் ஶ்ரௌதமார்க்க மாகுமென்றும்; இங்ஙனன்றிக்கே சடைமுடியும் பாம்பணியுமானவேஷத்தோடே பூதகணங்களுடன் ஸ்வதந்த்ரமாக ப்ரதிஷ்டைசெய்து பூஜிக்குமது ராஜஸமுமாய் அவைதிகமுமா யிருந்துள்ள ரௌத்ரமான ஸித்தாந்தமார்க்க மாகுமென்றும்; இப்படிப்பட்ட ரௌத்ரரூபத்தையே வயிறு வளர்க்கைக்காக சிவத்விஜர் பூஜைசெய்யுமது தாமஸமுமாய் வேதவ்ருத்தமுமாய் அதிஹேயமுமாயிருந்துள்ள காபாலிக மார்க்கமென்றும்; ஸாக்ஷாத்தாக சிவனே சொல்லுகையாலே, இதில் ஸாத்விகமான ஶ்ரௌத மார்க்கத்தையாதல் அன்றிக்கே, "హంసస్త్ర్యక్షమాలా" இத்யாதியிற் சொல்லுகிறபடியே சிவனாலே யாசரிக்கப்பட்டு ஸ்ரீ பாத்மோத்தரா ஹிர்ப்புத்ந்யாதி ஸம்ஹிதைகளிலே தேவீநாரதாதி விஷயங்களில் அதிகுஹ்யமாக ப்ரவசநம் செய்யப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ வ்ரதத்தையாதல் இங்கு மாஹேஶ்வர வ்ரதமென்று சொல்லுகிறதென்று நாட்டப்படுமாதலால் இவ்விமுறைதயினவையெல்லாம் பழுதாய்விட்டது. ஆகையாலே, "నవనీతంయథాదధ్నో ద్విపదాంబ్రాహ్మణోయథా । ఆరణ్యకంచవేదేభ్య ఓషధీభ్యో యథామృతం । ఇదంమహోపనిషదం చతుర్వేదసమన్వితం । సాంఖ్యయోగకృతాంతేన పంచరాత్రానుశబ్దితం । ఇదంశ్రేయఇదంబ్రహ్మఇదం హితమనుత్తమం । ఋగ్యజుస్సామభిర్జుష్టమథర్వాంగిరసైస్తథా । భవిష్యతిప్రమాణంవై ఏతదేవానుశాసనం ।" என்று ஸ்ரீ பஞ்சமவேதத்திலே தயிருக்கு வெண்ணெய்போலவும், மநுஷ்யர்களுக்குக் குருவான ப்ராஹ்மணனைப்போலவும், வேதங்களுக்கெல்லாம் ஆரண்யகம்போலவும், க்ஷீராப்தியிற் புகட்டிக்கடைந்த ஒளஷதிகளுக் கெல்லாம் அம்ருதம்போலவும், ஸர்வவேதவேதாந்த ஸாங்க்ய யோகஸித்தாந்தங்களுக்கெல்லாம் ஸாரதமம் இப் பாஞ்சராத்ரமென்று சொல்லி, இப்படிப்பட்ட அந்த ஸ்ரீ பாஞ்சராத்ரமே தர்மார்த்தாதி ஸகல ஶ்ரேயஸ்ஸுக்கும் மூலமாய், யதாவஸ்தித பரப்ரஹ்மப்ரதிபாதகமாய், இனி யிதற்கவ் வருகில்லை யென்னலான பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷ ப்ரயோஜக மாகையாலே பரமஹிதமுமாய், ருக்யஜுஸ்ஸாமங்களாலும் அதர்வாங்கிரசங்க ளென்கிற இருவகைப்பட்ட

அதர்வண வேதங்களாலும் கொண்டாடப் பட்டதமா யிருக்கை யாலே இதுவே மேலுள்ள காலமெல்லாம் பல்லாண்டு பல்லாண் டாக எதிரற்ற ப்ரமாணமாகக் கடவதென்று, "సహోవాచ వ్యాసః పారాశర్యః ।" என்று ச்ருதியாலே கொண்டாடப்பட்ட ஸத்யவாக் கையுடைய வேதவ்யாச மஹர்ஷியாலே நாட்டப்பட்ட ஸ்ரீ பாஞ்ச ராத்ரத்தையே பாக்யாதிசயமுள்ள புத்திமான்களெல்லாரும் கொ ள்ளத் துணிவாராகையாலே இவர் ப்ரலாபித்ததெல்லாம் காட்டிற் ப்ரலாபித்த ப்ரலாபமாய் விட்டதென்க. ஸ்ரீபாத்மஸம்ஹிதையிலும், "బ్రాహ్మణాస్సర్వవర్ణేషు యతిశ్చాశ్రమిషూత్తమః । యద్వద్గంగా చ తీర్థేషు దైవతేష్వపి చాచ్యుతః । తద్వత్సర్వేషు శాస్త్రేషు పంచరాత్రం ప్రశస్యతే ।" என்று மிதுதொடக்கமாக ஸ்ரீ பாஞ்சராத்ர வைபவங் கண்டுகொள் வது. "పంచేతరే పంచరాత్ర మపహాయ మపి స్వయం । మోహయంత్యేవ సృష్టా త్తద్దూషయితుమీశ్వరైః ।" என்று ஸ்வதஸ்ஸித்தமான இப்பாஞ்ச ராத்ரத்தை பௌத்தார்ஹத ஸாங்க்யயோக பாசுபதர்களாகிற இவர் களைவரும் நிந்திப்பதெல்லாம் அவர்கள் மோஹநார்த்தமாகவே ஸ் ருஷ்டிக்கப்பட்டு ஸச்சாஸ்த்ரங்களை தூஷிப்பதற்கே யிட்டுப் பிறந் திருக்கையாலே யது புதுமையல்லவென்றும், "నాస్తికాశ్చందశాజాతా వ్యాధిభిః పరిపీడితాః । జాయంతే చ మ్రియంతే చ పచ్యంతే నరకేష్వపి ।" என்று ஸ்ரீ பாஞ்சராத்ரத்தை நிந்திக்கு மவர்களெல்லாம் நாஸ்தி கர்களாகையாலே அவர்களுடனே வ்யாதிகளாலே யழுகி யழுகிச் செத்துச் செத்துப் பிறந்து சமஸ்த நரகங்களிலும் விழுந்து வெந்து குமையுண்பர்களென்றும் சொல்லப்பட்டது. இந்தப் பரமவைதிகசா ஸ்த்ரத்துக்கு "మహోపనిషదాఖ్యస్య శాస్త్రస్యాస్య మహామతే । పంచరాత్రసమాఖ్యాసౌ కథం లోకే ప్రవర్తతే ।" என்று ஸ்ரீபாஞ்சராத்ரமென்று திருநாமமானபடி யென்னென்று கண்வமஹர்ஷி கேட்க, "పంచేతరాణి శాస్త్రాణి రాత్రీయంతే మహాంత్యపి । తత్సన్నిధౌ సమాఖ్యాసౌ తేన లోకే ప్రవర్తతే ।" என்று பரமசாத்விகமான பாஞ்சராத்ரமாகிற பக லுக்கு பௌத்தார்ஹத ஸாங்க்ய யோக பாசுபதங்களைந்தும் ராத்ரி யென்னும்படி தாமசங்களா யிருக்கையாலே இதனைப் பாஞ்சராத்ர மென்றுலகத்தார் சொல்லுகிறதென்றும், அன்றிக்கே, "చంద్రతారాగణా యద్వచ్ఛోభంతే నైవ వాసరే । తథేతరాణి శోభంతే పంచ నైవాస్య సన్నిధౌ ।" என்று ராத்ரியிலே ப்ரகாசிக்கிற சந்த்ரனும் நக்ஷத்ரங் களும் க்ரஹங்களும் ஸ்வாதீபதமும் கொள்ளிவாய்ப்பேய்களுமாகிற இவ்வைந்தும் பகலிலே படும்பாட்டை ஸ்ரீபாஞ்சராத்ர சந்நிதியிலே பௌத்தார்ஹத சாங்க்யயோக பாசுபதங்களைந்தும் படுகையாலும்

இந்த சாஸ்த்ரத்தை ஸ்ரீ பாஞ்சராத்ர மென்பர்களென்றும், அன்றிக்கே, "పఞ్చత్వమథవాయద్వ ద్దీప్యమానేదివాకరే। ఋచ్ఛన్తిరాత్రయస్తద్వ దితరాణిశద న్తికే।" என்று பகலானது முகங்காட்டுமளவிலே ராத்ரியெல்லாம் படுமாப்போலே ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரஸங்கமாத்ரத்திலே தமஃப்ராயங்களான பாஹ்ய குத்ருஷ்டிக ளெல்லாம், அடியற்றுப் போகையாலும் இத்தை ஸ்ரீபாஞ்சராத்ர மென்பர்களென்றும், ஸம்வர்த்தந நிருக்தி பண்ணினதாக ஸ்ரீபாத்ம ஸம்ஹிதையிலே சொல்லப்பட்டதிறே. "ఋగాదిసంజ్ఞకోవేద శ్చతుర్ధాభిద్యతేయథా। తద్వత్సిద్ధాన్తభేదేన పఞ్చరాత్రంచతుర్విధమ్।" என்று ருகாதிபேதத்தாலே வேதம் நான்குவிதமா யிருக்கிறதுபோலே ஸ்ரீபாஞ்சராத்ரமும் மந்த்ர சித்தாந்தமென்றும், ஆகம சித்தாந்தமென்றும், தந்த்ரசித்தாந்தமென்றும், தந்த்ராந்தர சித்தாந்தமென்றும், சித்தாந்தபேதத்தாலே நான்குவகைப்பட்டிருக்கும். "ఋగాదయోయథానైకం భిద్యతేబహుశాఖయా। తథాసిద్ధాన్తమేకైకం వక్తృభేదేనభిద్యతే।" என்று ருகாதிவேதங்கள் அநேகசாகமா யிருக்குமாப்போலே சித்தாந்தங்கள் நாலும் தனித்தனியே ப்ரவசநகர்த்ரு பேதத்தாலே பஹுவிதமாயிருக்கும். సిద్ధాన్తనామచాన్వర్థం నిరాహురితిపణ్డితాః। మీమాంసాదిషుశాస్త్రేషు యేసిద్ధార్థామనీషిణః। తేషామన్తేధికారోస్మిం ఛాస్త్రేనైవాన్యథాగతిః।" என்று ஸ்ரீ பாஞ்சராத்ர மெல்லாத்துக்கும் சித்தாந்தமென்னும் பெயரானது அந்வர்த்தநாமமா யிருக்கும். எங்ஙனேயெனில், இந்த ஸ்ரீ பாஞ்சராத்ரமானது தன்னையதிகரித்தாரான சித்தர்களுக்கெல்லாம் அந்தமாகுகையாலே இதனைச் சித்தாந்தமென்கிறது. சித்தர்களாகிறார் நான்கு வேதங்களையு மோதி பூர்வோத்தர மீமாம்ஸார்த்தங்களை யெல்லாம் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கைவந்திருக்குமவர்கள். இவர்களுக்கு அந்தமாகையாவது இனி யவ்வருகில்லை யென்னும்படி இவர்களுக்கெல்லாம் ஆசார்யபத நிர்வாஹகராகை. ஸ்ரீ பாஞ்சராத்ராதி காரிகளுக் கொழிய சித்தர்களுக்கெல்லாம் அந்தமாயிருக்கையாகிற விப்பதத்தில் கதியுண்டாக மாட்டாதிறே யென்றும், "ఏకమూర్తిప్రధానంతన్మన్త్రసిద్ధాన్తముచ్యతే।చతుర్మూర్తిప్రధానంచయత్తదాగమపూర్వకమ్।సిద్ధాన్తముచ్యతేసద్భిర్నిత్యంలోకవిశ్రుతమ్।నవమూర్తిప్రధానంచ తన్త్రసిద్ధాన్తముచ్యతే।చతుర్త్రింశక్తిర్వాదేవేయత్రార్చానావిధిః। తన్త్రాన్తరమిష్టంస్యాత్సర్వసర్వఫలప్రదాః।" என்று ஏகமூர்த்தி ப்ரதாநமான ப்ரதிஷ்டாதிகளை விதிக்குமது மந்த்ரசித்தாந்த மென்றும், சதுர்மூர்த்தி ப்ரதாநமா

னது ஆகமசித்தாந்த மென்றும், நவமூர்த்தி ப்ரதாநமானது தந்த்ர சித்தாந்தமென்றும், நாநாமுக மூர்த்திப்ரதாநமானது தந்த்ராந்தர சித்தாந்தமென்றும், இப்படி மூர்த்தி பேதமுண்டாயிருந்த தெனினும் சர்வசித்தாந்தங்களும் சகல பலப்ரதங்களாயிருக்குமென்றும், " తేష్వయం మన్త్రసిద్ధాన్తః పాద్మసంజ్ఞో విధీయతే । ఏకైకతన్త్రభేదేన సిద్ధాన్తా బహవస్స్మృతాః।" என்றும், "సార్ధకోటిప్రమాణేన బ్రహ్మణా కేశవాచ్ఛ్రుతమ్। కపిలాయ తతో బ్రహ్మా లక్షాణాం పఞ్చకం పునః। కపిలోఽపి చ పద్మాయ ప్రదదౌ లక్షమాత్రయా । పద్మోఽపి దత్తవాన్మహ్య మయుతగ్రన్థసంఖ్యయా । యస్మాత్పద్మోపదిష్టేయం తస్మాత్సా పాద్మసంహితా । " என்றும் இப்படி நான்குவகையான சித்தாந்தங்களிலே பாத்ம ஸம்ஹிதையானது மந்த்ர சித்தாந்த மென்றும், ஒவ்வொரு சித்தாந்தமே சங்க்ரஹவிஸ்தர ரூபங்களான தந்த்ர பேதங்களாலே அநேகவிதங்களா யிருக்குமென்றும், முதலிலே ஒன்றரைக்கோடி க்ரந்தமாக சர்வேஶ்வரனாலே யருளிச்செய்யப்பட்ட பாத்மஸம்ஹிதையானது ஐந்துலக்ஷம் க்ரந்தமுள்ள தந்த்ரமாக ப்ரஹ்மாவாலே சங்க்ரஹிக்கப்பட்டு, பின்பு அது லக்ஷம் க்ரந்தமாக கபிலமஹர்ஷியாலே தந்த்ரரூபேண சங்க்ரஹிக்கப்பட்டு, பின்பு அதுவும் பத்மனாலே பதினாயிரங் க்ரந்தமுள்ள தந்த்ரமாக சங்க்ரஹிக்கப்பட்டதாகையாலே, ஸ்ரீபாத்மஸம்ஹிதை சங்க்ரஹவிஸ்தர ரூபதந்த்ரங்களாலே நான்குவகைப்பட் டிருக்குமென்றும், "సంగ్రహో విస్తరశ్చైవ తన్త్రాణాం ప్రకటీకృతిః । సిద్ధాన్తేష్వత్ర సంసిద్ధిశ్శిష్యాణాం హితకామ్యయా । " என்றுசித்தாந்தங்களானவை தந்த்ரரூபங்களானதெல்லாம் எம்பெருமானுடைய அவதாரங்களைப்போலே ஆவிர்ப்பாவ மாத்ரரூபங்களாய் சித்தாதி ப்ரவர்த்திதங்களாகையாலே ப்ரமாதி ரஹிதங்களாய், ஸௌலப்யார்த்தங்களா யிருக்குமென்றும், " తన్త్రాణాం చైవ సర్వేషాం వక్తా నారాయణస్స్వయమ్ । అనుగ్రహార్థం భక్తానాం శ్రావయామాస చ స్వయమ్ । " என்றுசங்க்ரஹவிஸ்தர ரூபங்களான தந்த்ரபேதங்க ளெல்லாவற்றிலும் சதுர்முகாதிகளுக்கு ப்ரவர்த்தந மாத்ரமே யுள்ளது. முதலிலேசர்வேஶ்வரன் சித்தாந்தங்களை வெளியிட்டருளினபோதே ஸௌலப்யார்த்தமாய் அநுக்ரஹாதிசயத்தாலே ஒவ்வொரு சித்தாந்தத்தையே சங்க்ரஹவிஸ்தரரூப தந்த்ராகாரங்களாக அருளிச்செய்கையாலே சர்வதந்த்ரங்களுக்கும் வக்தா சாக்ஷாத்ஸ்ரீமந் நாராயணனே யென்றும்சொல்லி, "చిన్తామణిర్యథా లోకే శబలాకల్పకద్రుమః। అర్థిభ్యో వాఞ్ఛితం సర్వం ప్రయచ్ఛతి గతిం వినా। పఞ్చరాత్రాఖ్యరత్నం తు చతుర్వర్గఫలప్రదమ్। శాస్త్రాన్తరవ్యసనినామభ్యాసః కాలయాపనమ్। ఫలం వాఞ్ఛేచ్చేదేవస్యాద్యత్తత్సాధుబహిష్కృతమ్।" என்றுஇந்த ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரமானதுசிந்

தாமணியோடும் காமதேநுவோடும் கற்பகவிருக்ஷத்தோடு மொத்த
ஔதார்யத்தை யுடையதென்றும், சகலாபேக்ஷித ப்ரதமாயிருக்கு
மென்றும், இதைவிட்டு சாஸ்த்ராந்தரங்களில் போது போக்குவ
தெல்லாம் வீண்போது போக்கென்றும், சாஸ்த்ராந்தரங்களில் சித்
திக்கும் பலமும் "శాకమాంసంశునోచ్ఛిష్టం స్వల్పంతదపిదుర్లభమ్ ।"
என்கிற படியே சிஷ்டகர்ஹிதமுமாய் அத்யல்பமுமா யிருக்கு
மென்றும், "వాసుదేవంపరిత్యజ్య, యోన్యందేవముపాసతే । నరకాయభవ
న్త్యేతే నాత్రకార్యావిచారణా ।" என்றுகீழ்ச்சொன்ன பலாந்தரத்ருஷ்
ணையாலே மூதேவிவீட்டிலே முட்டி யெடுப்பாரைப்போலே தேவ
தாந்தரங்களை யாஸ்ரயிப்பார்க்குப் பின்நரகமே பலமாகுமென்பதில்
சந்தேஹ மில்லையென்றும், "సత్యంసత్యంపునస్సత్య ముద్ధృత్యభుజము
చ్యతే । వేదశాస్త్రాత్పరంనాస్తి నదైవంకేశవాత్పరమ్ ॥" என்று வ்யாஸ
ரொடொக்க வேதமயமாயிருந்துள்ள இந்தப்பாஞ்சராத்ர சாஸ்த்
ரத்திற் காட்டில் அத்யந்த பிந்நமான தொரு ஸச்சாஸ்த்ரமும் கி
டையாது, ஸ்ரீமந் நாராயணனிற் காட்டில் அத்யந்த பிந்நமான
தொரு தேவதையுங் கிடையாதென்று சத்யம்பண்ணிக் கொடுத்தா
னிறே ஸம்வர்த்தன். இப்படியிருந்துள்ள பகவச்சாஸ்த்ரந்தான் அப
ரிச்சிந்நமா யிருந்ததேயாயினும் இதில் நூற்றெட்டு ஸம்ஹிதைகள்
ப்ரதாநங்களா யிருக்கும். அவையாவன, "పాద్మంపద్మోద్భవంమాయా
వైభవంనళకూబరమ్। త్రైలోక్యమోహనంవిష్ణు తిలకంపరమాహ్వయమ్ । నార
దీయంధ్యానదీయం వాసిష్ఠంపౌష్కరాహ్వయమ్ । సనత్కుమారంసనకం సత్యా
ఖ్యంవిశ్వసంహితా।సనన్దాఖ్యంమహీప్రశ్నం శ్రీప్రశ్నంపురుషోత్తమమ్।మా
హేన్ద్రసంహితాపఞ్చప్రశ్నాఖ్యంతత్త్వసాగరమ్।వాగీశంసాత్త్వతంతేజోద్రవి
ణంశ్రీకరాహ్వయమ్ । సాంవర్తంవిష్ణుసద్భావం సిద్ధాన్తంవిష్ణుపూర్వకమ్ ।
విష్ణుతత్త్వంచకౌమారం రహస్యంవిష్ణుపూర్వకమ్।విష్ణువైభావికంసౌరం సౌమ్య
మీశ్వరసంహితా । అనన్తాఖ్యంభాగవతం జయాఖ్యంమూలసంహితా । పుష్టిత
న్త్రంశౌనకీయం మారీచందక్షసంహితా । ఔపేన్ద్రంయోగహృదయం హారీ
తంపారమేశ్వరమ్ । ఆత్రేయమైన్దిరంవిష్వక్సేనమౌశనసాహ్వయమ్ । వైహా
యసంవిహగేన్ద్రం భార్గవంపరపూరుషమ్ । యాజ్ఞవల్క్యంగౌతమీయం పౌ
లస్త్యంశాకలాహ్వయమ్ । జ్ఞానార్ణవంజామదగ్న్యం యామ్యంనారాయణా
త్మకమ్ । పారాశర్యంచజాబాలిం కాపిలంవామనాహ్వయమ్ । జయోత్తరంబార్హ
స్పత్యం జైమినంవామనాహ్వయం । కాత్యాయనీయంవాల్మీక మౌపగాయ
నసంహితా । హైరణ్యగర్భమాగస్త్యం కార్ష్ణంబోధాయనాహ్వయం । భార

ద్వాజంనారసింహం గార్గ్యంచముత్తరపూర్వకమ్ । శాతాతపమాఙ్గిరసం కాశ్యపం పైఙ్గళాహ్వయమ్ । త్రైలోక్యవిజయంయోగం నారదీయంచవారుణమ్ । కృష్ణంచామ్బరమాగ్నేయం మార్కణ్డేయస్యసంగ్రహః । మహాసనత్కుమారాఖ్యంవ్యాసాఖ్యంవిష్వక్సంహితా। సంహితాచాహిర్బుధ్న్యస్యబ్రహ్మా రాఘవసంహితా । మార్కణ్డేయంపార్వతంచ బృహన్నారదసంహితా । సంవాదశ్శుక్రరుద్రాభ్యా ముమామాహేశ్వరాహ్వయమ్ । దత్తాత్రేయంచశర్వాఖ్యం వారాహంమిహిరాహ్వయమ్ । సంకర్షణాఖ్యంప్రద్యుమ్నం వామనంకలి రాఘవా । ప్రాచేతసాఖ్యమిత్యేతే శతమష్టోత్తరంస్మృతమ్ ," என்று ஸ்ரீ பாத்மாதிகளிலே சொல்லுகிறபடியே பாத்மாதி ப்ராசேத ஸாந்தங்களான திருநாமங்களை யுடையனவாக ப்ரசித்தங்களா யிருக்கும், "ఏతాని తన్త్రనామాని మయోక్తాని మహామతే । తన్త్రైస్త్వనేకైర్బద్ధాస్తే ముక్త్యుపాయాః పృథక్పృథక్ ।" என்று கீழ்ச்சொன்ன நூற்றெட்டு ஸம்ஹிதைகளும் ப்ரதாநமாகச் சொல்லப்பட்டன வாகையாலே சொல்லிச்சொல்லாத ஸம்ஹிதைகள் பலவுமுண்டென்றும், அவையெல்லாம் மோக்ஷ ஹேதுக்களா யிருக்குமென்றும் சொல்லப்பட்டதிறே.

இதுநிற்க, மேலேயிம்மூடாக்ரகண்யர், ஸ்ரீகண்டாசாரியாலேவப்பட்ட சரபத்தாலே சங்கரோபாஸ்யமான நரஸிம்ஹமூர்த்தி ஸம்ஹரிக்கப்பட்டபடியாலே சங்கராசார்யர் சைவதீக்ஷைபெற்று ஸ்ரீகண்ட சிவத்விஜஞன குண்டகோளகனுக்கு அந்தரங்க சிஷ்யராய் விட்டாரென்று ஒருபொய்யைப் புனைந்து ஸ்ரீ சங்கராசார்யர் வாஸ்தவமாகவே ஸ்ரீ நரஸிம்ஹோபாஸக ரென்பதை ஸ்த்தாபித்துவிட்டார். "శంభుర్భవన్నిశ్శరభశ్శలభో బభూవ ।" என்கிறபடியே ஸ்ரீ நரஸிம்ஹ மூர்த்தியினுடைய திவ்ய தோஜோ ராசியாகிற ப்ரளய காலாக்நியிலே சலபமென்று சொல்லப்பட்ட விட்டிற் பூச்சிபோலே விழுந்து நெடுங்காலத்துக்கு முன்னமே சாம்பலாய் விட்டபடியாலே சலபமான அந்தருத்ரரூபத்துக்கு ரலயோரபேதத்தாலே சரபமென்று லோக ப்ரசித்தமாகப் போய்த்தென்று சொல்லப்பட்டிருக்க, சங்கராசார்யர் காலத்திலே சலபரூபமுண்டானதாகச் சொல்லுவதை மெய்யென்று பசுக்களோ டொத்தவர்களுங் கூட நம்பமாட்டார்கள். மேலும், ஆயிரம் வருஷத்துக்கு முன்னே யிருந்த சங்கராசார்யரை முந்நூறு வருஷத்துக்கு முன்னிருந்த ஸ்ரீ கண்டசிவத்விஜர் வென்று சிஷ்யராக்கிக் கொண்டா ரென்பதை புத்திமான்கள் கேட்டால் வாயாற்சிரிக்க வொண்ணாதென்று குத்தாற்சிரிப்பார்களல்லவா? புளுகிநாலும் பொருந்தப் புளுகவேணும். மேலும் நீலகண்ட ரென்பவருடைய கதைகளை ஸ்ரீ கண்ட ரென்

யவருடைய கதைகளாகக் கொள்ளுவதும் பெருவஞ்சனை. இந்த சைவபாஷ்யம் செய்தவர் சங்கராசார்யருக்கு ஸமகாலத்திலிருந்தவராகில் எண்ணிறந்த க்ரந்தங்களைச்செய்த சங்கராசார்யரும் அவருக்குப் பிற்பட்டவர்களும் பூர்வபக்ஷமாகவாதல் சித்தாந்தமாகவாதல் அல்லது மத்யஸ்த்தவசநமாகவாதல் ஒருவராகிலும் இந்தசைவ பாஷ்யாக்ஷரத்தை யெடுத்துச் சொல்லாமலு பேக்ஷைசெய்திருக்க மாட்டார்களல்லவா ? இப்படி யெல்லாரு முபேக்ஷைசெய்யும்படி யொன்றோடுஞ் சேராதமுயற்புழுக்கையா யிருந்ததாகக்கொண்டு இந்தசைவபாஷ்யத்தைப் பழையசுவடியல்லது புதியசுவடி யல்லவென்று நாட்டுவதிலும் இப்படி நாட்டுமவர்கள் நாக்கைப்பிடுங்கிக்கொண்டு சாவதேயழகு. இதுகிடக்க, ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திலே பாணயுத்தத்திலேருத்ரன்பரிகரனாய்த் தோற்றோடிப் போனானென்று சகலபுராணேதிஹாஸாதி ப்ரசித்தமாயிருக்க, அதைமறைத்தற்காகவே யிப்படிப் பட்டபொய்களைக் கற்பிப்பது சைவர்க்கியற்கை யென்பதை யாவரறியாதவர்கள். சரபத்தாலே ஸ்ரீ ந்ருஸிம்ஹமூர்த்திசொல்லப்பட்டது மெய்யாகில் சிவபக்தனை ஹிரண்யனிப்போதும் பிழைத்திருக்கவேணுமல்லவா ! உலகத்தி லெல்லாரும் நரஸிம்ஹஜயந்தியைத்தள்ளிவிட்டு சரபஜயந்தியையல்லவோ கொண்டாடுவார்கள். இந்த்ரஜித்துமாயையாலே யொருசீதையை வெட்டினாற்போலமோஹத்திலே தீக்ஷிதனான சிவனும் சைவத்திலே தீக்ஷித்தான ஸ்ரீ கண்டனும் மாயாநரஸிம்ஹனை மாயாசரபரூபத்தைக்கொண்டு ஸம்ஹாரம்செய்து நாட்டைமயக்கி யிருப்பார்களாகில் இம்மூடர் பிதற்றுதற்குக் கொஞ்சமாதார முண்டாகலாம். “ బ్రహ్మాణమిన్ద్రం రుద్రంచ యమం వరుణమేవచ। నిగృహ్య హరతే యస్మాత్తస్మాద్ధరిరిహోచ్యతే। ” என்றும், “ యస్య బ్రహ్మచ క్షత్రంచ ఉభే భవత ఓదనః। మృత్యుర్యస్యోపసేచనమ్। ” என்றும், “ న బ్రహ్మా నేశానః। ” என்றும், ப்ரளயகாலத்தில் ஸ்ரீமந்நாராயணன் ஸர்வதேவதைகளையும் ப்ராஹ்ம ருத்ராதிகளோடு ஸம்ஹரித்தது “எல்லாருமறியாரோ வெம்பெருமானுண்டு மிழ்ந்தவெச்சிற்றேவர்” என்கிறபடியே ப்ரளயாந்தத்திலே ஸ்ரீமந்நாராயணனாலே வார்த்திசெய்யப்பட்ட எச்சிற்றேவர்களிலொருபுழுவான சிவன் “ పరార్ధచర్యావాతా ధ్వరోమవివరస్య ] ” என்கிறபடியே அநேகமாயிரங்கோடி ப்ரஹ்மாண்டங்களைத் தன்னுடைய மயிர்க் காலிலே யடக்கிக்கொண் டிருக்கிற மஹாபுருஷனானவெம்பெருமானை யழித்துவிட்டதாகச் சொல்வதை வித்வான்கள் கேட்டால் விலவிறச் சிரிப்பார்கள். ஆக்நேய புராணத்திலே “ తమభ్యాశగతం దృష్ట్వా నృసింహం శ్శరభం తథా। జఘాన నిశితైరుగ్రైః నఖైర్నఖవరాయుధః। నిహతే శరభే తస్మిన్ రౌద్రే మధునిషూదనమ్। తుష్టువుః పుణ్డరీకాక్షం దేవా దేవర్షయ

స్తా ।" என்று சரபரூபியான ருத்ரன் அழகியசிங்கருடைய திருவுகிருக்கினாயாய்க் கிழியுண்டபடியை வெளியாகச்சொல்லுகிறது. ஸ்ரீபாத்மத்திலும், "తతఃకృత్వామహాకాయం నృసింహోభీమనిస్వనః । సహస్రకరవాం స్తత్ర తస్యగాత్రేష్వవేశయత్ । పతితంభవమత్యుగ్రం గతాసుం ద్రష్టుమాగతాః । ఋషయోదేవగన్ధర్వా యత్రసీతోమృతింహరః । తందృష్ట్వాపరమంజగ్ము ర్విస్మయంత్రిదివౌకసః। ప్రశశంసుస్తదాకర్మ నరసింహస్య చాద్భుతం ।" என்று ஸ்ரீநரஸிம்ஹரூபியான வெம்பெருமான் அநேகந்திருக்கைகளுடன் தம்முடைய திருமேனியை சரபத்தின்மேலே தாக்கினவளவிலே சிவன்விழுந்து பிணமாய்விட்டபடியை தேவர்களும் மஹர்ஷிகளும் கண்டு மகிழ்ந்தார்களென்று உண்மையை ருத்ரன்தானே தேவிக்குச் சொல்லிவிட்டான். காருட புராணத்திலும், "హస్తమభ్యాగతంరౌద్రం శరభంనరకేసరీ । నఖైర్విదారయామాస హిరణ్యకశిపుంయథా ।" என்று சிவபக்தனை ஹிரண்யன் போனவழியே சிவனையும் போம்படிசெய்து அவ்விருவர்க்கும் கடகரானார் அழகியசிங்கரென்றுசொல்லிற்று. ஸ்ரீநாரஸிம்ஹபுராணத்திலும்மந்த்ரசாஸ்த்ரத்திலே கண்டபேருண்ட கல்பத்திலும், "వన్దేహంఘోరఘోరం ప్రబలతరమహోద్దణ్డ ముద్దణ్డతుణ్డం వ్యాఘ్రాశ్వర్క్షౌకిటీడశ్శాఖామృగవరఖగరాట్భల్లూకాద్యష్టవక్త్రమ్। ద్వాత్రింశద్భీమబాహుంజ్వలదనలగదాశఙ్ఖచక్రాదిహేతీర్బిభ్రాణం భీమదంష్ట్రంశరభమదహరం గణ్డభేరుణ్డసింహమ్।" என்றுசரபத்தைமதமழித்த ஸ்ரீகண்டபேருண்டாவதாரத்தினுடைய வீறுபாடிருக்கும்படியைச்சொல்லிற்று. இப்படியே ப்ரஹ்மகைவர்த்தோத்தரத்திலே தக்ஷிணமதுரா மாஹாத்ம்யத்திலே "హతోరుద్రో హతోరుద్రో మాధవేనమురారిణా । ద్వాత్రింశత్కోటిహస్తేన గణ్డభేరుణ్డరూపిణా ।" என்று சரபங்கிழியுண்டபடியைச் சொல்லி, இப்படிகிழியுண்ட சிவனுடைய குடலில் ஒருதுண்டும் விழுந்தவிடத்துக்கு அதுவே காரணமாய் சிவன்குடல் என்கிற பெயருண்டானதுமன்றி அக்குடல் சிவலிங்கமாய்,சைவர்களாலே பூஜை செய்யப்பட் டிருக்கின்றதென்று சொல்லப்பட்டது. ஆகையாலே கண்டபேருண்ட நரஸிம்ஹோபாஸகரான சங்கராசார்யரை சரபோபாஸகனை ஸ்ரீகண்டன் இவன்றானென்பது பச்சைப் பசும்பொய்யாய்விட்டது. மேலேசங்கராசார்யர் சைவபரமாகசிலக்ரந்தங்கள் செய்திருக்கிறதாகக்கொண்டு அவர்சிவதீக்ஷையடைந்தாரென்பதற் கதுவே சாக்ஷியென்றார். சங்கராசார்யர் மோஹநார்த்தமாகக் காபாலாதிமதங்களை ப்ரவசநம் செய்து ஷண்மதஸ்த்தாபநாசார்யரானாரென்பது சங்கரமடத்தாருடைய பிருதாவளியாலும் ஆநந்தகிரிபண்ணின சங்கரவிஜயத்தா

னும் சகலஜகத்து மறிந்திருக்கையாலே அவர் அந்தமதங்களைக்கிழ்ச் சொன்னபடியே ப்ரவசநம்செய்யும்போது சிலக்ரந்தங்களைத் தத்தந் மதாநுகுணமாகப் பண்ணிக்கொடுத்தாரே யல்லது அவரொருநாளும்சைவதீக்ஷைபெற்றதில்லை. இதுவே மெய்யென்பதைக் காஞ்சீபுரம்காமாக்ஷியம்மன்கோயிலில் ப்ரதிஷ்டைசெய்து இப்போது சைவர்கள் பூஜைசெய்கிற சங்கரமூலவிக்ரஹபீடத்தை நன்றாகப்பார்வையிட்டால் அவர்மோஹநார்த்தமாகக் காபாலாதி ஷண்மதங்களையும் வெளியிட்டாரென்பது வெளியாகும். ஆகில் வைஷ்ணவமதமும் அதிலடங்குமே? எனில், அவர் வெளியிட்ட வைஷ்ணவமாவது வாமாசாரமுள்ளதுமாய்த்ருஷ்டிஸ்பர்சதோஷ வர்ஜ்யாவர்ஜ்யரஹிதமாய் மோஹநார்த்தமா யிருக்குமென்று ஆநந்தகிரிசொல்லுகையாலே அதுயாதவப்ரகாச புத்ரிகாப்ரவ்ருத்திதங்களுமாய் காபால பாஞ்சராத்ராதி சித்தமுமாயிருக்கும தாகையாலே விரோதமில்லை. இந்தசங்கராசார்யர் தானுனதன்மையாலே விஷ்ணுபரத்வவாதியே யல்லது சிவபரத்வவாதி யல்லவொன்னுமிடம், "భజగోవిన్దం భజగోవిన్దం భజగోవిన్దం మూఢమతే ।" என்றும், * "లక్ష్మీనృసింహ మమ దేహి కరావలమ్బమ్ ।" என்றும் பரோபதேச ஸ்வாநுஷ்டாநங்களாலேநன்றாகவெளியாகும். இதில் "భజగోవిన్దం భజగోవిన్దం ।" என்கிற விடத்தில் சங்கராசார்யருக்கு ஆசார்யர் கோவிந்தனென்னும் நாமதேயத்தை யுடையவராகையால் அவரையே சொல்லுகிறதென்று இம் முஸலாக்ரபுத்தி ப்ரலபித்தது. இப்படியாகில், "లక్ష్మీనృసింహ మమ దేహి కరావలమ్బమ్ ।" என்கிற ஸ்தோத்ரத்தில் யாரைச் சொல்லுகிறதென்று கேட்டால் இவர்என்செய்வரோ தெரியாது. இந்த லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தோத்ரத்திலே இரண்டாவது ச்லோகத்திலே "బ్రహ్మేన్ద్రరుద్ర మరుదర్క కిరీటకోటి సంఘట్టితాఙ్ఘ్రికమల అమలకాన్తికాన్త ।" என்று அழகியசிங்கர் திருவடிகளிலே பரசிவபெருமான் நிரபிமாநனாய் விழுந்து கும்பிட்டுக் கிடப்பானென்று சொன்னாரல்லவா?

இதுநிற்க, சங்கராசார்யருடைய ஆசார்யர் விஷ்ணுபரத்வவாதியாகாவிட்டால், அவர்கோவிந்தனென்னும் விஷ்ணுநாமதேயத்தையே தாம்விரும்பியிட்டுக்கொள்வதற்குக் காரணமென்னை? அது அவருடைய தமப்பனர் செய்தவேலையல்லவோவெனில், அப்போது அவருடைய தமப்பனரும் விஷ்ணுபாரம்யவாதியென்னுமிடம் சொல்லாமேயமையும். மேலும், "ధ్యాయం శ్రీపతిరూపమజస్రం" என்று எப்

* இந்த ஸ்தோத்ரம் (௰௨) ச்லோகமுள்ளது. இது தெலுங்குலிபியில் அச்சிட்டிருக்கிற வித்யாரண்ய சங்கரவிஜயத்தில் ௩௱௬ - ௩௱௭ - வது பக்கங்களில் காணலாம்.

போதும் ஸ்ரீமந் நாராயணனையே த்யாநம் பண்ணவேண்டுமென்று சங்கராசார்யர் சொன்னதற்குக் காரணம் யாது? அவர் ஆசார்யருடைய்ரூபத்தையே நாராயணனாக பாவனைசெய்து சொன்னாரெனில், அப்போது "గురురేవ పరంబ్రహ్మ।" என்கிறபடியே குருவை பரப்ரஹ்ம மாகவே பாவிக்கச்சொல்லி- யிருக்கையாலே, இந்த சங்கராசார்யர் தம்முடைய குருவை யெந்தத் தேவதையாகப்பாவனை செய்தாரோ அந்தத்தேவதையே பரப்ரஹ்மமாவதென்று அவருடைய துணிவுபெறப்படு மாகையாலே ஸ்ரீயஃபதியே பரம்ரஹ்மமென்பது அவருடைய கொள்கையென்று இவ்வேழையாலேயே சித்தாந்தம்செய்யப்பட்டது. மேலும் இவ்வவிவேகபுஞ்சம் சங்கராசார்யர் விஷ்ணுபாரம்யவாதி யல்லவென்றும், தன்னுடைய கொள்கையை நாட்டவேண்டுமென்றும், ஆவல்கொண்டு முன்பின்தெரியாமல் அவருடைய குருமரபுவணக்கத்தைத் தனக்கு சாதகமான ப்ரமாணமென்று தாஹரித்து நாட்டினார். அதிலே அடியிலே தொடங்கி, "।నారాయణం పద్మభవం వసిష్ఠం శక్తిం చ తత్పుత్ర పరాశరం చ । వ్యాసం శుకం గౌడపదం మహాన్తం గోవిన్దయోగీన్ద్రమథాస్య శిష్యమ్ ।" என்கிற குருபரம்பரையிலே முதலிலே பரதேவதையான ஸ்ரீமந் நாராயணனையே ப்ரதமகுருவாகச்சொல்லி, அவருடைய திருநாபீகமலத்திலே பிறந்த ப்ரஹ்மாவை ஸ்ரீமந்நாராயண சிஷ்யனான அநந்தரகுருவாகவும், பின்பு விஷ்ணுபுராணம்பண்ணும்படி பராசரர்க்கு அநுக்ரஹம் பண்ணினவஸிஷ்டரையும், அவர்க்குப்பின்பு விஷ்ணுபுராணகர்த்தாவாகிய பராசரர்க்கு ஸாக்ஷாத்குருவான ஶக்தியையும், பின்புவிஷ்ணுபுராணகர்த்தாவையும், பின்பு அவர்க்கு சிஷ்யராய் "నదైవం కేశవాత్పరమ్ ।" என்று தேவதா பாரமார்த்யத்தை ஸத்யம் பண்ணிஜயித்தவ்யாஸரையும், பின்பு, அவர்க்கு சிஷ்யராய் ஸ்ரீபாகவத முகத்தாலே த்வாதஶாக்ஷரியை த்வாதஶஸ்கந்தத்தாலும் விவரித்து நாராயணனே பரனென்று நாட்டி, தக்ஷயஜ்ஞப்ரகரணபாண யுத்தாதிகளில் ருத்ரனுடைய வெளிவரவெல்லாம் வெளியிட்டு "యచ్ఛౌచనిస్సృతసరిత్ప్రవరోదకేన తీర్థేన మూర్ధ్న్యధికృతేన శివశ్శివో౽భూత్ ।" என்று அசிவனான ருத்ரன் சிவனானமைக்கேதுவையும் நன்றாக வெளியிட்ட சுகரைச்சொல்லி யிருக்கையாலே சங்கராசார்யருடைய குருபரம்பரை யெல்லாம் விஷ்ணு பாரம் யபரமாயிருக்குமதை யறியாதே பிதற்றுவ தென்னமடமை. சங்கராசாருக்கு த்ரிமூர்த்தி சாம்யஞ் சித்தாந்தமாகி லொரு ஸ்த்தோத்ரத்திலாவது தம்முடைய குருவை பரசிவனாக பாவனைசெய்யா தொழிவரோ? தம்முடைய குருபரம்பரையில் பரசிவன்தொடங்கி வரலாறு சொல்லாதொழிவரோ? "పత్యురసామంజస్యాత్ ।" என்கிற அதிகரணத்

தில், சிவனை ஸர்வஜ்ஞ னென்கைக்கு ஆகமத்தையொழிய ப்ரமாண மில்லை, ஆகமம் ப்ரமாணமென்பது சிவன் ஸர்வஜ்ஞனுனலொழியக் கடைப்படாதென்று அந்யோந்யாஶ்ரயம் சொல்லி சைவமதத்தை நிர்மூலம் செய்துவிட்டு, "ఉత్పత్త్యసంభవాత్" என்னும் அதிகரணத் தில் நாராயணனேபரனென்று பாஞ்சராத்ரத்திற்சொன்னபடியைச் சரியென்றொப்புக்கொண்ட ப்ரகாரத்தைக் கீழே விளக்கினோமாகை யால் சங்கராசார்யர் விஷ்ணுபாரம்யவாதி யென்பதில் எள்ளளவு மையமில்லை. மேலும் "తత్త్వసంఖ్యేతి విష్ణుపురాణాత్" என்றதுவும் அவர் விஷ்ணுபாரம்யவாதி யென்பதற்கு முக்யப்ரமாணமா யிருக்கின்றது. அத்வைதமாத்ரத்தைக் கருதி யிப்படி சொன்னரெனில், அந்த விஷ்ணு புராணத்திலே அடிபிடித்து நுனிவரையில் விஷ்ணு பாரம்யம் சொல்லாநிற்க, அப்புராணத்துக்கு அதுவே தாத்பர்யங் கொள்ளாமல் அத்வைதமாத்ரத்திலே தாத்பர்யமென்பது கூடாது. லைங்காதி புராணங்களும் அத்வைத பரமென்று ஶ்வேதாஶ்வதர பாஷ்யாதிகளிலே சங்கராசார்யரே சொல்லி யிருக்கையாலே விஷ்ணுபுராண மொன்றே அத்வைதபரம் அல்லாதவை யெல்லாம் த்வைதபரமென்று சங்கராசார்யருக்குக் கருத்தெனல் கூடாது. ஆகையாலே, "యూంప్లోపన్యాసాత్" இத்யாதி ஸூத்ரங்களில் விஷ்ணுபாரம்ய ஸ்தாபகமான விஷ்ணு புராணத்தையே யுதாஹரிக்கையாலும், பலவிடங்களிலும் ஸ்ரீமோக்ஷதர்மத்தில் நாராயண பரத்வத்தையும் ஸ்ரீபாஞ்சராத்ரத்தையும் ப்ரதிஷ்டாபநம் செய்த மஹாபாரதத்தையே பலஸூத்ரங்களிலும், உதாஹரிக்கையாலும், லைங்காதிபுராணங்களை யிப்படியாதரிக்காமையாலும் அவர் விஷ்ணுபாரம்யவாதி யென்பது சிறுகுழந்தையுமறியும். இங்ஙனமிருக்க, இவையாவுமுணராமே, இவ்வறிவிலியார், பரமபாகவதரும் பரசமயக்கோளரியுமாகிய மூடிச்சூர் அப்பாவு முதலியார்செய்த, க்ரந்தங்களிலுள்ள விஷயங்களுக் குத்தரமொன்று மெழுதாமல் தூஷிக்கத் தொடங்கினதென்ன நெஞ்சுரம்.

இதுநிட்க்க, இச்சைவாத்திரிகள், முற்காலத்து, புலியைப் பார்த்து சூடிக்கொள்ளும் பூனையைப்போலே உடம்பெல்லாம் சூடுண்டு திரிந்து, பின்பு சங்கராசார்ய ருபதேசத்தால் சைவாகமத்தில் முக்காலே மூன்றுவீசம் பங்கையும் அப்ரமாணமென்று கழித்து விட்டு, சூடுண்பதையுந்தவிர்ந்து, இப்போது கல்லையும் மயிரையும் சாம்பலையுமே சுமந்துகொண்டு திரியாநின்றன. இம்மூட்மதி, சிவாதிக்யரத்நாவளி யென்னும் சுவடியில், ௰உ-வது பக்கத்தில், சைவாகமங்களுக்கு வேதபாஹ்யத்தன்மை யெந்த ந்யாயத்தாலே கூறுவதென்று புடிக்குவிரையுள்ளே போம்படி கூவின வாயைக்கொண்டு

ஷை சுவடி சு - வது பக்கத்தில், சவபஸ்ம நராஸ்த்தி கபாலதார ணம் குருதார கமநம் கபாலபாத்ரம் சுராபாநம் தொடக்கமான வற்றைச் சொல்லுகிற வாமபாசுபதம் சௌமம் லாகுலபைரவம் முதலான சைவாகமங்களை யெல்லாம் வேதபாஹ்ய மென்று கொண்டு த்யாஜ்யமென்று சொன்னது என்னமட்டித்தநம். இப்படிப் பட்ட மடையன் அப்பாவு முதலியாரைப் பழிப்பதாகிய பாவத் தைத் தெய்வம் சஹிக்குமா? ஆகையாலல்லவோ உடனே இப்பாவி வாயழுகிப் புழுத்துப் புரண்டுபோனுன். இச்சைவர் பூர்வகாலத்தில் உடம்பெங்கும் சூடுண்டமைக்குக் கணக்கு வழக்கில்லை, அதெங்ஙனேயென்னில், "ప్రద్యుత్తప్రోహిణశ్శైవా లిఙ్గాఙ్కితభుజద్వయాః ఫాలే శూలాఙ్కితా రౌద్రా భక్తాలిఙ్గేన చిహ్నితాః। డమర్వఙ్కధరా బాహుద్వయే తూగ్రాస్తథా హృది। శూలంశిరసి లిఙ్గఞ్చ ధారిణో జఙ్గమాస్తథా। లలాటే హృదయే నాభౌ బాహ్వోశ్శూలేన చిహ్నితాః। షడుంపాశుపతాస్తత్వా ప్రోచుః కారణమీశ్వరః" என்று, சைவர்கள் - சைவரென்றும், ரௌத்ரரென்றும், பக்தரென்றும், உக்ரரென்றும், ஜங்கமரென்றும், பாசுபதரென்றும், ஆறுவகையாகவும், அதில் இருகையிலும் சிவ லிங்கத்தாலே சூடுண்டவர்கள் சைவரென்றும், சூலத்தாலே நெற்றி யிற் சூடுண்டவர்கள் ரௌத்ரரென்றும், சிவலிங்கத்தாலே நெற்றியிற் சூடுண்டவர்கள் பக்தரென்றும், இருகையிலும் மார்பிலும் தமருகத் தாற் சூடுண்டவர்கள் உக்ரரென்றும், சூலத்தாலும் லிங்கத்தாலும் தலையிலே சூடுண்டவர்கள் ஜங்கமரென்றும், நெற்றியிலும் மார்பி லும் கொப்பூழிலும் கைகளிலும் சூலத்தாற் சூடுண்டவர்கள் பாசுபத ரென்றும், சொல்லப்படுவார்கள். இவ்வாறு வகைச் சைவர்களும் சங்கராசார்யராலே திருந்தி, சூடுண்ணச்சொல்லுகிற சிவாகமங்களை யெல்லாம் வேதபாஹ்யமென்று கைவிட்டுச் சங்கரமதத்திலே சேர்ந்தார்களென்பது புராணவ்ருத்தாந்தங்களைக் கேட்டால் நன்றாக வெளியாகும். இப்படி, "ఇతోభ్రష్ట తతోభ్రష్టః" என்கிறபடியே சைவாகமத்தையுங் கைவிட்டு வேதத்திலுஞ் சேரப்பெருதே ஆந்த ராளிகராய், குண்டகோளகரான தமது கதியறியாமல், பரமவைதிக மான பஞ்சஸம்ஸ்காரத்தாலே பரமபாகவதரான அப்பாவுமுதலியா ரைக்கண்டிப்பது, சண்டாளன் வசிஷ்ட்டரை நிந்திப்பதுபோலல்ல வா; ஆவா! சை! சை!! இந்தச்சூரன் பிழைத்திருந்தால், பாதரக்ஷா ப்ரயோகத்தால் தந்த விதளநம்பண்ணி, இவரை சைவசித்தாந்த ஸ்த் தாபகராகமதித்திருந்த சைவரெல்லாம் அவமதித்துநகைக்கச்செய்ய லாம். இப்படி நேரிடுமென்று தானே சீக்ரமாக மேனாட்டுக்கு விஜ

யஞ்செய்தனர். நன்று! நன்று!! இதுநிற்க, இந்தவிழுதைத் தலைவர் அப்பாவுமுதலியாரைக் கண்டித்து விட்டுத் தாமெல்லாந் தெரிந்தவரைப்போலே சுத்தாத்வைதபரமாக சங்கராசார்யர் உதாஹரித்த வாக்யங்களில் "தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே" என்று நூலிற்சொன்ன மூவிடத்தையும் வகுத்துக்காட்டினர்; அங்குத்தன்மையிடமாவது சொல்லுவானிடத்து நிற்குஞ்சொல், முன்னிலையிடமாவது சொல்லுவான் முன்னிற்கும் கேட்போனிடத்து நிற்குஞ்சொல், படர்க்கையிடமாவது அவ்விருவரிடத்திலும் நில்லா தயலிற்படர்ந்துநிற்குஞ்சொல்; இங்ஙனமுண்டான ஸ்த்தலத்ரய லக்ஷணம் சுத்தாத்வைத ப்ரஹ்மபரமானவாக்யத்தில், கேட்பானுஞ் சொல்வானுமில்லாமல் இவ்விருவரைக்காட்டில் அயலிடமுமில்லாமல், ஸஜாதிய்ய விஜாதிய்யஸ்வகதபேத ரஹிதமாய் நிர்விசேஷ சிந்மாத்ரமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிறதாக சங்கராசார்யரால் சொல்லப்படுகிற சுத்தாத்வைதவாக்யங்களிலே, சொல்வானும் கேட்பானும் அயலானுமாகிற மூன்றுபேதத்தோடே கூடின மூவிடவிலக்கணத்தை யடைக்கத்தேடுகிறது என்னபேதைமை. இப்படி சுத்தாத்வைதவாக்யங்களிலும் மூவகைப் பட்ட பேதமுண்டென்றால், "𑌅𑌹𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿" இத்யாதி ஶ்ருதிகளும் பேதஶ்ருதியா யநிகையாலே இவற்றை சங்கராசார்யர் சுத்தாத்வைத ஶ்ருதியென்பதெப்படிகூடும். இதுமட்டோ! "𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" என்கிறவாக்யமும், "அயம்" என்று முன்னிற்பதைச் சுட்டிக் காட்டா நிற்பினும், முன்னிற்பது கேட்பானல்லாமையாலே அவ்வாக்யத்தைப்படர்க்கையாகக் கொண்டாற்போல "𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" என்கிற வாக்யமும், ப்ரஹ்மமானது ப்ரஜ்ஞாந மயமாயிருக்குமென்று சொல்வானையும் கேட்பானையும் விட்டுப் படர்ந்து செல்கையாலே இதையும் படர்க்கை வாக்யமென்றே கொள்ளவேண்டியிருக்க, அதைப் பொதுவாக்யமென் றிவ்வவிவேககணதிபர் ஊளையிடுவதற்குக் காரணம் யாதோதெரியவில்லை. இதைப்பொதுவாக்யமென்று கொண்டால் இதுக்குமேலே சிறப்புவாக்யமொன்று தேடவேண்டும்; அப்படியொன்றைத்தேடினும், பொதுவாக்யத்திற் சொல்லப்பட்ட பொருளுக்கு அச்சிறப்புவாக்யமானது பொதுவாக்யத்திற் சொல்லப்படாததொரு புதுமை காட்டுகிறதென்று கொண்டா லொழிய அது சிறப்பு வாக்யமாகமாட்டாது; அப்படி யவ்வாக்யத்தி லொருபுதுமையையுஞ் சொல்லுகிறதாகக் கொள்ளில், நிர்விசேஷவாத மடியற்றுப்போம்; ஆகையாலே அப்பாவுமுதலியாரைக் கண்டித் திவ்விழுந்த யூளையிட்டதெல்லாம் பேயூளையாகிவிட்டது.

இதுநிற்க, " బాణత్వం వృషభత్వమర్ధవపుషా భార్యాత్వమార్యాపతే। ఘోణిత్వం సఖితా మృదఙ్గవహతా చేత్యాదిరూపం దధౌ । త్వత్పాదే నయనార్పణఞ్చ కృతవాన్ త్వద్దేహభాగో హరిః । పూజ్యాత్పూజ్యతరస్స ఏవ నహి చేత్కో వా తదన్యోధికః ।" என்று சங்கராசார்யர் மோஹநார்த்தமாக சைவமதப்ரவர்த்தநம் செய்தபோது சைவர்களுக்குச் செய்து கொடுத்த சிவாநந்தலஹரியிலும், பூஜ்யாத் பூஜ்யதமனாய் ஸர்வோத்தமனான ஸ்ரீமந்நாராயணனே யிந்தச் சிவனை சர்வ ப்ரகாரத்தாலும் நிர்வஹித்தொரு பொருளாக்கினான்; அவனப்படி செய்யாவிடில், இந்தச் சிவனை யாவர் மதிப்பரென்பதையறியாதே; இந்தநிர்மூடன் இந்த ஸ்லோகத்தைத் தனக்குப் பரதத்வநிர்ணயகமான பரமோபநிஷத்வாக்யமாகக் கொண்டு உதாஹரித்ததென்ன மௌட்யம். இதிலே, கண்ணைப்பிடுங்கி நாராயணன் சிவனை யர்ச்சனைசெய்ததும், பன்றியாய்ப் பூமியைக் கிழித்துச்சென்றதும், ஆகியவெல்லாம் மாயாசீதையைப்போல மாயா நாராயணன் கதையென்று கீழேவிளக்கினோம், அப்படிக்கன்றி மெய்யாயிருப்பினும் ஸர்வேஸ்வரன் புத்தாவதாரம் பண்ணி பௌத்தரை யழித்தாற்போலே, ஆசுரப்ரக்ருதிகளான சைவரை யழிக்கைக்கு, மோஹகனான ருத்ரனிடத்தில் பலபடியாலும் தான் தாழநின்று சைவர்களுக்கெல்லாம் விபரீத புத்தியை விளைத்தா னித்தனையென்னு மிடம் கைலாச யாத்ரையில், "క ఇతి బ్రహ్మణో నామ ఈశోహం సర్వదేహినామ్ । ఆవాం తవాఙ్గే సంభూతౌ తస్మాత్కేశవనామవాన్ ।" என்று சிவபெருமா னுண்மையை விளக்கி, கண்ணன் திருவடிகளிலே சரணம் புகுந்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டபடியை யெல்லாங்கண்டு சகலதேவர்களும் மஹர்ஷிகளும் கண்ணனல்லால் தெய்வமில்லையென்று பரத்வநிர்ணயம் செய்தபடியை, " అసత్కీర్తనకాన్తార పరివర్తనపాంసులామ్ । వాచం హరికథాలాపగఙ్గయైవ పునీమహే ।" என்று எச்சில்வாய் சுத்திபண்ணின வ்யாசர் வெளிப்படுத்துகையாலும்; சிவபெருமானையே பரதேவதையாகப்பற்றின கண்டாகர்ணாதிகளுக்குக் கண்ணன் திருவடிகளையே காட்டிக்கொடுக்கையாலும் நிச்சயிக்கப்படுமல்லவா? அவிமுக்த க்ஷேத்ரத்திலே சிவபெருமானையே தஞ்சமாகப்பற்றின சைவர்களுக்கு மோக்ஷங் கொடாவிடில் பவிஷ்யமாறிப் போமே, என்ன செய்வோமென்று சிவபெருமான் சித்தம் வருந்திச் சிந்தை செய்து சக்ரவர்த்தித் திருமகனைச் சரணம்புக, " అవిముక్తే తవ క్షేత్రే సర్వేషాం ముక్తిసిద్ధయే । అహం సన్నిహితస్తత్ర పాషాణప్రతిమాదిషు ।" என்று ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகனும் அர்ச்சாவதார ரூபியாய் அங்கெழுந்தருளி

யிருந்து தன்னைச் சரணம் புகுந்த சிவனைப்பற்றினு ரெல்லார்க்கும் மோக்ஷங்கொடுக்கக் கடவேனென்று அபயப்ரதாநம் பண்ணின நாக ஸ்ரீராமதாபிந்யுபநிஷத்திலே யோதப்பட்டது. ஆகையாலே பரமபுருஷனை ஸ்ரீமந்நாராயணன் அர்ஜ்ஜுநனை யொருவ்யாஜமாக்கிக்கொண்டு தானேஸௌலப்யாதிஸயத்தாலே தௌத்யஸாரத்யாதி ஸர்வவ்யாபாரங்களிலும் அந்வயித்து துர்யோதநாதிகளை நிரஸித்து, "பார்த்தஏவதநுர்தரஃ" என்று லோகப்ரசித்தமாகும்படி வெற்றியை அர்ஜ்ஜுநன் தலையிலேவைத்து, பின்பு அவனுக்குக் காண்டீவம் தலைச் சுமையாம்படி பண்ணி மசக்குப்பர லறுத்தாற்போலே; ருத்ரனையு மொரு வ்யாஜமாக்கிக்கொண்டு தானே சத்ருநிரஸநாதிகளுக்கு வேண்டிய சர்வோபகரணமுமாய் த்ரிபுரநிரஸநாதிகளைச் செய்து "த்ரிபுரக்ந த்ரிபுராந்தகஃ" என்னும்படி வெற்றியை ருத்ரன் தலையிலேயிட்டு, ஆசுரப்ரக்ருதிகள் மசக்குப்பரலிட்டு மயங்கும்படிபண்ணி, அவர்களையு மழித்து, பின்பு குழலசைய‌க் குழலசைய வென்பாரைப்போலே சைவர்களெல்லாரும் போரப் பொலியச் சுவர்மிசைச் சார்த்திவைத்து ஈன்றோளிருக்க மணைநீராட்டி மாட்டாத்தவத்தராய்ப் பேசுகிற பச்சைப்பசும் பொய்களைக்கேட்டு நெற்பரிமாறின மொட்டைத்தலையன்போல சிவன் தன்னைக் கேசவாத்பரனாக அபிமானித்திருமாந்திருந்தவளவிலே; சைவர்களெல்லாரும் ஸ்வாமித்ரோஹிகளென்பதற்கு மச்சமான பஸ்மாசுரனைக்கிளப்பி, சிவபெருமானுடைய த்ரிபுராந்தகத்வமெல்லாம் வெட்ட வெளிச்சமாம்படி பூசையிடுமவனது ரத்தப்பூசைகொண்டவ னெண்டிசைகளுமோடி யொளிக்கக்கொம்புகொடியெல்லாம் சிவலிங்கமாக்கிச் சிவனொளித்தமையை நாமெல்லாருங் கண்டு நகைக்கும்படி தரங்கெடுத்தும், பாணயுத்தத்திலே "க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜானே த்வாம் புருஷோத்தமம்" என்று மேனுணித் தார்வாயாலே விஷ்ணு பாரம்யத்துக்கு மேலெழுத்திடுவித்து மசக்குப்பரலறுத்து விட்டானாகையாலே "பாணத்வம் வ்ருஷபத்வம்" இத்யாதி சங்கர வாக்யத்தால் சிவனுக்குப் பரத்வம் சித்திக்குமென்பது "யஸ்யமந்த்ரீசகோப்தாச ஸுஹ்ருச்சைவ ஜநார்தநஃ"என்கிற வசநத்தாலே பாண்டவர்க்குபரத்வம்சித்திக்குமென்பதுபோலேபேதைமைத்தனத்தையே விளக்குமென்க. ஆகையாலே, "பாணத்வம்"என்றது "விஷ்ணு தேஜஸம்" என்கிற ஶ்ருதியிலோதப்பட்டபடியே உபஸ்த்யாகத்தாலே எம்பெருமானை யாராதித்த தேவர்களுடைய மநோரதத்தைத் தலைக் கட்டுகைக்காக எம்பெருமான் ஸ்வஸக்தி விசேஷத்தாலே நாராயணாஸ்த்ரம்போல அக்நியநீக ஸோமசல்யாதிகளை யதிஷ்டித்து நின்றபடி சொல்லுகையாலே இதுவும் பகவத்பரத்வ ப்ரகாசகமா

மத்தனை. அல்லாதபோது அர்ஜ்ஜுநபாணத்தில் பசுபத்யதிஷ்டாநமுண்டென்னு மிடம் பாசுபதாஸ்த்ர வ்ருத்தாந்த வேத்யமாகையாலே, சிவபெருமானைக் காட்டிலும் அர்ஜ்ஜுநன் பரதத்வமாகவேண்டுமிறே. இப்படியே "வ்ருஷபத்வம்" என்கிற விதுவும் விஷ்ணுமக்த்யுபப்ரும்ஹிதமானபாணாதிகளை யெலியெலும்பனான ருத்ரன்தரிக்க மாட்டாமையாலே "విష్ణురాత్మా భగవతో భవస్యామిత తేజసః। తస్మాద్ధను జ్యాసంస్పర్శం స విషేహే మహేశ్వరః" என்கிறபடியே ஸ்ரீமந்நாராயணனே ருத்ரனையும் ஸ்வமக்தியாலே யிடுக்கிக்கொள்ள வேண்டினாற்போலே மூஞ்சூறுடும் பெருச்சாளியோடும் விரவி நிற்கவற்றான சிவன் காளைமாடும் விஷ்ணு மக்த்யுப ப்ரும்ஹிதமான ருத்ரரூபத்தைச் சுமக்க மாட்டாமையாலே அதனையு மெம்பெருமானே யிடுக்கிக்கொள்ள வேண்டினமையைச் சொல்லுகையாலே அதுவும் பகவத்பரத்வத்துக்கே ப்ரகாசகமாகிறது. அல்லாதபோது லிங்கஹ்ருதயத்திலே நிற்கிற உந்மந்யந்த பரசிவமானது லிங்காக்ரத்திலுள்ள மாந்த்யதீதகலையையும், சிவதத்வ சக்தி தத்வங்களையும், அநாமிரிதம் தொடக்கமாக நிவ்ருத்தி முடிவாகவுள்ள பதினைந்து புவநங்களையும், அகாராதி விஸர்க்காந்தமான பதினாறு ஸ்வரங்களையும், ப்ரணவமாகிற பதத்தையும், சிவேசாநாஸ்த்ர மந்த்ரங்களையும், ருத்ரர்களையும் சுமந்துகொண்டு கீழேநிற்கையாலே அது அபரதத்வமாய் அதற்குமேலுள்ள கீழ்ச்சொன்ன கலாதிகளே பரதத்வமாய் ப்ரசங்கிக்குமல்லவா? மேலும் சந்திரனை சிவனெப்போது மொக்கத்தலையாலே சுமந்துகொண்டு நிற்கையாலே சந்திரனே பரனாய், ஸௌமிகமமே சாஸ்த்ரமாய், குருதாரகமநமே தர்மமாகவேண்டிவருமல்லவா? ஆகையாலே உலகத்திலே பாட்டன் பேரப்பிள்ளையைச் சுமக்குமது கடமையா யிருக்கையாலே சர்வேமவரனுக்குப் பேரனாகையாலே மஹேமவரனென்று அவன்பேரைக் கொண்டிருக்கிற சிவனைப் பாட்டனானவிஷ்ணு சுமந்தானென்பதும் சிவனுடைய பேதைமைத்தனத்தையேகாட்டுமல்லவா? "ఏష సర్వభూతాన్తరాత్మా పహతపాప్మా దివ్యోదేవ ఏకో నారాయణః" என்று வேதபுருஷர்களாலே முறையிடப்பட்ட பரதத்வமானது பிபீலிகாதி சர்வ பூதாதாரமாயிருக்கையாலே அதுக்கு ருத்ரதாரகத்வம் குணமேயல்லது தோஷமல்ல. "அர்ச்சகவபுः" என்கிற இதுவும் ஸ்ரீமந்நாராயணனே சர்வாந்தராத்மா வென்பதற்கே ப்ரகாசகம். எங்ஙனே யென்னில், லிங்கபூசையிலே ஆவாஹநக்ரமத்திலே த்வாதமாந்த ஸ்திதமாகிய உந்மந்யந்த பரசிவத்தை அவ்யக்தநாத களாயுக்தமாக்கி அஹம் பாவனையாலே பரிசுத்தார்ச்சக ஸ்வரூபத்தை லிங்க ஹ்ருதயத்துக்

குள்ளே ஆவாஹநம்செய்து பூஜைசெய்யக்கடவனென்று சொல்லுகையாலே உன்மந்யந்த பரசிவனே அர்ச்சகனாவது. அர்ச்சகனேதான் உன்மந்யந்த பரசிவனாவதென்னுமிடம் பெறப்படுதலால் விஷ்ணுவை சிவலிங்கார்ச்சகராகச் சொல்லுகிற விதனாலே சிவலிங்கத்திலே விஷ்ணுபாகமென்று சொல்லப்பட்ட ஹ்ருதய மண்டலத்தி னடுவே சிவலிங்காந்த ராத்மாவாய், "இலிங்கத்திட்ட புராணத்திரும்" இத்யாதியிற் சொல்லுகிறபடியே எம்பெருமான்தானேசிவத்விஜாஹ்ம் பாவநாவேத்யனாயிருக்கும் பரதத்வமாவதென்று சித்திக்குமல்லவா? மேலும், சிவஞனவன் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் நீர் என்னைக்கௌரவித்தாலொழிய உன்மத்தனானவென்னை யுலகத்தார் நம்பார்க ளாகையாலே தேவரீர் நியமித்தருளிய மோஹநக்ருத்ய மென்னால் தலைக்கட்டப்போகா தென்று முறையிட்டுக்கொண்டதற்காக, மோஹநார்த்தமாக சிவபூஜாதிகளை யெம்பெருமான் செய்தபடியை நினைத்து "அர்ச்சகவபுः" என்கிற தாகையாலே இதுவும் பகவத்பரத்வத்துக்கே ப்ரகாசகமாகிறது. இப்படியே "பார்யாத்வம்" என்றது நாராயணியென்னும் பெயரையுடைய காளியானவள் பகவதாத்மகமாயாம்சை யாகையாலே யாக்கடவது; அல்லாதபோது ஆணைக்கண்டு மோஹித்த ருத்ரனுக்கே யல்லவோ ஸ்க்காலித்யம் சித்திப்பது. இப்படியே "கோணித்வம்" என்பதும் மோஹநார்த்தம். எங்ஙனேயென்னில், ஸ்ரீமந்நாராயணன் இந்த கல்பாதியிலே ப்ரளயசாகரத்திலே முழுகிக்கிடந்த பூமியையெடுக்கைக்காகவே ஸ்ரீவராஹாவதாரம் பண்ணினானென்னு மிடம் சர்வலோக வேதப்ரசித்தமாய், "వరాహకల్పే", என்று சகல ஶ்ரௌத ஸ்மார்த்த கர்மசங்கல்பங்களிலும் முறையிடப்படாநிற்க; இந்த பூமியில், அத்திக்காயி லறுமான்போலவும், மெல்லியலாக்கை க்ரிமிபோலவும், அதிக்ஷுத்ரர்களான கம்மாளராலே நாட்டப்பட்டதொரு குழவிக்கல்லினுடைய அடியை யறிகைக்காகவே விஷ்ணு வராஹாவதாரம் பண்ணினாரென்றால் இதுமெய்யென்று செவிதாழ்ப்பாரார். மேலும் "అచ్యుతః కూర్మశిలాయాన్తు మాధవః కూర్మరూపధృత్ । మేరుపృష్ఠమృషిః పీఠం ద్యుతం లిఙ్గమానుసారమ్ । ఊర్ధ్వం కూర్మశిలాయాశ్చ సేశానా శక్తిరచింతా । శక్తిః కూర్మశిలా సీనా క్షీరోదసిత విగ్రహా । మాతో బీజాఙ్కురాకారా వరదా చాభయప్రదా । పాశాఙ్కుశ ధరా శక్తిః క్రియాహ్యాధార రూపిణీ" என்று, லிங்கத்துக்கு ஆதாரமான சக்திக்கும் கீழே கூர்மாவதாரமிருக்கிறதாய் சைவாகமங்கள் சொல்லாநிற்க, அதற்கு விரோதமாய் விஷ்ணு சிவலிங்கத்துக்கடியறியாமல் வராஹாவதாரமாகப் பிறந்து தேடினானென்பது

பச்சைப்பசும்பொய்யும் ஸ்வவசநவிருத்தமுமாய்விட்டது. மேலும், இப்படி சிவனுடைய கீழ்ப்பாதத்தைக் கண்டறியாத விஷ்ணு வ்ராஹநமாய் சிவனைச் சுமந்தாரென்பதும் பரஸ்பரவிருத்தமாய் பரிஹாஸநீயமாய்விட்டது. ஆகையாலே, தமயந்தியினுடைய முகத்துக்கு த்ருஷ்டி சுற்றுதற்காகவே ப்ரஹ்மாவானவன் இந்தச் சந்திரனை ஸ்ருஷ்டித்தானென்று கவிகள் வர்ணிக்குமாப் போலே, லிங்கஸ்தோத்ரார்த்தமாக விஷ்ணுவினுடைய வராஹாவதாரமும் லிங்கத்தினுடைய அடியைக்கண்டு பிடிக்கைக்காகவேயென்று வர்ணித்துச் சொல்வதுகொண்டு "கோணித்வம்" என்று சொன்னாரல்லது வாஸ்த்வமாகச் சொன்னாரல்லர். மேலே "சகித்வம்" என்று தோழனமை சொல்லுகையாலே, இதிலே விஷ்ணுவுக்குப் பரசிவனோடு சாம்யஞ் சொல்லுகையாலே இப்படியுயர்ந்தவன் தாழநிற்பதெல்லாம் அவாஸ்தவமென்னுமிடம் சொல்லாமே யமையுமல்லவா? அன்றிக்கே, "ம்ருதங்கவ்ஹதாச" என்றதனாலே நடநசபாபதி யென்கிற தேவடியாளுக்கு விஷ்ணுவானவர் நட்டுவனாய்க் கொண்டு குருவானா னென்கையாலே இதனாலும் சிவனுக்கு அபரத்வமும் விஷ்ணுவுக்குப் பரத்வமும் சித்திக்கும். மத்தளமடித்தல் இழிதொழிலல்லவோ? எனில், கூத்தாடுகை அதைக்காட்டிலு மிழிதொழிலாயே யிருக்கும். தில்லைத் திருச்சித்ர கூடத்திலே அரவணையிலே சாய்ந்தருளியும், ஆசநத்திலே வீற்றிருந்தருளியும் எம்பெருமான் தன்னுடைய ப்ரபுத்வாநுகுணமாகக் கூத்தைக் கடாக்ஷியாநிற்க, கூத்தையெல்லாங் குத்தகையெடுத்து நடநசபாபதியானவன் எம்பெருமான் திருவடிவாரத்திலே தன்னுடைய சேஷத்வாநுகுணமாக தெற்கு முகமாய்நின்று கூத்தாடி எம்பெருமானை யுகப்பிப்பதை யெல்லாருமறிந்திருக்க, ஸர்வேஸ்வரன் கூத்தாடிக்கு சேஷமாய்விட்டானென்று சொன்னால் ஒருவரும்நம்பமாட்டார்களல்லவா? "த்வத்பாதே நயார்ப்பணம்" என்றது, ருத்ரனைத் தன் முன்னடிபார்த்து நடக்கும்படி யெம்பெருமான் செய்தருளினானென்று சொல்லுகிறது. "[Grantha text]" என்று சொல்லக்கடவதிறே. இப்படியின்றிக்கே ஸ்ரீயப்பதியான நாராயணன் சிவபூஜையாகிற செய்யாக்காரியத்தைச் செய்யத்தொடங்கினதாகவும், அவர்க் கிரண்டு தாமரைப்பூவுக்கும் கதிகெட்டுப்போனதாகவும், அக்குறையைத் தமது கண்ணாலே தலைக்கட்டினதாகவும்புளுகத்தொடங்கினால்; அதினாலும் "[Grantha text]" என்று பரப்ரஹ்மலக்ஷணமாகச்சொல்லப்பட்ட புண்டரீகாக்ஷத்வம் ஸ்ரீமந்நாராயணனுக்கே யுள்ளதென்னு முண்மையே வெளிப்படுமன்றி இப்பொய் புனைந்தாருடைய

எண்ணம் தலைக்கட்டாது. "த்வத்தேஹபாகோஹரிঃ" என்றதும் "வலத்தனன்றிரிபுரமெரித்தவன்" என்கிறபடியே ஸ்ரீமந்நாராயணனுக்கு சிவன் வலது பக்கத்திலே யிருக்கும்படியைச் சொல்லுகிறது. "పూజ్యాత్పూజ్య తరస్సఏవ నహిచేత్కోవాతదన్యోధికః" என்றது எம்பெருமானை யொழிந்தார்க்கு உத்கர்ஷம் பகவத்பரிக்ரஹ நிபந்தநமாகையாலே ஸ்ரீமந்நாராயணன்தான் ஸ்வதஏவ பூஜ்யாத்பூஜ்யதரனாயிருக்கையாகிற தன்னுடைய மேன்மையைப்பாராதே சௌலப்யத்தாலேயாதல், மோஹநார்த்தமாகவாதல், தான்தாழநின்று இக்காடிச்சால் மூலையானைப் பொருளாக்கா தொழிவனாகில் அவிஷ்ணுவா யிருந்துவைத்து நான் அதிகனென்கைக்கு இவனாரென்னு மிடத்தைத் தாத்பர்யவ்ருத்தியாலேகாட்டுகிறது. ஆகையாலே, இந்தஶ்லோகமே சங்கராசார்யர் விஷ்ணு பாரம்யவாதி யென்கைக்கு அந்யநிரபேக்ஷமான[illegible]சாதநம். மேலே, "విరిఞ్చిః పఞ్చత్వం వ్రజతి హరిరాప్నోతి విరతిమ్। వినాశం కీనాశో భజతి ధనదో యాతి నిధనమ్। వితన్త్రీ మాహేన్ద్రీ వితతిరపి సమ్మీలతి దృశః। మహాసంహారే஽స్మిన్ విహరతి సతి త్వత్పతిరసౌ" என்கிற ஶ்லோகத்திலே "அஸ்மிந்" இந்தஜகத்திலே, "மஹாஸம்ஹாரே" மஹாப்ரளயகானது, "விஹரதிஸதி" விளையாடாநின்றவளவிலே-ஆக மஹாஸம்ஹாரதஶை வந்தவளவிலே யென்றபடி, "விரிஞ்சிঃ பஞ்சத்வம் வ்ரஜதி" உன் மாமனாரான சதுர்முகன் புரண்டு போகாநிற்பன், "ஹரிঃ" எல்லாரையும்- ஸம்ஹரியாநின்றுள்ள எம்பெருமானானவன், "விரதிமாப்நோதி" கையொழிந்து, தூங்காநிற்பன், "விநாஶங்கீநாஶோ வ்ரஜதி" யமன் தானும் "ప్రభవతి సంయమనో మమాపి విష్ణుః" என்கிற யமனுக்கும் யமனை யெம்பெருமானாலே ஸம்ஹ்ருதனா யழிந்துபோகாநிற்பன், "தநதேத்யாதி" குபேரனும் அழிந்து இந்த்ரகணங்களும் ஸம்மீலிதாக்ஷணங்களா யழிந்துபோம், "ஹேஸதி" வாராய்தேவியே! "த்வத்பதிঃ" உனக்குபர்த்தாவான ருத்ரனும் "నశ్యన్ః" என்கிறபடியே அழிந்துகொண்டு நிற்பனாகையாலே, "அஸௌ" அதோலோகஸ்த்தனைய்க்கொண்டு பட்டர்க்கை யானாய் கண்ணுக்குக் காணா தொழிவானென்று சொல்லுகையாலே இதுவும் விஷ்ணு பரத்வத்தையே ஸ்தாபியாநின்றது. காளியைப்பார்த்து உன்னுடையபதி பட்டுக்கிடப்பனென்றால் கோபம்வருமோவென்று பயந்து, "அஸௌ" என்றுலோகாந்தரத்துக் கெழுந்தருளுவரென்று இலை மறைவு காய் மறைவாய் ருத்ரஸம்ஹாரத்தைச் சொன்னாராகையாலே லீலாவ்யாபார வ்ரதனைய்த் தூங்குகிற ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்று நாட்டப்பட்டதல்லவா? "సఏకో రుద్రో ధ్యేయస్స వేషాం సర్వసిద్ధయే" இத்யாதி

வாக்யங்களில் "నామబ్రహ్మోత్యపాసీత। ఆకాశంబ్రహ్మేత్యుపాసీత" என்னு மாப்போலே தமப்பனை ப்ரஹ்மாவினுடைய தலையை யறுத்து, பாதகியாய் "రుద్రో వై క్రూరః" என்கிறபடியே த்ரிபுர ஸம்ஹாரியாய்க் கொண்டு க்ரூரனாய் "నైయాయికస్య వాయురప్రత్యక్షః" என்று நையாயிகன் வாயுவை அப்ரத்யக்ஷமென் றெண்ணுமாப்போலே, சமஸ்த தேவதைகளையும் பசுக்களென்றெண்ணி யிருக்கும் துரபிமாநியுமாய், மாயாகலையாலே மான்வேஷங்கொண்ட மாரீசன்போலே, தானே விஷ்ணுவாகவந்து தன் கண்ணைக்கொண்டு தன்னையே பூஜித்து, பின் தன்னைத்தானே சூலத்தாலேகுத்தியேந்திக்கொண்டு, மாயாசீதையை வெட்டின இந்த்ரஜித்தைப்போல, இதோ நான் விஷ்ணுவைக் கொன்று விட்டேன் பாருங்களென்று ஜகத்தை மோஹிப்பிக்குமவனை ருத்ரனை அந்த ஸர்வஸ்மாத்பரனை நாராயணனாகவே பாவிப்பார்க்கு, "బ్రహ్మదృష్టిరుత్కర్షాత్" என்கிற ஸூத்ரோக்த ந்யாயத்தாலே அணிமாதி சித்திகளுண்டா மென்கிறது. பொட்டைத்தலையனைக் குழலசையக் குழலசையவென்றால் நெற்பரிமாறுமாப்போலே, நிக்ருஷ்டதமனை இந்த ருத்ரனையே அப்படி முக்யனை பரமபுருஷனை நாராயணனாகப் பாவித்தால் பலமுண்டாகத் தட்டில்லை யல்லவா ?

மேலே, "తవ స్తన్యం మన్యే ధరణిధరకన్యే హృదయతః। పయః పారావారం పరివహతి సారస్వతమివ। దయావత్యా దత్తం ద్రవిడశిశురాస్వాద్య తవ। యత్కవీనాం ప్రౌఢానామజని కమనీయః కవయితా" என்கிற சௌந்தர்ய லஹரி ப்லோகத்திலும், "దేవత్వే దేవదేహేయం మనుష్యత్వే చ మానుషీ। విష్ణోర్దేహానురూపాం వై కరోత్యేషాత్మనస్తనుమ్" என்னும், இத்யாதிகளில் சொல்லுகிறபடியே காளியை லக்ஷ்மீ விபூதியென்கைக்காக மதுகரீ ரூபத்தாலும் தானானதன்மையாலும் திருமழிசையாழ்வாருக்கு ஸ்தந்யபாநாதிகளைப் பண்ணிவைத்த பிராட்டியாவது நீயேயல்லவாவென்று காளியை பிராட்டியாக ஸ்துதிபண்ணுகிறது. இதில் "த்ரவிடசிசு:" என்கிறது பாலபார்க்கவ முநீந்த்ரரை. யாதொரு ஸ்தந்யமானது திருமழிசைப்பிரானுடைய திருவுள்ளத்தினின்றும் திருச்சந்தவிருத்த முதலான திவ்யவாங்மயமான அம்ருத சாகரத்தைத் திருவாய் வழியாகப் பெருக்காநின்றதென்று சொல்லப்படா நின்றதோ, யாதொன்றைப் பாநம்பண்ணினபடியாலே திருமழிசைப்பிரானே ப்ரௌடகவியானரோ, அந்த ஸ்தந்யமானது உன்னதேயென்று உத்ப்ரேக்ஷிக்கிறேனென்று ப்லோகார்த்தம். இந்த பார்க்கவ முநீந்த்ரருடைய வைபவமானது ஸ்ரீபார்க்கவோத்தர கண்டத்திலும், பராசராதி ஸம்ஹிதைகளிலும், மஹீஸார மாஹாத்ம்யத்

திலும், நரநாராயணுதி மஹர்ஷிகளாலே கொண்டாடப்பட்டிருக்கை யாலே இந்த ஶ்லோகத்தில் சங்கராசார்யர் இப்படி புராணப்ரசித்த வைபவத்தைச் சொல்லியிருப்பரேயன்றி வைதிகபரிக்ரஹ ஹீநனான சம்பந்தனைச்சொல்லி யிருப்பரென்று ஒருவரும் நம்பமாட்டார்களா கையாலும் இவன் புனைந்துரைத்த பொய்களும் நிஷ்ப்பலங்களே யாம். ஸ்ரீபார்க்கவ முநீந்த்ரரை வைதிகர்கள் திவ்யாலயங்களிலே ஸர்வேஶ்வரனோடொக்க ப்ரதிஷ்டைசெய்து பூஜித்தும், அவரு டைய திவ்யஸ்ரீஸூக்திகளை வேதங்களைக்காட்டிலும் சீரியதாகஅத்ய யநாத்யாபநங்கள்செய்தும்,ஸ்ரீமந்நாராயண யாத்ரோத்ஸவங்களிலே ஜயபேரியடித்துக்கொண்டு பாராயணம் செய்தும், இப்படிக்கொண் டாடும் திவ்யஸ்த்தலங்களிலே த்ரிமத்ஸ்த்தர்களும் தீர்த்தப்ரஸாதங் களைப் பரமபாவநமென்று அபேக்ஷைசெய்து சங்கராதி மடாதிபதி களும் சடகோபாதி மர்யாதைகளை ப்ரார்த்தித்தும் கொண்டாடுகிறது போலே கூபமண்டூகமானசம்பந்தனை யெந்தவைதிகர்கள் ப்ரதிஷ்டா ட்ர்ராதநாதிகளைச் செய்யக்கண்டோம். அவனுடைய புன்கவிகளை யெந்த வைதிகர்க ளோதக்கண்டோம். ஆகையால், சங்கராசார்யர் காளிக்கும் பிராட்டிக்கும் அபேதமாகக்கொண்டு ஸ்தோத்ரம் பண்ணுகைக்காக புராணுதிப்ரசித்தரான திருமழிசையாழ்வாருக்குப் பிராட்டி ஸ்தந்யங்கொடுத்தாளென்றும், மதுகரீ ரூபத்தாலே தேன் கூடிழைத்துத் தேனூட்டி வளர்த்தாளென்றும் சொல்லும் வைபவ ங்களை யிந்த ஶ்லோகத்தாலே வெளியிட்டிருக்க இதைத் திருடிச் சம் பந்தனுக்கு வைபவங் கூறுவதென்ன வஞ்சகம்.

இது நிற்க, இந்த அவிவேகபுஞ்சம்; கீழே "ವೇದಂ ಶಿವಾಗಮ ... ಸಮ್ಯಕ್ ..." என்று வேதம் வேறு சிவாகமம் வேறல்ல வென் றானையிட்டு, இங்கு "வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" என்றுவேதம் வேறு சிவாகமம் வேறாகப் பெரிய புராண விருத்தத்தால் விளக்கினது மிகவும் ஆஶ்சர்யகரமா யிருக் கின்றது.

மேலே, சங்கராசார்யர் அந்த்யகாலத்திலே சிவதீக்ஷைபெற்ற தாகச் சொன்னா். அது, மெய்யாகில் அவருடையமடமெல்லாம் இப்போது சைவமதமாயிராமல் அத்வைதமதமாயிருக்குமா? அவர் சைவராகிவிட்டதை அவருடைய சிஷ்யர்களறியார்கள், நானொரு வனே யறிவேனென்று இக்குபிதர் பிதற்றினல் எப்படி மெய்யாகும். காஞ்சீபுரத்தில் காமாக்ஷிகோயிலும் அத்வைத மதஸ்த்தருக்குச் சேர் ந்திருப்பானேன்? ஆகையாலிவையாவும் பொய்யென்பதற் கைய மில்லை யல்லவா!

இனி ''தேவர்குறளும் திருநான்மறைமுடிவும், மூவர்தமிழுமுனி மொழியும் - கோவைத், திருவாசகமுந் திருமூலர் சொல்லும், ஒரு வர்சகமென்றுணர்'' என்கிற ஔவையார் மொழியிலும் ''தேவர் குறள்'' என்றது அக்நீந்த்ராதி தேவதாராதநத்தையும் பரதேவதோ பாஸநங்களையும் விளக்கும் பூர்வோத்தர மீமாம்ஸா சூத்ரங்களை, ''திருநான்மறைமுடிவும்'' என்றது ''ఏకాత్మాంద్విపదాంపత్యదాఙ్ఛ్ వాచన్దేవాఙ్పజీవ్యస్తి'' இத்யாதி ஸ்ருதி ப்ரஸித்தமான ரஹஸ்யத்ரயத்தை, ''ஓத்தின் பொருண்முடிவும்'' என்றுதொடங்கி, ''மாதவன் பேர் சொல்லுவதே யோத்தின் சுருக்கு'' என்னக்கடவதல்லவா? ''மூவர் தமிழும்'' என்றது ''பாலேய் தமிழரும் இசைகாரரும் பத்தரும்'' ஆகிய மூவகைப்பட்ட ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களை, இதில் பாலேய்தமிழராகிறார் முதலாழ்வார்கள் மூவரும், இசைகாரராகிறார் திருப்பாணாழ்வார் முதலானார்கள், பத்தராகிறார் திருமழிசைப் பிரான் குலசேகரன் பட்டநாதன் முதலியவர், ''முனி மொழி'' என்றது திருவாய்மொழியை, ''శఠకోపముని॰వం దే'' என்றும், ''ఋషింజుషా మహే'' என்றும் சொல்லுகிறபடியே முக்ய முநித்வமுள்ளது அவர்க்கேயல்லவா? ''கோவைத்திருவாசகம்'' என்றது ''கோவைத்தமிழால்கலியன்சொன்ன''என்றும், ''கோவை யின்றமிழ் பாடுவார்'' என்றும் சொல்லுகிறபடியே கலியனுடைய திவ்யஸ்ரீசூக்திகளை, ''திருமூலர்சொல்'' என்றது உபதேசரத்நமாலை, திருவாய்மொழிநூற்றந்தாதிமுதலியவற்றை. ஸ்ரீமணவாளமாமுநிகள் திருமூலத்திலே யவதரிக்கையாலே அவரைத் திருமூலரென்கிறது. ஔவையார் பூதபவிஷ்யத்வர்த்தமாநமெல்லாந் தெரிந்தவராகையாலேஅவர் வைதிகபரிக்ருஹீதமாய், ப்ராஹ்மணோத்தமர்களுக்கும் உபஜீவ்யமாயிருந்துள்ள திவ்யப்ரபந்தங்களைக் கொண்டாடுவரே யல்லாமல் ப்ராஹ்மணதியராலே அநாதரிக்கப்பட்ட பண்டாரப் பாட்டுகளைச் சொல்லியிருக்க மாட்டாரென்பது புத்திமான்களுக்கு நன்றாய்த் தெரியுமல்லவா? இதுவுமன்றி உலகத்தின் வழக்கப்படிக்கே யிதற்குப் பொருள் சொன்னால், தமிழர் முனி யென்பது அகஸ்த்யரையே யா யிருக்க வ்யாசரை யதற்குப் பொருளாக்குவது சேராது. தேவதைகள்செய்த சூத்ரமேதோ தேடவேண்டும். ''అనన్తా వై వేదాః'' என்று வேதங்களுக்கு முடிவில்லாதிருக்க, அதுக்கொரு முடிவுவாச்ய முண்டென்பதும் சேராது. பொருள்முடிவை வாசகமென்னக் கூடாது.

இதுநிற்க, இந்தச்சூரர் பேருண்டி, பெருந்தூக்கம், கடுங்கோபம் வீண்சண்டை, முதலியவற்றை யுடையவர்கள் சைவராக மாட்டார்

கனென்று சொல்லிக்கொண்டே பெருஞ்சண்டைக்கு முற்றீம்புசெய்து குரைக்கின்றனர்; இந்தப்பார்த்தால், பரநிந்தை ஸ்வஸ்தோத்ரமில்லாத என்னோடொத்த மஹாநுபாவனுமிந்தவுலகத்திற் கிடையாது, உன்னோடொத்தபதிதனு மிவ்வுலகிற்கிடையாது என் றொருவன்சொல்வதுபோல் வயிறுவளர்க்கும் வார்த்தையேயாய்விட்டது. இப்படிக்கன்றி இவர்சொன்னது மெய்யாயிருந்து தானும்சைவனாயிருந்தால், பட்டினத் தடிகள் முதலாயினோர்போல சண்டைக்கு வராமல், வைஷ்ணவர்கள் சைவத்தைக் கண்டித்தாலும் அவர்கள் கண்டிப்பது அவர்கள் ஸ்வரூபத்துக்கேற்கும், கண்டிக்கப்படுவது சாந்தமான சைவத்துக்கு மிகவு மேற்குமென்றுசிந்தைசெய்து உண்டிவெறுத்து மௌனமாயிருந்தல்லவோ இச்சாது மார்க்காநுசாரியும் சித்தாந்தஸ்த்தாபநம் செய்யவேண்டும். அப்படிக்கன்றி க்ரந்தம்செய்து சித்தாந்தம்பண்ணுவது வைஷ்ணவர்களுக்கேயுரிமையாயிருக்க, இம்மதிகேடர் கதிகேடராய் அத்தொழிலுக்குவந்தது பெருவ்ருத்தமல்லவா? இன்னும் இப்பதடித்தலைவர், சைவமதங் கெட்டாலொழிய ஸ்த்தாபநம் செய்யக்கூடாமையாலே இதுவரையிலும் சைவரிலொருவரும் சைவமத ஸ்த்தாபநம் செய்யா தொழிந்தாரென்று ப்ரலாபித்தீர்; சைவமதம் கெட்டால், பிறகு அதனை யெப்படி ஸ்த்தாபநம் செய்யலாம், அப்போது கெட்டமதத்தை நல்லமதமென்று ஸ்த்தாபித்ததாகவன்றோமுடியும். மேலும் இப்போது சிவாதிக்யரத்நாவளி செய்து இவ்விழுதை ஸ்த்தாபிக்கத்தொடங்கினபோதே சைவமதம் கெட்டேபோய்விட்டதாகுமல்லவா; மேலும் முன்னோர்கள் ஸ்த்தாபநம் செய்யாமையே சைவமதம் கெடாமைக்குச் சாக்ஷியாமாகில், முயற்கொம்பு மதத்தையும் முன்னோர்களொரு ஸ்த்தாபநம்செய்யாமையாலே முயற்கொம்புமதத்தோடொக்க சைவமதம் அநாதியாய் விளங்கிவந்தது இப்போது கெட்டுப்போய் விட்டதென்றும் இவர் ஸ்த்தாபநம் செய்தாரென்றும் சொல்லியவாறுமல்லவா ?

மேலே, சிவவாக்ய ரென்னும் பேரையுடையராய் சைவமதத்தை யாராய்ந்து நிஸ்ஸாரமென்று கைவிட்ட திருமழிசைப்பிரான், தாம் அதைக் கைவிட்டமையை யாவருமறியும்படி "குண்டலங்கள் பூண்டுநீர் குளங்கடோறுமூழ்குவீர், மண்டுகங்கள்போலநீர் மனத்து மாசறுக்கிலீர், மண்டையேந்துகையனை மனத்திருத்த வல்லிரேல், பண்டைமாலயன்றொழப் பணிந்துவாழலாகுமே?" என்று சைவரைநோக்கி யருளிச்செய்து, "பூவும்பூசனையுந்தரும்" என்றதுகொண்டு, எம்பார் தகாதுதகாதென்று சைவமதத்தைக் கைவிட்டாற்போலே இவரும் பணிந்துவாழலாகுமே? என்று சொல்லி, ஆகா

நாகாதென்று சைவமதத்தைக் காறி யுமிழ்ந்துவிட்டா ரென்பது ப்ரசித்தமா யிருத்த லறியாது, இப்பாட்டைச் சைவ மதத்துக்கு ஸ்த்தாபகமாகக் கருதி, இவ்வசட ருதஹரித்த தென்ன மடமை. இப்பாட்டில், "மண்டையேந்து கையனை" என்று தேவதாந்தரத்தை மண்டையிட்டே நிருபித்தது. ருத்ரன் தன் பிதாவான ப்ரஹ்மாவினுடைய தலையையறுத்து ப்ரஹ்மஹத்தியும், குருஹத்தியும், பித்ருஹத்தியும், தேவதாஹத்தியும்ஆகிய எல்லாவற்ருலும் பிடியுண்டு தந்நிவ்ருத்திக்காக "பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனைதிரிதந்துண்ணு முண்டியான்" என்கிறபடியே ப்ரஹ்ம கபாலத்தில் பிச்சைகொண்டுண்டு "త్రీన్ లోకాన్ సమ్పరిక్రమ్య" என்கிறபடியே எங்குந்திரிந்துபின்பு தன்தேவிக்கு சுக்ரதசைசுத்திலே யடித்தபடியாலே "తత్ర నారాయణశ్శ్రీమాన్మయా భిక్షాం ప్రయాచితః। తస్య ప్రసాదాత్సుశ్రోణి కపాలం తత్సహస్రధా। స్ఫుటితం బహుధా యాతం స్వప్నలబ్ధం ధనం యథా" என்னுருக்தழகியாளான தேவியைக்குறித்து சிவன்சொன்னபடியே சர்வேஸ்வரனைச் சரணம்புகுந்தவனன்ருே? இவனையும் ஒருபரவஸ்துவென்றுசங்கிக்கலாமோ? என்கைக்காக, உரலோடி மத்தளத்தைச் சரணம்புகுவதுபோலே உலகத்தி லொருமூடன் இப்படிப்பட்ட மஹாஸம்ஸாரியைச் சரணமென்று பற்றுவதே? "స్వయం హీనః పరాన్ తారయతి" என்று தன்பாபத்தைத் தானே போக்கிக்கொள்ள மாட்டாத ருத்ரன் சைவரை யெப்படிக் கரையேற்றுவன்? ஆகையால் இவனைப்பற்றிஞல், இவனுடையபாபம் பற்றிஞர்க்குமாய், ஒட்டையோடத்தோ டொழுக லோடமாய், ஸம்ஸாரார்ணவத்தி னடிமண்டியிலே யழுந்திப்போவதன்றி உஜ்ஜீவிக்க மாட்டார்க ளென்றபடி. நாலாம்பாதத்தில் "அயன் தொழப்பண்டைமால் பணிந்து" என்று அந்வயிப்பது. ஸர்வஸுர ஜ்யேஷ்டனுய், சிவனுக்கும் பிதாவான சதுர்முகனும் தொழும்படியாக. பண்டைமாலான ஸ்ரீமந்நாராயணனைச்சரணம் புகுந்து என்று அதுக்கர்த்தம்; அன்றிக்கே, "பண்டைமாலயன் பணிந்துதொழ" என்றந்வயமாய் ஸகல ஜகத் ஸ்ருஷ்டாவாகையாலே பண்டைமாலான சதுர்முகன் நிரபிமாநியாய்ப் பணிந்து தொழும்படி வாழாட்படலாகுமோ? என்று அப்போது யோஜனையாகக்கட்வது. வாழலாகுமே? என்றது, வாழலாகுமோ? என்றபடியாய் வாழலாகாதென்னுமதைக் காட்டுகிறது.

மேலே இம்மூடர் திருமழிசை யாழ்வாரை பார்க்கவரென்றறியாதே யவர்க்குக்காலிலே கண்வந்ததெப்படி யென்று கேட்டார். கௌதமருக்குக் காலிலே கண்வந்த தெப்படியோ; ப்ருகுமஹர்ஷிக்

குக் காலிலே கண்வந்த தெப்படியோ; தங்கள் தேவாரப்பெட்டியி லடங்கிய கரகண்டனுக்கு நெற்றியிற்கண்வந்ததெப்படியோ; இதை யெல்லாம் கேட்டறியாமல் "సర్వతశ్చక్షుః" என்னும்படியான மாஹாத்ம்யமுடைய திருமழிசையாழ்வாருக்குக் காலிலேகண்ணான தெப்படியென்று கேட்டால், இப்பேய்கள் பொய்புனைவதுபோல், முன்னாலே ஸமலோசனாயிருந்த பரசிவபெருமான், இவர் சிவவாக் யராயிருந்தகாலத்தில் இவருடைய காதலுக்கீடுபட்டுத் தன் கண்ணி லொருகண்ணைப்பிடுங்கி இவர்காலிலே நாட்டிவிட்டான் ஆகையா லன்றோ சிவபெருமான் விஷமலோசனனானென்று ஒருபொய் புனைந்து சொல்லமாட்டோமென்க.

இதுநிற்க, இவ்வவிவேகனாளி, தமதுபரசிவனுக்குநெற்றியிற்கண் ணானபடியாலன்றோ உடம்பெல்லா மாண்குறியாய்லிங்கமென்று பெயர் பெற்றதென்று தன்மதத்திலுள்ள தொரு குயுக்தியைக் கொண்டு காலிலே கண்ணென்று பெற்றவராகவும் சூத்திலேவாயொன் றுடையவராவர்போலும், என்று பஹுதுஷ்ட்டத்தனமாய்க்குரைத் தது. இதற்குச் சிக்ஷை இவரெக்காலத்து மாவடையாரும் லிங்கமூ மான அதிஹேய ஜலத்வாரங்களை தம்வாயாற் புலம்பியும், கழுத்திற் கட்டிக்கொண்டும் திரிவதற்கு மேற்பட்டு ஒன்றுங் காணப்படாமை யால் இதுவே போதுமானதா யிருக்கின்றது.

மேலே "ఘోరవిస్ఫులింగేనలలాటజేన" இத்யாதி வாக்யங்களில் "అహంమనురభవగ్ం సూర్యశ్చ" என்று வாமதேவருஷியை ஸர்வாத் மகனாகச் சொன்னாற்போலவும், "మత్తస్సర్వ మహంసర్వం" என்று ஸ்ரீப்ரஹ்லாதனையே ஸர்வஜகத்காரணமாகச் சொன்னாற்போலவும், "బ్రహ్మదాశాబ్రహ్మదాసాబ్రహ్మైవేమేకితవా ఉత" என்றும் "శునిచైవశ్వపాకేచ" என்றும் "అధికంమేనిరే" என்றும் கள்ளர்களையும், பள்ளர்களையும், பதிதர்களையும், நாய்களையும், பறையர்களையும் சாக்ஷாத் ப்ரஹ்மமாகச் சொல்லுமாப்போலவும் இக்காடிச்சால் மூலை யெருதாண்டியையும் பரப்ரஹ்மமாகச் சொன்னதுகொண்டு அவன் திருமழிசைப்பிரானு டைய பாதநேத்ரத்தாலே பங்கப்பட்டதகாதென்றான். இத்திருமழி சையாழ்வார் தாம் ஸ்ரீசுதர்ஶந நாரசிஹ்மாவதாரமென்னுமிடம் பார் க்கவோத்தர மஹீஸாரமாஹாத்ம்யாதி சித்தமாகையாலேயும், ருத்ரன் முன்னேநருஸிஹ்ம தேஜஸ்ஸிலே சலபமாய் விட்டபடியையும், சுத ர்ஶநோபாஸகனான படியையும் ப்ரஸ்தே விளக்கினோமாகையாலும் சிவன்பங்கப்பட்டதுக்கொரு குறையில்லை. இவன் அவஶ்யம் பங்கப் பட்டத்தக்கவனென்னுமிடம் அகாசுரவ்ருத்தாந்தத்திலும், பாணாசுரவ

ருத்தார்த்தத்திலும், "అధికం మేనిరే" என்கிற விடத்திலும் விசதமாகக்கண்டுதெளியலாம். "రుద్రస్య శిరశ్ఛిన్నేపి సప్రవర్గ్యోఽభవత్" என்று ஶ்ருதியிலும் "ఇన్ద్రేణ వజ్రరూపేణ ఛిన్నమస్యశిరోదధత్" என்றுப்ரஹ்மபுராணத்திலும் "యదా మద్భక్త శక్రస్య యజ్ఞధ్వంసః కృతస్త్వయా। తదాహం త్వచ్ఛిరశ్ఛిత్వా తత్ప్రియార్థం శిరో మయా। తతస్త్వాం ప్రార్థయామాస మామభీష్టాయ పార్వతీ। తదా వైనస్య ప్రసాదేన ప్రాణాఁల్లేభే భవాంశ్చవః" என்று கூர்மோத்தரத்திலும் இந்த்ரனாலும், ஸ்ரீமந்நாராயணனாலும் பலகாலும் ருத்ரன் தலையறுப்புண்டபடியைச் சொல்லுகையாலும், மஹாஸம்ஹாரத்திலே "న బ్రహ్మా నేశానః" என்றுஸம்ஹாரகனை ருத்ரனும் சுமந்தான் தலையாம்படியை வெளியிட்டிருக்கையாலும், ருத்ரன் பங்கப்படுகைக்குரிய னென்னக்குறையில்லை யல்லவா ?

இதற்குமேலே யிச்சுமடர், இதுவரையில் சைவர்களில் வாதித்து வென்றவரில்லாதிருக்க, பெரியாழ்வார் கிழியறுத்தாரென்பது எப்படிக்கூடுமென்ருர். சைவரில் வெற்றிமுறைமை யில்லாமையான்று வைஷ்ணவாக்ரேஸரரான ஆழ்வார் மற்றவர்களையெல்லாம் வென்று கிழியறுப்பதை யெப்படித் தடைசெய்யமாட்டும். சைவரில் இதுவரையில் வெற்றிமுறமை யுண்டாகிலல்லவோ கிழியறுக்கைக்குத்தடையாவது. மேலும் மதுரையில் சொக்கலிங்கத்தை நாட்டிவைத்திருப்பதே யாழ்வார் கிழியறுக்காமைக்குச் சாக்ஷியாமென்ருர். சுடலைக்கரையில் மாவிலிங்கமிருந்தால் அதுவே சிவமதத்துக்கெல்லாம் ஜயத்வஜமாகுமோ ? கூடலழகருக்குப் பரிவாரம் வேண்டுகையாலே யரசன் அந்தலிங்கத்தை நிர்மூலமாக்காதொழிந்தான், அக்கல்லைப்பிடுங்கிவிட்டால் அவ்வூரில் காடிச்சால் மூலையைக் காக்குமாளார் ? ஒரு குற்றவாளியைக்கொன்று விடுவதைக்காட்டிலும் உயிரைவைத்து மாநபங்கம் செய்வதல்லவோ கொடுந்தண்டனை.

இதுநிற்க, சைவர்களுக்கெல்லாம் அருட்பெருஞ் செல்வராகிய முருகக்கடவுளைத் திருமலை திருமாலிருஞ்சோலை மலைகளினின்றும் பிடுங்கிவிடும் படியான அதிகாரம்பெற்று விட்டார்கள் வைஷ்ணவர்களென்று குரங்கு சாவக்கொடுத்த ஆண்டிபோலே யிவனழுதான். வேங்கடகிரி மாஹாத்ம்யம் பலபுராணங்களிலும் சொல்லியிருப்பதில் ஒருருஷியாவது சிவலிங்க மாஹாத்ம்யமாதல், குமார மாஹாத்ம்யமாதல் சொல்லாதிருக்க, இச்சூரர் ஊரிலழகாயிருப்பவர்களெல்லாரும் என் புருஷராயிருக்க, இப்பதிவ்ரதைகளெல்லாரும் அவர்களைப் பிடித்துக்கொண்டார்களென்று குடிசைக்காரி பதிவ்ரதை

களைத்திட்டுகிறது போலக் குரைத்தால் என்ன பயனுண்டு. இக்கலி காலத்திலும் சக்திமிகுந்த வேங்கடேஸ்வரர், வாகிரீஸ்வரர் முதலான ப்ரதேவதைகளும் வைஷ்ணவர்களுடைய மாஹாத்ம்யமறிந்து அவர்களுக்கடங்கி யநுவர்த்தியாநின்றனவென்றிவர்க்கு மநஃபூர்வகமாகத் தெரிந்திருந்தும் தாமப்படிச் செய்யாமல் வைஷ்ணவர்களோடு மறுதலைத்தால் வைஷ்ணவர்களுக்கு விதேயராயவர்கள்சொற்படியாடுகிற அருட்பெருஞ் செல்வராகிய முருகக்கடவு ளுள்ளம் கொதிக்கு மாதலால்இப்பாவிக ளென்னபாடுபடுவரோதெரியாது. வைஷ்ணவர்கள் முருகக்கடவுள்வரைப்பாகிய திருவேங்கடம் சோலைமலைமுதலிய ஸ்த்தலங்களைத் தலைக்கீழாய்ப் புரட்டியதற்கு முருகக்கடவுளிசைவில்லாதிருப்பின் இந்தவைஷ்ணவர்களெல்லாம் அப்போதே நிர்மூலமாய்ப் போயிருப்பரல்லவா? அப்படி முருகக்கடவு ளிசைவில்லாதிருந்தும் தன்னைப்புரட்டிய வைஷ்ணவர்களை யடர்க்கச் சக்தியில்லா திருப்பராகில் இப்படிப்பட்ட தெய்வத்தைக் கழுத்திற்கட்டிக் கொண்டு நீபட்டதோநான்பட்டதோ வென்று இச்சைவர்கள் கதறுவதென்ன பேதைமை. அப்போதே, அத்தெய்வத்தை விட்டு அதையும் கீழ்மேலாகப் புரட்டவல்ல வீறுபாட்டையுடைய வைஷ்ணவர்களோடு சேர்ந்து விஷ்ணுவையே பரனென்று பற்றவேணுமல்லவா? "ద్వావి మౌపురుషౌలోకే దుర్యోధనదశాననౌ। గో(గ్రహంవనభఙ్గఞ్చ దృష్ట్వాయుద్ధా త్పునఃపునః" என்கிறபடியே தங்கள் கணத்து நாயனுரையும் புரட்டினர்க ளிந்த வைஷ்ணவர்களென்று தெரிந்திருந்தும் இவர்களோடெதிரிட்டுச் சண்டையிடுகிற இச்சைவ சூரர்க்கு நிகரான சூரர் இவ்வுலகிற்காணக் கேட்கக்கிடைப்பதருமை.

இதுநிற்க, நம்மாழ்வார், "கண்ணன்கழலிணை" யால் சங்கத்தாரைக் கீழ்ப்படுத்தக் கூடாதென்றுர். நூற்றெட்டுத் திருப்பதிகளிலும், மற்றுமுள்ள புராணஸ்த்தலங்களிலும் ப்ரதிஷ்டிதரும், ஆராதிதருமாய், மதுரகவிநாதமுநி யாமுநமுநி யதிவர வரவர வாதிகேஸரி கவிதார்க்கிக கேஸரிகள் முதலான திக்தந்திகளான பூர்வ விர்ணுக்ர கண்யராலே யாஸ்ரயிக்கப்பட்டவருமாய், த்ரி மதஸ்த்தர்களாலும் மர்யாதையாக வாதரிக்கப்பட்ட ஸ்ரீசடகோப ரூபத்தை யுடையருமாய், தம்முடைய ஸ்ரீஸூக்தி லேஸஸம்பந்தத்தாலேயும், ஸம்பந்த ஸம்பந்தத்தாலேயும் திவ்ய ஸ்த்தலங்களுக் கெல்லாம் தீர்த்த பரிக்ரஹ யோக்யதையை யுண்டாக்க வல்லரான நம்மாழ்வாருடைய திவ்யஸூக்தி சங்கத்தாரை வெல்லு மென்கைக்கு சந்தேஹமேது! அப்படி சந்தேஹமிருந்தால் தங்கள் பரசிவன் பாதத்துக்குத் திருவள்ளுவ ரென்றும், ஔவை யென்றும், இடைக்காட ரென்றும்

பேரிட்டு உலகத்தில் கெட்டுப்போன ப்ராஹ்மணன் தலையிலாவது வைத்துப் பார்த்தார்களாகில் அப்போ தவர்களுடைய வுண்மை வெளியாகும். அவர்கள்பாட்டைக் கள்ளைக்குடித்துச் சுள்ளையிற் புரளும் பண்டாரப்பயல்கள் கொண்டாடுவரன்றி யெந்தவைதிக ஜநங்கள் சேர்ந்துகிறார்கள். ஆழ்வாருடைய திவ்யஸூக்தியானது சமஸ்த விஷ்ணுஸ்த்தலங்களிலும், சகலவைதிக க்ரியைகளிலும் வேதத்தைக் காட்டில்மிக்கதாக வழங்கிவருவது பொய்யோ! இப்பண்டாரங்களுடைய பேய்ப்பாட்டுகளை சிவத்விஜனிற் கேடுகெட்டவன்கூடத் தொடமாட்டானே! அவனும் சிவாகமத்தை வேதமென்று கொள்வானேயன்றி இப்பாடல்களை வேதமென்று கொள்ளமாட்டானே! அப்படி கொண்டிருப்பனாகில் இவர் அடியில் விருது கூவிக்கொண்டபோது த்ரயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யரும் என்றாளையிடமாட்டாரா? ஆகையாலே ததுக்திமாத்ரம் மந்த்ராக்ரியம் என்னும்படியான வீறுபாட்டையுடைய ஆழ்வாருடைய திவ்ய ஸூக்தியானது சங்கத்தாரைக் கீழ்ப்படுத்திற்றென்பதற் கொரு குறைவுமில்லை, இச்சைவரது மனக்குறை யொன்றே குறை.

இதுநிற்க, திருமங்கை மன்னன் மறவர் குலத்தில் வந்தவராகையாலே சம்பந்தனை வெல்லக்கூடாதென்றார். உத்தமஜாதியாரே வெல்வாராகில் மறவர்குலத்தில்வந்த திருமங்கைமன்னனுக்கு சம்பந்தன் தோற்றபடியைக்கொண்டே அஜ்ஞாதகுல கோத்ரனை சம்பந்தனை வ்யபிசாரிபிள்ளையென்று சொல்லவேண்டியருமல்லவா? சம்பந்தனுக்கு உமாதேவி பால்கொடுத்த கதை கட்டுக்கதையாகையாலே முட்டுப்பொறுக்க மாட்டாது. திருமங்கைமன்னன் ஹீநஜாதியில் திருவவதரித்தாலும், சேற்றிலுண்டான தாமரையும், மண்ணிலுண்டான மஹாரத்நமும், உவர்க்கடலிற்பட்ட நித்திலமும்போலே வைஷ்ணவ மாஹாத்ம்ய மறியும் மஹாநுபாவர்களுக்கு சேவ நீயரென்னத்தடையுண்டோ; மேலும் சம்பந்தனை ஜ்ஞாந சம்பந்தனுக்கியவனே டெதிரிட்டா ரெல்லாரும் அஜ்ஞாந சம்பந்தராக வேண்டுமென்றார். இப்படியாகில், இப்போது திருமங்கைமன்னனுக் கேற்றம் கூடாதென்று வாதிக்க வந்த இக்கலதி மூதேவிமன்னனுய்விட்டபடியாலே இம்மூதேவி மொழியை யொருவரும் செவியேலார்களல்லவா?

இதுநிற்க, திருமங்கை மன்னன் சம்பந்தனை வென்று வேலைப் பறித்துக் கொண்டாரென்பதற் கிச்சைவ சூரம் உத்தரஞ் சொல்லக் கதியற்றுச் சம்பந்தனுக்கு வேலே கிடையாதென்று முதலுக்கே மோசம்செய்து விட்டது. வைஷ்ணவர்களாகிலும் பலநாளும் சம்

பந்தன் வேல்விருதைக்கொண்டு வெற்றி பெற்றிருந்த தாகவும் திரு மங்கைமன்ன னொருவரிடத்திலே வெற்றியிழந்ததாகவும் சொல்லு கையாலே சம்பந்தனுக்குத் திருமங்கை மன்னனை யொழிந்தாரிடத் தில் வெற்றியுண்டென்பதைச் சம்மதித்தார்கள். இப்பாவி, சம்பந் தனுக்கு வெற்றிக்குறியான வேலே கிடையாதென்று குருத்ரோ ஹம் செய்துவிட்டார். சம்பந்தன் கையினின்றும் பறித்த வேலா னது இப்போது மாழ்வார் கையில் எல்லாராலும் கரணப்படாநிற்க, இதை யில்லை யென்றால் எப்படி யம்பலத்துக் கேறும். ஆழ்வா ருடைய வேலானது சம்பந்தன தல்லவென்றால், மற்றியாரது? சைவர்களுக்கே வேற்குறியுண்டன்றி வைஷ்ணவர்களுக்கது கிடை யாதல்லவா? சம்பந்தனுடைய மாஹாத்ம்யங்களிலே சம்பந்தன் கையில் வேலிருப்பதாகச் சொல்லக்காணோ மென்றார். மாஹாத்ம் யங்கூறவந்தவர்கள் வேலுண்டென்பதைச் சொன்னால் பின்பு அது பறியுண்டதையும் சொல்லவேண்டிவரு மாதலால் மாஹாத்ம்யங் குன்று மென்று தீர்க்காலோசனை செய்து முதலேசொல்லாமல் திரு டனைத் தேள்கொட்டினாற்போலே மௌனமாய்ப் போய்விட்டார்க ளென்பதை யெல்லாரு மறிவார்களல்லவா? மேலும் மாஹாத்ம்யம் சொல்லுவார் சொல்லுங்காலத்தில் சம்பந்தனதுவேல் ஆழ்வார்கையி லிருக்கையாலே சம்பந்தன் கையில் வேலுண்டாயிருந்தாலல்லவோ சொல்வார்கள். மேலுமித்திருமங்கைமன்னனிடத்தி லிந்தச் சைவ ருக்குண்டான ஸிம்ஹ ஸ்வப்நத்தாலே அவரைச் சம்பந்தன் காலத் தில் திருவவதரித்திருந்தவர்தானென்னு மிவ்வளவுக் கிசைந்தபோதி லும் சம்பந்தன் புகழ் நிலைக்கமாட்டா தென்று கருதி, திருமங்கை மன்னன் எங்கள் சம்பந்தன் காலத்தவரல்லரெனப் பொய்ச் சத்யம் பண்ணி சம்பந்தன் புகழை நிலை பெறுத்திவிட்டார். இப்பொய்ச் சத்ய மொழிய வேறு யுக்திசொன்னாலொழிய, திருமங்கை யாழ் வார் சம்பந்தன் வேலைப் பறித்துக்கொள்ள வில்லையென்பது நாட் டப்படாதல்லவா.

இதுநிற்க, ஸ்ரீஉடையவர் கூரத்தாழ்வானைச் சோழனிடத்திற் குப் போகவிட்டருளி, தாம் வெள்ளைசாத்திக்கொண் டெழுந்தருளி னதை யொருவருமறியாததுபோல இச்சைவர் வெளியிட்டுக் குரைத் தார். பாணாசுரனைத் தலையிற் பூவாடாமல் ரக்ஷிக்கக்கடவேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணிக் கொடுந்தடைகொண்டு பாழ்போக்கி அவன் கைகளைக் கள்ளிக்காடு சீக்குமாப்போலே கண்ணன் சீக்கக்கண்டு, தான்உயிருண்டானா லுப்புமாறியாகிலு முண்ணலாமென்று, திருட்டு மாட்டு மணியோடொத்த புகைக்கண்ணையும் புதைத்துக்கொண்டு

"திரிபுரஞ் செற்றவனும் மகனும் பின்னு மங்கியும் போர்தொலைய" என்றும் "சடையானோடேடவடல்வாணன்" என்றும் அரைகுலையத்தலைகுலைய வானுந்தோனுமாக வோடின பரசிவபெருமானைப்போலே ஸ்ரீஉடையவர் சரணாகத த்யாகம் பண்ணவில்லை. கூரத்தாழ்வார்தாமே ஸ்ரீஉடையவரைச் சோழனிடத்துச் செல்லவொண்ணாதென்று ப்ரார்த்திக்கையாலே செய்தாரத்தனை. ருத்ரன், ஸ்வபிதாவும் குருவுமான ப்ரஹ்மாவினுடைய தலையை யறுக்கையாலும், மாமனாரும் குருவுமான தக்ஷப்ரஜாபதியின் தலையை வெட்டுகையாலும் "யக்ஷானுரூபோ பலி:" என்கிற ந்யாயத்தாலே சைவர்களுக்கெல்லாம் ப்ரஹ்மஹத்தி செய்யத்தெரியுமே யல்லது வாதம்பண்ணத்தெரியாதென்பதை கூரேஶமிஶ்ரர் நன்றாயறிந்தவ ராகையாலே ஆசார்யரைக் காப்பாற்றுவதே தர்மமென்று தாமே சோழனிடத்துக்குச் சென்றால் குற்றமென்? ஆசுரப்ரக்ருதிகளை வஞ்சிப்பது குணமென்பதை தேஹாத்மோபதேஶ ப்ரஜாபதி வாக்யத்திலும், பாரதாதி ப்ரஸித்தமான கண்வருடைய லோகாயதிக ஸாஹசர்யத்திலும், தேவகுருவினுடைய லோகாயதிகப்ரணயநத்திலும், விஷ்ணுவினுடைய மோஹநாவதாரத்திலும், ருத்ராதிகளுடைய பாசுபதாதிப்ரவர்த்தநத்திலும், நன்றாயறிந்தவராகையால் அவர் சோழனை வஞ்சிப்பதற்காகக் காஷாயாதிகளைத் தரித்தது குணமேயல்லது தோஷமல்ல. சிவனைப் பூசிக்குமவர்களும் கண்ணைப்பிடுங்கி சிவன் மேலே யெறிந்தார்களென்று சைவர்களே சொல்லுகையாலே, ஆழ்வார் திருக்கண்களில் அப்புண்பட்டதொரு புதுமையல்ல. சிவனையும் சைவனையும் புத்தி பூர்வகமாகக்கண்ட கண்களைப்பிடுங்கிப் புகடுகை யென்றல்லவோ மாயாகேசவனு மாசரித்துக்காட்டினது. ஆழ்வார் திருவடிகளிலும் பெரியநம்பி திருவடிகளிலும் அபராதப்பட்ட சோழன் அப்போதே ஸஹஸ்ராக்ஷமான கண்டமாலை புறப்பட்டு, அழுகிப்புழுத்து சீயும் ரக்தமும் பேரொழுக்கமாயொழுக, ஈயினலெரிப்புண்டு, பெரும் பெருக்கான சீயாற்றுக்கணையாகச் சாம்பல் மூட்டையைக் கழுத்திலும் தோளிலும் மார்பிலும் முதுகிலுமாகச் சுமந்துகொண்டு திரிந்து அதுவே நிரூபகமாக நீற்றுச்சோழனென்றும், க்ருமிகண்ட சோழனென்றும், பேரெடுத்துப் புரண்டு போம்போதும் வேங்கடவனே வந்து தன் சினந்தீர வேலாலே குத்த, "குத்தினான் வேங்கடவன், குத்தினான் வேங்கடவன்" என்று வாய்புலர்த்திக்கொண்டு தொடைவழி நாய் கவரக் கூறையிழந்து யமலோகம்போய்விட்டதை யாவரு மறிவாராகையாலே, இவனையிப்படிப்பட்ட அதோகதியிலே தள்ளிவிடவேண்டுமென்றே திருவு

ளம்பற்றி கூரேஶமிஶ்ரர் சோழனிடத்துக் கெழுந்தருளினு ரென்பது. சோழனை த்ருணமாகவெண்ணி, அவன் முன்னே முகத்திலே சாணியிட்டாற்போலே "ద్రోణమస్తి తతః పరమ్" என்று கையொப்பமிட்ட நெஞ்சுரத்தாலே யெல்லாருந்தெரிந்துகொள்ளலாம். விழுக்காடறியாதே வந்தகப்பட்டு நடுங்கினுர்களிப்படி கையொப்பமிடுவர்களோ ? இச்சைவர் த்ரோணமென்பது பதக்காகையால் அதுக்கு மேலே முக்குறுணியு முண்டாயிருக்க, த்ரோணத்துக்குப் பரத்வங் கூடும்படியென்னென்றுர். த்ரோணமே பரதத்வமென்று எழுத்திட்டாலல்லவோ இப்ரசங்கமுள்ளது. சிவத்துக்குமேற்பட்டதொன்று மில்லையென் றெழுத்திடச்சொன்னுல் சிவசப்தம் அர்த்தாந்தரத்திலே ப்ரசுரமென்னுமிடத்தையும், விவக்ஷிதார்த்தமும் வஸ்துதஃ அதிஜகந்யமென்னுமிடத்தையும்,காட்டுகைக்காக "த்ரோணமஸ்தி ததஃபரம்" என்று எழுத்திட்டு வ்யங்க்யமர்யாதையாலே பரபக்ஷப்ரதிக்ஷேபம் செய்தருளினுர் ; இதறியாதே பிதற்றுவதென்ன மடமை. பதக்குக்குமேலே முக்குறுணியு முன்டென்றமாத்ரத்தாலே த்ரோணமானது சிவாத்பரமாகாமற்போய்விடுமோ ? "ఏషఏవాసాధుకర్మ కారయతి । తంయమధోనినీషతి" என்கிறபடியே சோழனை மஹாபாதகி யாக்குக்கக்காகவே யிப்படி கையெழுத்திட்டார். இல்லையாகில் "ஶிவாத்பரதரம் நாஸ்தி" என்று கையெழுத்திட்டபோதிலும், சைவமதம் சித்திக்கமாட்டாது. எங்ஙனே யென்னில், பரதரஶப்தத்திலே தரப்பாலே சிவனுக்கு மேற்பட்டவனுக்கு மேற்பட்டவனைச் சொல்லுகையாலே, "ஶிவாத்பரதரம்நாஸ்தி" என்பதற்கு சிவனுக்கு மேற்பட்ட தத்வத்தைக்காட்டில் மேற்பட்டதொரு தத்வமில்லையென்றன்றே பொருளாகின்றது. இப்படி சிவாத்பரத்துக்குமேலே யொரு பரமில்லையென்றுல் இவ்வளவாலே சிவபரத்வம் சித்திக்கமாட்டாதல்லவா ? "న దైవం కేశవాత్పరమ్"என்றும், "నానయోవిద్యతేపరమ్" என்றும்,பகவத்பரத்வம் சொல்லுமாப்போலே"నైవదేవంశివాత్పరమ్" என்று கையொப்பமிட்டாலல்லவோ சைவஸ்த்தாபநம் செய்ததாகும். சகல ஶாஸ்த்ர வித்தமரான கூரேஶமிஶ்ரருக்கு இதெல்லாந் தெரிந்திருந்தாலும் சிவதத்துவமானது சதுர்முகனுக்குங் கீழ்ப்பட்டதாகையாலே, "ஶிவாத்பரதரம் நாஸ்தி" என்றுல் பரமதம்சித்தியாமல் போனபோதிலும் ஸ்வசித்தாந்தத்துக்குத் தட்டுப்படுமென்றும், சோழனுக்கு மஹாபாபமில்லாமற்போய்விடுமென்றும், பார்த்தருளி "த்ரோணமஸ்திததஃபரம்" என்று திவ்ய ஶாஸநமிட்டருளினுர். இந்தச் சைவர்களுடைய மௌட்யத்தைச் சிரிக்கைக்கு ஊரெல்லாங் கூடினுலல்லது த்ருப்திபிறவாது. ஓரரசனைவிவன் சிவனுக்குப் பர

த்வ முண்டாக்குகைக்காக வோர் மாஸநமேற்படுத்த வேண்டுமென் றுதொடங்கினுல் தான் நிரக்ஷரகுக்ஷியாய் மூடனுயிருந்த போதிலும் ஒருராமமப்தத்தை வகாராந்தமாகச் சொல்லும்படியான சைவாசார் யரையாவது அநுசரித்து மாஸநத்தில் கையொப்பம் வாங்கவேண் டும்படியை யறுதியிட்டுக்கொள்ளக் கதியில்லாமற் போய்விட்டதல் லவா? வீணுக, "ஶிவாத் பரதரம் நாஸ்தி" என்கிற கையொப்பத் துக்காக ப்ரஹ்மஹத்தி செய்ததுமாத்ரமே யல்லவோ பலமாயிற்று. சிவனுக்கு மேற்பட்ட தத்வமில்லை யென்ப திக் கையொப்பத்தால் ஸ்த்தாபிக்கப் படவில்லை. சிவனுக்கு பரதரமில்லையென்று ஸ்த்தாபி க்கப்பட்டதே யென்னில், இதனுல் சைவர்கள் நினைவுக்கென்னகதி யாயிற்று. சிவனுக்கு மேற்பட்ட தொன்றுண்டென்று சைவர்களே சம்மதித்ததாய் விட்டதே. ஓரரசனுடைய சபையிலேயுள்ள சடை யாண்டிகளுக்குக் கணக்கிருக்குமா! அந்தச்சபையி லொருவராகிலும் கண்ணுள்ளவர் கிடையாதென்பதற் கிச் சாஸநமே சாக்ஷியா யிருக் கையாலே இப்படிப்பட்ட குருடர்களைக்கண்ட கண்களைப்பிடுங்கி நெருப்பிலிட வேண்டுமெல்லவா? தங்களுக்கும் பிறர்க்கும் அநுகூல மில்லாமல், "ஶிவாத் பரதரம் நாஸ்தி" என்று ஓரசட்டு வாக்யத் தைக் கற்பித்துக்கொண்டு அதில் தங்களோடொத்த சில மூட்பே ய்களிடத்தில் கையொப்ப மிடுவித்து, புத்திமான்களினுடைய விளி ம்பை வெளியிட்டால் அவர்களிடத்தில் பொறுமை கொண்டாடிப் புரண்டுபோன மாத்ரத்தாலே சைவமதம் ஸ்த்தாபநம் செய்யப்பட் டதாக மார்தட்டிக்கொண்டு திரிகிற இவ்விழுதைகளைக் கண்டால் விலவிறச் சிரிக்க வேணுமல்லவா? இனி யிவ்வளவாக நம்மால் நகைப்புண்டபின்பாகிலு மிப்பேதைகள் "ஶிவாத் பரதரம் நாஸ்தி" என்கிற தங்கள் பழமொழியை மாற்றி, "న దైవం కేశవాత్పరమ్" என்ற தைப் பார்த்துக்கொண்டாவது நுழைந்தான் கீழ்நுழைந்து "నైవ కేశవాత్పరః" என்று ஒருகட்டு வாக்யத்தை யேற்பாடு செய்து கொண்டு திருநீற்றுச் சோழரிப்படியேதான் கையொப்பம் வாங்கிக் கொண்டு வந்தாரென்று தங்கள் சுவடியிலே பிழைதிருத்தி யெழு திக்கொண்டு பின்பு நம்மோடு சண்டைக்கு வருவார்களென்று நினைக்கிறேன். கண்டறியாதமூடர்கள் கேட்டறிய வேணுமல்லவா? இதுகிடக்க, "ద్రోణమ్ విష్ణుః పరమ్" என்றுல் த்ரோணம் விஷ்ணுவாக வேண்டுமென்ருர். சிவத்துக்கு மேற்பட்டது விஷ்ணுதத்வமொ ன்றுமே யென்பது கூரத்தாழ்வானுக்குக் கொள்கையல்லவே; சிவத்துக்கு மேற்பட்டதாக அநீஶ்வர தத்வங்கள் பலவு முண்டா கையாலே சிவாத்பரமெல்லாம் விஷ்ணுவாக வேண்டுமென்கிற

நிர்ப்பந்தமில்லையே; த்ரோணம் சிவத்துக்குமேற்பட்டதாகவேண்டு மென்பதிலன்றோ நிர்ப்பந்தமுள்ளது. பதக்குக்குமேல் முக்குறுணி தூணி முதலானவை பரமாகுமே அவைகட் கென் செயவல்லா ரென் றிப்பேய் திகைத்துநின்றது. "ஶிவாத்பரதரம்நாஸ்தி" என்று கையொப்பம்வாங்கின சைவர்களை பரதரம் சிவனைக்காட்டில் வேறி ல்லை யென்றால் சிவனில் வேறுபட்ட பரமும் பரமமும் உண்டா குமே யதற்கென்செய்வீர்க ளென்றால் இதற்கென்ன மறுமொழி சொல்வார்களோ தெரியாது. மேலும் "ஶிவாத்பரதரம்நாஸ்தி" என்று பரதரஶப்தத்தாலே முக்குறுணியைத் தாங்களே கழித்து விட்டமை யறியாமல் இதற்கு வைஷ்ணவர்களென் செய்யவல்லா ரென்பதென்ன மடமை. மேலும் வைஷ்ணவர்கள் அவைகட்கெல் லாம் பெரியகாலைக்கொண் டளந்து பதக்குக்கு மேற்பட்டவைகளை யெல்லாம் பதக்குக்குள்ளே யடக்கி விடுவார்களென்று சமாதானம் காண்க. த்ரிவிக்ரமாவதாரத்தில் பெரியகாலாலே யளக்கும்போது மூன்றாமளவுக்கு விஷயமில்லாமற் போய்விட்டமை ப்ரசித்தமாகை யாலே பெரியகாலளவுக்கு த்ரோணம் வரையிலுண்டேயல்லது முக் குறுணிக்கு ப்ரஸங்கமே யில்லை. "ద్వే తే విద్మ రజసీ పృథివ్యా విష్ణో దేవ త్వం పరమస్య విత్సే" என்று ஸர்வஜ்ஞனை வேதபுருஷனு மிரண்டளவை வரையிலே யெனக்குத்தெரியுமேயல்லது மூன்றாமளவை நானறிய மாட்டேனென்றானல்லவா? அப்படியளக்குமளவில் முதலளவிலே சிவனு மகப்படுகையாலல்லவோ சிவனும் சிவமானது. "మృగో న భీమః కుచరో గిరిష్ఠాః యస్యోరుషు త్రిషు విక్రమణేషు" என்று ஸகலஜகத்ப்ரசித் தமான ஶ்ருதியிலே, "யஶ்ய" யாதொரு ஸ்ரீமந்நாராயணனுடைய, "உருஷு" மஹாவைபவசாலிகளுமாய், "த்ரிஷு" மூன்றுபடிப் பட்டதுகளுமா யிருந்துள்ள, "விக்ரமணேஷு" அளக்கிற வ்யாபா ரங்களிலே, "பீமః" "ఖ్యామణీశోభయాభీమః" என்கிறபடியே பீமஶ ப்தவாச்யனாய் பயங்கரனை ருத்ரனானவன், "ம்ருகோந" மான்குட் டியோ டொத்தவனாக, "சரிஷ்ட்டா" ஹிமவத்பர்வதத்திலே முடங் கிக் கிடந்தா னென்று சொல்லுகையாலே ருத்ரன் முதலடியிலே யகப்பட்டவனல்லவா?

இதுநிற்க, மேலே "శివనిందాకరం దృష్ట్వా ఘాతయేదథవా శపేత్ దేశం వా తం పరిత్యజ్య గచ్ఛేదన్యత్ర బుద్ధిమాన్" என்று எந்தத் தேசத்திலே சிவநிந்தை செய்யுமவர்களை யடித்தாதல் வைதாதல் பரிபவம்செய் வர்களோ, அந்தத்தேசத்தோடு கூடிய வுலகத்தையேவிட்டு விலக வேண்டு மாகையாலே யப்படி செய்யமாட்டாதவர்கள் அந்தத்தே சத்தைவிட்டுப்போக வேண்டுமென்று சொல்லி யிருக்கையாலே

யப்படியே சிவநிந்தாபரரான வைஷ்ணவர்களை நலிந்த க்ருமிகண்ட னிருந்தலோகத்தை விட்டுப் பெரியநம்பி லோகாந்தரமெழுந்தருளி விட்டார். ஸ்ரீஉடையவர் தேசாந்தர மெழுந்தருளினர். ஸ்ரீகூரேஶ மிஶ்ரர் இரண்டையும் செய்யமாட்டாமையாலே அந்தச் சண்டாளனைக் கண்ட கண்களை மாத்ரம் பரித்யாகஞ்செய்தருளினர். இப்படி யிவர்கள் அநுஷ்டித்துக் காண்பித்தது நாட்டார்க்கெல்லாம் வைஷ்ணவ தர்மத்துச் சிலா சாஸநமானபடியைச் சைவர்கள் கண்டு பொறுக்கமாட்டாமையாலே புனைந்துவைத்த பொய்களைக்கேட்டு இவ்வாலேபமானது மிக்க சந்தோஷமடைந் தூளை யிடுவதென்ன மடமை. "శివనిన్దాకరం" இத்யாதி வசநத்தில் பூர்வார்த்தத்திலே "யத்ர" என்று யத் ததோர்நித்யசம்பந்தத்தாலே வரக்கடவது, "యత్రయస్మిన్ । లోకేదేశేవా । శివనిన్దాకరందృష్ట్వా । అథశపేద్వా । తంలోకం । దేశంవాసుబుద్ధిమాన్ పరిత్యజాన్యత్రగచ్ఛేత్" என்று யோஜனை கண்டுகொள்வது. இங்ஙனன்றிக்கே பூர்வார்த்தத்திலே "யத்ர" என்று கூட்டாதபோது உத்தரார்த்தத்திலே தச்சப்தம் அந்வயிக்க மாட்டாது. "యత్రశివనిన్దాకరోతిచేత్తందేశం" என்று அந்வயிக்கப்பார்த்தால் "யத்ரசிவ நிந்தாகரோதிசேத்" என்கிற இவ்வளவும் கூட்டவேண்டுகையாலே இதைக்காட்டில் கீழ்ச்சொன்னபடியே "யத்ர" என்கிற இவ்வளவைக்கூட்டி யோஜிக்குமதே லாகவ ந்யாயாநுகுணமாகையாலே உபபந்நமாகக்கடவது. தச்சப்தம் ப்ரக்ருத பராமர்ஶியாகையாலே அத்யாஹாரமின்றிக்கே யோஜனையாகக் குறையில்லையே யென்னில், த்ரஷ்டசிவநிந்தாகரஹநநஶாபங்கள் மாத்ரமே கீழே ப்ரக்ருதமாகையாலே சிவநிந்தாகரதேசத்து ப்ரஸங்க மில்லாமையால் உத்தர தச்சப்தம் சிவநிந்தாகரஹநநாதிகளையே சொல்லப்ரஸங்கிக்கும். அவச்சேதகதயாதேசமும் பூர்வார்த்தத்திலே அநுக்தி சித்தமாகையாலே அது ப்ரக்ருதமென்னக் குறையில்லை யென்னில், அப்போது சாபாதி ரூபக்ரியாவச்சேதக தேசமே அவ்யவஹித ப்ரக்ருத மாகையாலே மேல் தச்சப்தம் அந்தத் தேசத்தைச் சொல்லவேண்டுகையாலே கீழே நாம் சொன்னபடியே யர்த்தமாகத் தலைக் கட்டும். அப்படி யிந்த ஶ்லோகம் சிவநிந்தகர்களைப் பரிபவிப்பா ரிருக்குமிடம் த்யாஜ்யமென்று சொல்லாநிற்க, இத்தையறியாதே யிதற்கு விபரீதார்த்தங்கொண்டு சிவநிந்தகர்களைக்கொல்வதே சைவர்களுக்குமுக்ய காரியமென் றிக் கரங்கோஷித்தது. இது மெய்யாகில் இவ்விழுதையே சிவாதிக்யரத்நாவளி உச-வது பக்கத்தில் இரக்க முதலிய அருட்செல்வப்பேற்றினராகிய சிவஜ்ஞாநிகள் வீண்சண்டை முதலியவற்றைத் தவமாகக்கொண்

டொழுகும் வைஷ்ணவசமயிகளை யெதிரிட வுடன்படாரென் றுரவா ரித்ததெல்லாம், பூனைத்தவக்கதை மொழியாய்விடுமல்லவா? பட்டணத்தடிகளும் சமயகுருக்களும் சிறந்த சிவாசாரமாகிய சிவநிந்தாகர ஹத்திகளைச்செய்யாமல் விட்டுவிட்டபடியாலே அவர்களெல்லாரும் கர்மசண்டாளர்களான பதிதர்களேயென்பதும் சொல்லாமேயமை யுமல்லவா ?

ஸ்ரீகண்ட சிவத்விஜன் செய்த சைவ பாஷ்யத்திலே "సర్వత్ర ప్రసిద్ధోపదేశాత్" என்னும் அதிகரணத்தில் "సత్యేసాధౌ చ సచ్ఛబ్ద స్సద్భిరేవప్రయుజ్యతే । విపరీతేత్వసచ్ఛబ్దః కథ్యతే వేదవాదిభిః । సచ్చాసచ్చ జగత్సర్వం శరీరంపరమేష్ఠినః" என்றுதொடங்கி "దేహినో యస్యకస్యాపి నిగ్రహః క్రియతే యది। అనిష్టమిష్టమూర్తేస్తు న్నాత్ర కార్యావిచారణా। సర్వోపకారకరణం సర్వానుగ్రహణంతథా । సర్వాభయప్రదానంచ శివస్యారాధనంవిదుః" என்னுமளவாலே சாதுவாகிலுமாம் துஷ்டனாகிலுமாம் ஆரேனு மொருவனை நிக்ரஹிப்ப தெல்லாம் சிவனுக் கநிஷ்டந்தா னென்பதில் விசாரிக்க வேண்டுவதே யில்லாமையாலே அப்படியே ஸத்யமென்றும் சத்ருமித்ரு விசாரமின்றிக்கே ஸர்வஜந்துக்களுக்கும் தயைசெய்வதுவே சிவனுக்கு முக்ய பூஜையாவதென்றும் முறை யிட்டிருக்க, இம்மூடசிகாமணியும் சிவாதித்யரத்நாவளி ௩௩ - வது பக்கத்திலே நீலகண்டனையும் ஸ்ரீகண்டனையு மொருவனாகக்கொண்டு நீலகண்ட சிவாசார்யர் திருவாக்கே யெமக்கு ப்ரமாணமென்று சத்யம் பண்ணியிருக்க, இதையெல்லா முணராதே இவ்வசநத்திலே சிவநிந்தகர்களைக் கொல்வதே சிவாராதநமாகச் சொல்லுகிறதென்று பிதற்றுவ தென்ன நிக்ருதி.

மேலும், பெரியநம்பி முதலானவர்கள் "ஏசியேயாகிலு மீர்ந்து ழாய் மாயனையே, பேசியே போக்காய் பிழை" என்றிருக்கு மவர் களாகையாலே இவர்க ளேசினும், கடியன் கொடியன் என்றெம் பெருமானை யேசுவர்களே யல்லாமல், வாயெச்சிலாய் விடுமென் னும் பயத்தாலே, ஏசுகைக்காகவும் தேவதாந்தரத்தை வாயால் தொ டமாட்டார்க ளாகையாலே அவர்கள்மேலே சிவநிந்தை செய்தார் களென்று பழிசுமத்துவது பெருவஞ்சகமாம். "சிவாத் பரதரம் நாஸ்தி" என்றதற்கு "த்ரோண மஸ்தி ததஃபரம்" என்று நிந்தித் தார்களே யென்னில், கண்ணோய் கொண்டவனுக்குக் கண்காட்டி யான விளக்கே பகையானாற்போலே, "த்ரோண மஸ்தி ததஃபரம்" என்கிற வாக்யம் சைவர்களுக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணவற் று யிருக்கச்செய்தேயும் நிந்தையாய் விட்டது அவர்களுடைய பாப

பலத்தாலல்லவோ? கெடுவாய், "சிவாத் பரதரம் நாஸ்தி" என்று கையொப்பம் வாங்குவாயாகில், சிவாத்பரவஸ்துவொன்றுண்டென் பதற்கிதுதானே சாக்ஷியாமென்றும், சிவஶப்தத்தாலே உன்னுடைய பரவஸ்துவைச் சொல்லுவாயாகில் அது சாதாரண ஶப்தமாகையாலே அர்த்தாந்தரம் ப்ரஸங்கிக்குமென்றிப் புடைகளாலே "த்ரோண மஸ்தி ததஃபரம்" என்கிற வாக்யம் "சிவாத் பரதரம் நாஸ்தி" என்று ப்ரதிஜ்ஞை செய்த மடையனுக்குப் போம்வழி காட்டவற்றா யிராநின்றதே யல்லது தேவதாந்தரமானது பகமேட்ர ஸம்ஸர்க்க ரூபமென்று, நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளமாம்படி உள்ளதைச் சொல்லி யாகிலும் நிந்திக்க வற்றா யிருப்ப தொன்றல்ல. ஆகையாலே, விட்டிற் பூச்சியானது ஜந்மாந்தர பாபத்தாலே மங்கள தீபத்திலே விபரீத புத்தி பண்ணி அதை யழிக்கத்தேடி அதிலே விழுந்து சாவது போலே, சோழன் முதலான சைவ மூடர்களும் ஸகல ஜகத்துக்கும் மங்களாவஹர்களான ஸ்ரீஉடையவர் முதலான திவ்யஸூரி விஷயங்களிலே "ఏషఏవా సాధుకర్మ కారయతి" என்கிற பகவந் நிக்ரஹாதிஶய பல ஸங்கல்ப விசேஷத்தாலே யபராதப்பட்டு உடனே யழுகிப்புழுத்துப் புரண்டாற் போலே இவ்வாதனும் இப்படி யெல்லாம் அபராதப் பட்டதற்குப்பலமாக உடனே யழுகிப் புழுத்துப் புரண்டு போனதை நாமெல்லோரு மறிவோமாகையாலே இவனை யினி விசேஷித்துக் கண்டிப்ப தெல்லாம் திஷ்ட்ட ஹதமுத்கராபிகாத ந்யாயக பளிதமாகு மென்று கருதிக் காறியுமிழ்ந்து கைவிட்டுச் செல்லுகிறோம்.

மேலே, கூரேசவிஜய் பூர்வபக்ஷ ஶ்லோகங்களைத்திருடி, அவற்றை ஹரதத்த னென்பா னொருவன் சத்யம் பண்ணிப் பாடின ஶ்லோகங்க ளென்று கல்பனை செய்து இம்மடையன் பிதற்றினான் அது மெய்யாகில், இப்போது இருப்புப்படியைக் காயவைத்து சைவர்க ளிந்த ஶ்லோகத்தைச் சொல்லிக் கொண்டேறி நின்று பிழைத்துக் காட்ட வேண்டும். அது இக்காலத்துக்குச் சத்ய மல்ல வென்னில், இப்போது பொய்யாய் விட்ட அந்த ஶ்லோகங்களை யிவனிப்போது செய்த க்ரந்தத்தில் உதாஹரிப்பானேன்? இந்த ஶ்லோகங்கள் அக்காலத்தில் விளக்கிய பொருளையே யிக்காலத்திலும் விளக்குமாகில் இவை யிக்காலத்துக்கும் மெய்யாகவே யிருக்க வேண்டும். கால தோஷத்தாலே மெய்யே பொய்யாய் விடு மெனின், ஹரதத்தன் சத்யம் பண்ணதாக இப்பேய் பிதற்றுங் காலமும் கலிகாலமேயாகையால் காலதோஷத்தாலே பச்சைப்பசும் பொய்யான இந்த ஶ்லோகங்களே மெய்போல விளங்கின வாதலால் "நதேவம் கேஶ

வாத்பரம்'' என்று யுகாந்தரங்களிலே மஹர்ஷிகள் ஸத்யம் பண்ணினதே ஸத்ய] மென்னு [மிடம் புத்திமான்களுக்குத் தோன்ருமற் போகமாட்டாது.

இச்சைவப் பசாசு ஶாஸ்த்ரங்களால் தானே சிவனுக்குப்பரத்வஸ்த்தாபநஞ் செய்ய மாட்டாதே, எங்களப்பன் கூத்தாடி யாகையாலே எனக்குப் பிச்சையிட வேண்டு மென்பவனைப்போலே ஹரதத்தன் உப்பில்லாமல் கலக்கஞ்சி குடித்து விட்டா னுகையாலே சிவனே பர னென்ருல் இம் மண்ணையி னுடைய மூடத்தனத்துக்கு வித்வான்கள் விசனப்படுவார்க ளென்பதற்குச் சந்தேக முண்டா? இந்த ஶ்லோகங்க ளெல்லாம் கூரேசவிஜய மென்னும் நூலிலே கண்டந் துண்டமாகக் கண்டிக்கப் பட்டிருப்பதை யெல்லாரு மறிவார்கள். அறியாதாரு மறிய வேண்டில், மேலே நாம் மொழி பெயர்த் தெழுதுகிற மணி ப்ரவாள வ்யாக்யாநத்தாலே யறிந்து கொள்ளலாம். மேலும் சில ராஜஸ தாமஸ வசநாபாஸங்களைக் கொண்டு, அவற்றையு முள்ளபடி யறியாமல், பாடங்களையும் வேறுபாடாக்கி அம்முகத்தாலே சக்ராங்கநத்தை நிந்தித்தான். அப்படி இவனுதாஹரித்த வசநங்களுக்கு முள்ளபடி யர்த்தஞ்சொல்லுகிறோம். ''శంఖచక్రంమృదాయస్తు కుర్యాత్తాపనకర్మణా। సశూద్రవద్బహిష్కార్య స్సర్వస్మాద్విజకర్మణః'' என்றிவன் கற்பித்த வசநத்தில் சங்கசக்ரங்களை மண்ணாலேசெய்து சூளைபோட்டுவைத்துக் கொள்ளுமவன் சூத்ரனேடொப்பா னென்கிறது. இங்கு தாபநகர்மமென்கிறது சூளைபோடுவதே. இப்படி சங்கசக்ரங்களை மண்ணாற்செய்து சூளைபோட்டுக்கொள்ளலாகா தென்கையாலே ''హిరణ్మయాదాయసు దర్శనంకృత్వా। తద్వహ్నిచిహ్నాంసముపైతియుక్తమ్'' என்று ஶ்ருதியிற் சொன்னபடியே ஸ்வர்ணுதிகளாலே செய்துகொள்ள வேண்டுமென்று நியமிக்கப்பட்டதாயிற்று. ''యథాశ్మశానగంకాష్ఠ మనర్హంసర్వకర్మసు। శంఖచక్రాద్యంకనంచ నృత్తగీతాదికంతథా'' என்கிற வசநத்திலே பரிசுத்தமான அகிற்கட்டையானது ருத்ரபூமி சம்பந்தத்தாலே யசுத்தமாமாப்போலே, சங்கசக்ராத்யங்கநாதிகளும், பகவத்குண கானநர்த்தனுதிகளும் ருத்ரபூமி சம்பந்தத்தாலே யசுத்தமாகு மென்கிறது. இத்தாலே சிவாலய சமீபங்களில் சக்ராங்கநாதிகள் செய்யலாகாதென்று நியமிக்கப்பட்டது. ஆகையிறே ஆலயத்துச் சடகோபனும் த்யாஜ்யமாய் விட்டது. ''బ్రాహ్మణో యది మోహాద్వై తాపయేద్వహ్నిముద్రయా। సకర్మానర్హో భవేదత్ర సవై పాషణ్డసంజ్ఞకః'' என்கிறவசநத்

தில் ப்ராஹ்மணனானவன் ஒருவனுக்கு மயக்கங்கொடுத்துச் சூடு போடுவானாகில் கர்மபாஹ்யனாவானென்கிறது. இதனாலே தாபபீதி யில்லாமல் புத்தி பூர்வகமாக சக்ராங்கநம் செய்துகொள்ளவேண்டு மேயல்லது, ஔஷதங்களாலே சூடுதெரியாதபடி மயக்க மூட்டிக் கொண்டு சக்ராங்கநாதிகள் செய்துகொள்ளலாகாதென்று நியமிக் கப்பட்டது. இதுவாதவ்யாதி சிகிச்சாதிகளுக்கு மொக்கும். ஆகை யிறே சக்ரமுத்ரையென்று விசேஷியாமல் "வஹ்நிமுத்ரயா" என்று சொல்லுகிறது. அன்றிக்கே, மோஹத்தாலுண்டான வஹ்நிமுத்ரை யாவது லிங்காங்கநாதிகளே யாகையாலே தாபஸம்ஸ்கார ஶாஸ் த்ரத்திலே அந்ய தாஜ்ஞாநாதிரூப மோஹத்தாலே லிங்காங்கநாதிக ளைச் செய்வனாகில் அவன் பதிதனாவா னென்கிறது. அதவா,"வஹ்நி முத்ரயா"என்றதுருத்ரமுத்ரயா என்றபடி."ருத்ரோவாஏஷயதக்நி:" என்கிற ஶ்ருதியாலே அக்நியே ருத்ரனென்று சொல்லப்பட்டதாக இம்மடையனே பிதற்றினானல்லவா? யத்வா "வஹ்நிமுத்ரயா" என் றது ஆக்நேயமதசித்தமான மணிவிஸ்ப்புலிங்கதாரணரூபமான அக்நி தேவதா சிந்ஹத்தாலே யென்றபடி. இத்தால் பிராஹ்மணன் அஜ் ஞாநத்தாலே ஆக்நேயமத ப்ரவிஷ்டனாய் தச்சிந்ஹதாரணம் பண் ணுவானாகில் பதிதனாவானென்கிறது. மேலே "వేదేషుయజ్ఞభాగేషు యస్యనాస్త్యధికారితా । సతాపయిత్వా చక్రాదీన్ ధారయేత్తుభుజద్వయే" என்கிற வசநத்திலே வேதங்களிலும்,யஜ்ஞங்களிலும் அதிகரிக்கவே ண்டில் அவஶ்யம் சக்ராங்கநம் செய்துகொள்ளக் கடவனென்கி றது. இளைத்தவன் எள்ளை விரைப்பானென்றால் இளைப்புத் தீருகைக் காக எள்ளைவிரைக்கக் கடவனென்று தோன்றுமாப் போலவும், தரித்ரன் ராஜசேவை பண்ணக்கடவனென்றால் ராஜசேவையாலே தரித்ரம் ஹதமாய்ப்போமென்று தோன்றுமாப் போலவும், பிள் ளையில்லாதவன் புத்ரகாமேஷ்ட்டி செய்யக்கடவனென்றால் புத்ர காமேஷ்ட்டியாலே பிள்ளையுண்டாகுமென்று தோன்றுமாப் போ லவும், வேதாதிகளில் அதிகாரமில்லாதா ரெல்லாரும் இரண்டு கை யிலும் சக்ராத்யங்கநம் பண்ணிக்கொள்ளக் கடவர்களென்றால், இர ண்டுகையிலும் சக்ராத்யங்கநம் செய்து கொள்ளுகை வேதாத்யதிகா ரங்களையுண்டாக்கு மென்று தோற்று மல்லவா? இங்ஙனன்றிக்கே, சக்ராங்கநாதிகளைப் பண்ணிக்கொள்ளுகை பதிதலகமாறுபாடாக அ ர்த்தஞ்சொல்லில்,காநீநர்களும்,குண்டகோளகர்களு மாகையாலே, வேதாதி காரஹீநர்க ளென்று ஸ்ம்ருதி ஸங்க்ரஹம், வைத்யநாதீயம் முதலானவற்றில் ஸ்த்தாபிக்கப்பட்ட சிவத்விஜர்களெல்லாரும் தங்க ளுடைய வேதாநதிகாரம் தோற்றும்படி யிரண்டுகையிலும் சக்ராங்க

நாதிகளைச் செய்து கொள்ள வேண்டு மல்லவா? அன்றிக்கே இந்தஶ்லோகத்தில் விஷ்ணு சக்ரத்தை விசேஷித்துச் சொல்லாமையாலே சாமாந்யமான சக்ரஶப்தம் ஶ்ரீசக்ரத்தையும், சிவசக்ரத்தையுங் காட்டக் கடவது. ஶ்ரீசக்ரமாவது துர்க்காசக்ரம். இவற்றின் படிகளெல்லாம் சைவாகமங்களிலே பரக்கக்காணலாம். இச்சக்ரந்தான் சங்கரமடத்தின் பிருதாவளியிலும் ப்ரசித்தமா யிருக்கும். இதை யந்த்ர ரூபமாக வெழுதிச் சுருட்டித் தாழ்த்தியாக வோர்தகட்டிலுள் ளடக்கஞ்செய்து வெண்கலப் பற்று வைத்து நெருப்பிலிட்டுதி, கையிலுங் கழுத்திலுந் தலையிலும் சிலர்கட்டிக் கொள்வதுண்டு. அது வேதாநதிகாரத்துக்கே குறியென்னு மிடம் இவ்வசநத்தாற் சொல்லப்பட்டதாகவுமாம். "சக்ராதீந்" என்று ஆதி ஶப்தத்தாலே லிங்காதிகளைச் சொல்லுகிறது. "தாபயித்வா" என்று தாழ்த்தியாக்கி நெருப்பிலிட் டேதும்படியைச் சொல்லுகிறது. யந்த்ரத்தைக் காய்ச்சி யுடம்பிலே சூடு போடும்படியைச் சொல்லுகிறதாகவுமாம். அதவா, "சக்ராதீந்" என்றது சூலங்களை யென்றபடி. "சக்ராதீந்" என்றால் சூலத்தைக்காட்டுமோவென்னில், சைவர்களுடைய பாவனையாலே காட்டக்கடவதல்லவா? சிவனுடைய சூலத்தினின்று சக்ரம் பிறந்ததென்றல்லவோ சைவர்கள் சொல்லுவது. ஆகையாலே சக்ரத்துக்குமாதி காரணம் சூலமல்லவோ வென்று சூலாங்கநத்தைத் தரித்துக்கொள்வது பாதித்யத்துக்கே குறியென்னு மிடம் இந்த ஶ்லோகத்தால் சொல்லப்பட்ட தாயிற்று. இத்தால் விஷ்ணு சக்ரத்துக்கு மஹிமை குன்றுதோ வென்னில்? குன்றாது. கம்மாளனுடைய குறட்டாலும் சாமணத்தாலும் சுத்தியாலும் உண்டாக்கப் பட்ட அர்ச்சாவதார சக்ராதிகளுக்குப் புகழ்குன்றின லல்லவோ? பெருங்கம்மாளனான சிவனுடைய பெருங்குறடும் சாமணமுமான சூலத்தாலே சக்ரமுண்டாக்கப்பட்ட தென்றால் புகழ்குன்றுகைக்கு ப்ரஸங்க முள்ளது. "బ్రాహ్మణోయది మోహేన" இத்யாதி ஶ்லோகமும் "బ్రాహ్మణో యది మోహాద్వా" இத்யாதி ஶ்லோகத்தோபாதி மயக்கமூட்டி சக்ராங்கநம் செய்யலாகாதென்கிறது. "పూర్వేజస్స్వ్యతీనుంధక్త్వా శంఖచక్రాదిభిః పృథక్ । నతస్యనిష్కృతిర్దృష్టా స్నానదానవ్రతాదిభిః" என்கிற வசநத்தினால் உத்தம ஜந்மாவா யிருந்தானே யாகிலும் ஆசார்ய ஸமாஶ்ரயண மின்றிக்கே, தானே ப்ருதக்காகித் தன் கையினாலேதானே ஶங்கசக்ராங்கநத்தை எவன் பண்ணிக்கொள்ளுகிறானோ அந்த ப்ராஹ்மணனுக்கு ஸ்நாநதாந வ்ரதாதிகள் ப்ராயஶ்சித்தமாக மாட்டாது, என்றே பொருள் கொள்ளவேண்டும். அல்லாதபோது, "ப்ருதக்" என்கிற பதம் ப்ரயோஜந மற்றதாய் விடும்.

அன்றிக்கே, யாதொரு ப்ராஹ்மணன் ஶங்கசக்ராங்கநம் பண்ணிக் கொண்டிருக்கிறான், அநாதிகாலமே தொடங்கி செய்யப்பட்டுள்ள அவனுடைய பாபங்களுக்கெல்லாம் அந்த ஶங்கசக்ராங்கநமே ப்ராயஶ்சித்தமல்லது, வேருன ஸ்நாநதாநாதிகள் ப்ராயஶ்சித்த மல்லவென்று பொருள் கொள்ளவேண்டும். இப்படிகொண்டா லல்லது "தக்த்வா" என்கிறவிடத்தில் 'த்வா' என்கிற ப்ரத்யயத்திற்குப் பொருள்சேர்ந்ததாக மாட்டாது. மேலும், இந்த ஶ்லோகத்தை வந்ஹி புராணவாக்யமாக இம்மூடன்சொன்னது அவனுடைய மூடத்தனத்தையேவெளியிடுகின்றது. இந்த ஶ்லோகம் வந்ஹி புராணத்தில் கண்டவராயின் இன்னபாகத்தில், இன்ன அத்யாயத்தில், இன்ன உபாக்யாநத்தில், இன்னுனிநோக்கி இன்னார்சொன்னதென்றெழுதா மல்லவா? அப்படிக்கண்டெழுதாமற் போனதே இந்த ஶ்லோகமானது, புராணங்களின் ஸ்வரூபமின்னதென்றறியாத காநீநகுலத்தில் பிறந்த காட்டாவூர்-சுந்தரசிவாசார்யனுக்கே தகுதியாக விருக்கின்றது. அன்றிக்கே, திருவடிசை நல்லூர்- இராம சுப்பாசாஸ்த்ரிகளால் வெளியிட்டுள்ள "விஷ்ணுதத்வரஹஸ்யம்" என்னும் க்ரந்தத்தில் ரு-வது பக்கத்தில் "తదాహిమాత్స్యేక పంచాశేధ్యాయే। సంకీర్ణాస్సాత్త్వికాశ్చైవ రాజసాశ్చైవతామసాః। కల్పాశ్చతుర్విధాప్రోక్తాః బ్రహ్మణోదినముచ్యతే" என்று தொடங்கி எ-வது பக்கத்தில் "రాజసత్త్వమయోహ్యేషః తమోరజవివర్జితః। ఇతి। మోక్షధర్మవచనేనవిష్ణోః శుద్ధసత్త్వాత్మకత్వ ప్రతిపాదనేనచ" என்னுமளவான க்ரந்தத்தால் வந்ஹிபுராணமுதலிய தாமச புராணங்களின் வாக்யங்கள் முமுக்ஷுக்களுக்கு நம்பத்தக்க தல்லவென்றும், காநீநகுல மூர்த்தாபிஷிக்தரான இக்காட்டாவூர் - சுந்தரசிவாசார்யர் போன்ற சிவத்விஜருக்கே நம்பத்தக்க தென்றும் பலவாருகக் கூறியிருந்தும், அச்சைவகுல தூல காலாக்நியான விஷ்ணுதத்வ ரஹஸ்யத்தையேனும் கண்டுதெளியாமல் இந்தக்குருடன் வந்ஹிபுராண வசநத்தையெடுத்திவ்வா றழுதது எல்லோர்க்கும் ஹாஸ்யகரமாக விருக்கின்றது.

இனி, "శంఖచక్రగదాపాశ చాపదండాంకుశాదిభిః। అంకితాశ్రద్ధయాయేయంభవతి బ్రాహ్మణాధమాః" என்கிற வாக்யத்தை இன்ன புராணத்திய தென்றறியாமல் சூதசம்ஹிதா வாக்யமென்று இந்தஞானிகுரைத்ததற்குக் காரணமேதோ அறிகிலேம். அப்படி, அதிலிந்த ஶ்லோகமிருந்த போதினும் ஸ்காந்தபுராணத்தைத் தாமசமென்று கழித்திட்டபோதே இந்த ஶ்லோகமும் தள்ளுண்டு போமல்லவா? அப்படியிருக்க இந்தமதிகேடன் இந்த ஶ்லோகத்தை இவ்விடத்தி

னேயிட்டது அவனுடைய மூடத்தனத்தை விளம்பரப் படுத்தா நின்றது. ஆயினும், இந்தஶ்லோகத்திற்குப் பொருள் உள்ளபடியேகூறுகின்றோம். வராஹபுராணத்தில், பன்னிரண்டாவது அத்யாயத்தில் "నారాయణమథాన్యైః స్తుదేవైస్తుల్యంకరోతియః।తస్యపాపేనలిప్యేయ యద్యహంనాగమేప్సునః" என்கிறவாக்யத்தில் சகலதேவர்களுக்கும் காரணபூதனை ஸ்ரீமந்நாராயணனை இருவகைப்பட்ட வினைகளாலே பூரிக்கப்பட்டுள்ள சிவன் முதலிய தாமஸ தெய்வங்களோடே சமமாக யாவனொருவனெண்ணுகிறானோ அவனை மஹாபாபியாகச் சொல்லிற்று. அப்படியே ஸர்வஸ்மாத்பரனை ஸ்ரீமந்நாராயணனுடைய சிந்ஹங்களான ஶங்கசக்ராதிகளோடே கூட க்ஷுத்ரதேவதைகளுடைய சிந்ஹங்களான பாஶ, தண்ட, அங்குஶங்களாலேயும் அங்கிதராகிறது சிறந்தபாபத்தின் பயனுகையால் அப்படிப்பட்ட தாபத்தையுடையீராகக் கடவீரென்று ஶபித்ததாகக் காட்டுகிறது.

இப்படியே "వేదబాహ్యేషుతన్త్రేషు పాఞ్చరాత్రేషుచద్విజాః। భవన్తోదీక్షితాయూయం యుష్మాకంవంశజాస్తథా। అఙ్గేషుచాఙ్కితాయూయం శంఖచక్రాఙ్కుశాదిభిః । భవతశ్రద్ధయాసార్ధంవేద బాహ్య ద్విజాధమాః" என்கிறஶ்லோகங்களைக் காசிகாண்டத்திலிருக்கிறதாகப் பிதற்றியதும் பித்தகுணத்தாலென்றே அறியக்கடவது. இன்னபுராணம், இன்னஅத்யாயம், இன்ன இடமென்று தெரியாமல் இந்தஶ்லோகத்தை எழுதித் துலைத்தது இவனுடைய கண்ணறையையே தெரிவிக்கின்றதன்றி வேறன்று. அன்றியும், இந்த ஶ்லோகத்திற்குப் பொருள் இப்பேதைபிதற்றியவாறன்று? மற்றெப்படிஎனின், மேற்கூறிய ஶ்லோகத்தைப்போலவேயாம். எங்ஙனேயென்னின், "வேதபாஹ்யேஷு" வேதவ்ருத்தங்களான சைவாகமத்திலும், "பாஞ்சராத்ரேஷுச" வைதிகமான பாஞ்சராத்ரத்திலும், "த்விஜாஃ" ப்ராஹ்மணர்களான, "பவந்தஃ"நீங்கள், "தீக்ஷிதாஃ" தீக்ஷைபண்ணிக்கொண்டவர்களாகக்கடவீர்கள், "யுஷ்மாகம்" உங்களுடைய, "வம்ஶஜாஃ" வம்ஶத்திற்பிறந்தவர்களும், "ததா" அப்படியே ஆகக்கடவர்கள், "அங்கேஷு—சாங்கிதாயூயம்" நீங்கள் உங்களுடம்புகளிலே, "ஶங்குசக்ராங்குஶாதிபிஃ" ஸர்வஸ்மாத்பரனை ஸ்ரீமந்நாராயணனது சிந்ஹங்களான ஶங்கசக்ரங்களையும், க்ஷுத்ரதேவதைகளுடைய சிந்ஹங்களான அங்குஶமுதலியவற்றையும் தரித்தவர்களாகக் கடவீர்களென்றபடி. இத்தால், ஒருவன் வைதிகமான பாஞ்சராத்ரத்திலும், வேதவ்ருத்தமான சைவாகமத்திலும் தீக்ஷைபண்ணிக் கொள்ளுகிறதும், ஶங்கசக்ராதிகளோடொக்க க்ஷுத்ரதேவதைகளுடைய

சிங்ஹங்களைத் தரிப்பது மஹாபாபத்தினுடைய பலமாகையால் அதனையே இவ்விடத்தில் ஶாபமாகக்கொள்ள வேண்டியது. அரசனைக் கணவனாகக்கொண்ட ஒருகன்னிகையானவள், அவனால் கட்டப்பட்டதாலியைத்தரித்து, அவனிடத்திற் பணிவிடைசெய்கிற ஒரு அல்பமனிதனால் கட்டப்பட்ட தாலியையுந் தரித்தால் அவ்வரசன் கைவிடுகைக்கும், உலகத்திலெல்லோரும் பரிஹஸிக்கைக்கும் உடலாய், மஹாபாபபலமாமல்லவா? ஆகையால் இஶ்லோகத்திற் கிவ்விதப் பொருளிருக்க, இஶ்லோகத்தோடு பொருந்தாத வேறு பொருளைபிதற்றினால் இம் மூடனுக்கென்ன பயனுண்டு?

ஶேஷதர்மத்தில், ௫ - வது அத்யாயத்தில், பார்வதி ருத்ரசம்வர்தத்தில், ருத்ரன் "సాధుసాధుమహాదేవీ సాధూనాఞ్చహితైషిణి । వైష్ణవానాఞ్చమాహాత్మ్యంత తవక్ష్యామిసవ్రతే" என்றுதொடங்கி "శంఖచక్రాఙ్కితాన్ భక్తాన్ యఃపూజేతిమానవః । ససాక్షాద్విష్ణుసామీప్యంలభతేనాత్రసంశయః" என்னு மளவாக, ஶங்கசக்ரங்களாலே அங்கநம் பண்ணப்பட்ட பாகவதோத்தமர்களை யாவனொருவன் பூசைசெய்கிறானோ அவன் ஸர்வஸ்வாமியாகிய ஸ்ரீமந்நாராயணனது ஸாமீப்யமாகிற மோக்ஷத்தை யடைகிறான், என்போல்வார்க்குங்கூட துர்லபமான மோக்ஷம் அவனுக்கெப்படி வரக்கூடுமென்று நீ சந்தேஹிக்க வேண்டாம் என்றும், (௧) "విష్ణుచక్రాంకితంవిప్రంయోభూమావభివాదయేత్ । లలాటశక్తపాంసూనాం సంఖ్యాతస్యాస్తియావతీ (௨) తావత్సమాంస్సభూపాల బ్రహ్మలోకే మహీయతే" என்று, ஸ்ரீவிஷ்ணுவின் சக்ரத்தாலே அங்கநம் பண்ணப்பட்ட ப்ராஹ்மணனை யாவனொருவன் பூமியிலே சாஷ்டாங்கமாகவிழுந்து தண்டமிடுகிறான், அவனுடைய நெற்றியில் படியுந்தூள் எவ்வளவு சங்க்யையோ அவ்வளவு சங்க்யையுடைய வருஷங்கள்வரையில் சதுர்முகனதுலோகத்தில்வஸித்து, சதுர்முகன் முதலானவர்களாலே பூஜிக்கபடுகிறான்; (௩) "స్వగోత్రమపియఃశ్రాద్ధే చక్రాఙ్కితభుజంభజేత్। ససాక్షాద్విష్ణుసాయుజ్యంద్విజః ప్రాప్నోత్య సంశయః" என்று, யாதொரு ப்ராஹ்மணனானவன் தனக்குச்சமான கோத்ரத்திற்பிறந்தவனே யாகிலும், ஶங்குசக்ரங்களால் அங்கநம் பண்ணப்பட்ட தோள்களை யுடையவனை நிமந்த்ரணம் பண்ணுகிறானோ அவன் ஸர்வஶேஷியாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய சாயுஜ்யத்தை யடைகிறான், இவ்வர்த்தத்திலும் நீசந்தேஹிக்கவேண்டாம்; (௪) "శంఖచక్రాఙ్కితంవిప్రందృష్ట్వాయో హ్లాదితోభవేత్ । సప్తజ్యలోకానాప్నోతి ఐహికంసుఖమస్నుతే" என்று, ஶங்கசக்ரங்களாலே புஜ

மூலங்களிலே அங்கநம் பண்ணப்பட்டு, அத்தாலுண்டாகும் ப்ராஹ்மணத்வ சித்தியுடையவனைச் சேவித்து, நாம் கண் படைத்த ப்ரயோஜநம் பெற்றோமென்று யாவனொருவன் சந்துஷ்டனாகிறானோ அவன் புண்யலோகங்களை யடைகிறான்; (ரு) "చక్రాఙ్కితానాన్నామాని యోవదేద్భక్తిమాన్నరః । సర్వపాపవినిర్ముక్తః సయాతిపరమంపదమ్" என்று, சக்ராங்கநமுடைய பாகவதோத்தமர்களது திருநாமங்களை யாவனொருவன் பக்தியுடனே சொல்லுகிறானோ, அவன் சகலபாபங்களினின்றும் விடுபட்டவனாய்க்கொண்டு பரமபதமான த்ரிபாத்விபூதியைப்பெறுவான்; (சு) చక్రాఙ్కితాయవిప్రాయ యోభక్త్యాన్నందదాతిచ। అన్నసంఖ్యానివర్షాణి బ్రహ్మలోకేమహీయతే" என்று, சக்ராங்கிதனாய், அத்தாலேவந்தவிப்ரத்வசித்தியையுடையப்ராஹ்மணோத்தமன் பொருட்டு, ப்ரேமத்தோடே யாவனொருவன் அமுதுசெய்தற்குப் பாங்கான த்ரவ்யங்களைக் கொடுக்கிறானோ, அந்தத்ரவ்யங்களின் சங்க்யையெவ்வளவோ அவ்வளவுவருஷங்கள் வரையில் ப்ரஹ்மலோகத்தில் சதுர்முகனாலே பூசிக்கப்படுகிறான்; (எ) "విష్ణుభక్తాయవిప్రాయచక్రచిహ్నాయమానవః। గోచర్మమాత్రంయోదద్యాద్భూమింస్యాత్సతురాజ్యభాక్" என்று, விஷ்ணுபக்தனாயும், சக்ராங்கிதனாயு மிருக்கிற ப்ராஹ்மணனுக்கு அற்பபூமியையாவது யாவனொருவன் தாநம்பண்ணுகிறான், அவன் மஹாராஜ்யபலத்தை யடைகிறான்; (அ) "విషువాయనసంక్రాన్తి షూపరాగేతథారవేః । చక్రాఙ్కితాయవిప్రాయ దానాన్మోక్షమవాప్నుయాత్" என்று விஷுவத்திலும், அயநங்களிலும், ஸங்க்ராந்திகளும்க்ரஹணங்களுமாகிறபுண்யகாலங்களிலும்சக்ராங்கநமுடையப்ராஹ்மணன்பொருட்டுபண்ணுந் தாநத்தால்மோக்ஷத்தையடையலாம்; (கூ) "విష్ణుచక్రాఙ్కితంవిప్రం విష్ణుమూర్తిమివస్మరేత్। సోపివిష్ణుపదంయోభూత్వావైష్ణవీంగతిమాప్నుయాత్" என்று, ஸ்ரீவிஷ்ணுசக்ராங்கிதனைப்ப்ராஹ்மணனை சாக்ஷாத்பரப்ரஹ்மமான ஸ்ரீமந் நாராயணனுக்கு திவ்யமங்கள விக்ரஹமாகவேநினைக்கக்கடவன்; அப்படி நினைத்தாகிலுமெம்பெருமானுக்கு ஶரீரபூதனாய் ஸ்ரீவிஷ்ணுலோகமான பரமபதத்தையடையக் கடவன்; (௰) "అగ్నితప్తేనచక్రేణ బాహుమూలేతులాఞ్ఛితాః।దహన్తిసర్వపాపాని తూలరాశినివాగ్నయః" என்று சுதர்ஶந மந்த்ராதிகளாலே ஹோமம் செய்யப்பட்ட அக்நியில் தபித்துள்ள சக்ராதிகளாலே பாஹுமூலத்திலே அங்கநம் பண்ணப்பெற்றவர்கள் சகலபாபங்களையும் பஞ்சுக்கூட்டத்தின் அக்நிபோலவே தஹிப்பர்கள்; (௰க) "యస్మిన్ చక్రాఙ్కితావిప్రా వసన్తినగరస్థగ్రావాః । తద్దేశవాసినస్సర్వే

వైష్ణవత్వం భజన్తివై" என்று, யாதொரு தேஶத்தில் சக்ராங்கிதர்களான மனுஷ்யஶ்ரேஷ்டர்கள் வாசம்பண்ணுகிறார்களோ, அந்தத்தேசத்திலிருக்கிற சகலரும் வைஷ்ணவத்தையடைவர்கள்; (௰௨) "విష్ణుచక్రాఙ్కితో విద్వాన్ యస్మిన్ దేశేవసేత్సుఖమ్। సదేశోమత్ప్రియఃపుణ్యో వైష్ణవానామతిప్రియః" என்று, விஷ்ணு சக்ரத்தாலே அங்கநம் பண்ணப்பட்ட ஜ்ஞாநாதிகனான பாகவதன் சுகவாசம்பண்ணுகிற அந்த அதிபரிஶுத்த தேஶமானது எனக்கு மிகவும் விரும்பத்தக்கது, வைஷ்ணவர்களுக்கும் விரும்பத்தக்கது; (௰௩) "విష్ణుభక్తిరతాముఖ్యాశ్శఙ్ఖచక్రాఙ్కితాద్విజాః। క్రీడార్థమపియద్బ్రూయుస్సధర్మః పరమోమతః" என்று, விஷ்ணுபக்தியிலத்யந்த ஆசையுள்ளவர்களாய், ஶங்கசக்ராங்கிதர்களான ப்ராஹ்மணர்கள் லீலையாகவேனும் சொல்லுகிற அர்த்தவிஶேஷங்களே பரம தர்மமாகக் கடவது; (௰௪) "యస్మిన్ దేశేకృతస్నానా వైష్ణవాశ్చక్రలాఞ్ఛితాః। తస్మిన్ స్నానం ప్రకుర్వీత విష్ణులోకమవాప్నుయాత్" என்று, சக்ராங்கநத்தையுடைய பாகவதோத்தமர்கள் நீராடும் ஸரஸ்ஸில் யாவனொருவன் ஸ்நாநம்பண்ணுகிறான், அந்தபாகவத ஸ்ரீபாததீர்த்த ப்ரசாதத்தாலே பரமபதத்தை யடைவன்; (௰௫) "యస్తుపాప ప్రసక్తోపి విష్ణుభక్తస్య భక్తితః। పాదప్రక్షాళనం కుర్యాదాత్మశుద్ధి కృదేవసః" என்று, ஒருவன் மஹாபாபங்களைப் பண்ணினவனாக விருந்தபோதிலும், ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிவிளக்கும் திருநீரைப் பரிமாறுவானாகில் அவன் தன் ஆத்மாவுக்குப் பாரிஶுத்யத்தைப் பண்ணினவனாகிறான்; (௰௬) "చక్రాఙ్కితాయ మహతే విష్ణుభక్తాయధీమతే। భిక్షామాత్ర ప్రదానేనవైష్ణవంగతిమాప్నుయాత్" என்று, சக்ராங்கிதனாகும் மஹாநுபாவனாய், விஷ்ணுபக்தனான ஜ்ஞாநாதிகன்பொருட்டு, அவன்விரக்தனாய்பிக்ஷாமாத்ரத்தாலே பரமாத்ம சமாராதநம் பண்ணுமிடத்தில் அந்த பிக்ஷாப்ரதாநம் யாவனொருவன் பண்ணுகின்றானோ அவன்விஷ்ணுலோகமடையக்கடவன் என்று மிவ்வாறெல்லாங் கூறியிருக்க, சகல புராண ஶ்ரேஷ்டமான ஸ்ரீமஹாபாரத ஶேஷமாகும் ஶேஷதர்மத்தை எல்லோரு மறிந்துய்ய அச்சிட்டிருந்தும், இந்த ஜங்மகுருடன் காணாதவனாய்ப் பிதற்றியது ஷை தர்மம் ௫௬ - வது அத்யாயத்தில் தானே • "సర్వభూతదయాయుక్తం వైష్ణవం ద్వేష్టియోనరః। సచణ్డాలో మహాదేవి రౌరవం నరకంవ్రజేత్" என்று, சர்வபூததயா யுக்தனான வைஷ்ணவோத்தமனை யாவனொருவன் த்வேஷிக்கின்றானோ ஹே! பார்வதி! அந்தஜங்ம சண்டாளன் ரௌரவமென்னும் பெயர்பெற்ற நரகத்தையடைவான்; " బ్రహ్మహత్యా సురాపానం స్తేయంగుర్వంగ

నాగమః । చక్రాఙ్కితస్యనిన్దాచ పఞ్చైతే త్వతిపాతకాః" என்று, ப்ர ஹ்மஹத்தியும், சுராபானமும், ஸ்வர்ணஸ்தேயமும், குருதாரகமனமும், சக்ராங்கித நிந்தைகளுமாகிற இவ்வைந்து பாதகங்களே அதிபாதக ங்களென்றும் ருத்ரனால் கூறப்பட்டிருப்பதால் இவ்வதி பாதகங்க ளின்பயனைப் பெற்றவர்கள் தாங்களே என்று எல்லோருமறியவே ண்டுமென்னும் ஹேதுவாலேயே யாம்.

அன்றியும், சாத்வித புராணத்திற் சிறந்த பாத்மோத்தர கண்டத் தில் "యేకణ్ఠలగ్నతులసీ నళినాక్షమాలాః యేబాహుమూల పరిచిహ్నిత శఙ్ఖ చక్రాః । యేవాలలాట ఫలకేలసదూర్ధ్వపుణ్డ్రాః తేవైష్ణవాః భువన మాశు పవిత్రయన్తి" என்கிற வசனத்தால் கழுத்தில் விளங்கும் துளசீ பத்மாக்ஷ மாலைகளையும், முகத்தில் ப்ரகாசியா நின்ற திவ்யோர்த்வ புண்ட்ரத்தையும், சிவாதி க்ஷுத்ரதேவதைகள் அணுகவுங்கூட கூச வேண்டும்படி தோளில் விளங்கும் ஶங்கசக்ர முத்திரைகளையுமுடைய மஹாபாகவ தோத்தமர்கள் உலகத்தி லுள்ளாருடைய சகலபாபங்க ளையும் தீயினிற் றூசாகப்பண்ணுகிறார்களென்று கூறப்பட்டிருக்க, இதுகளையெல்லா மறியாமல் பாகவத நிந்தைபண்ணின இக்காட்டா லூர் ஞானிவாயில் புழுப்புழுத்து வாரியெடுப்பா ரில்லாமல் மாண் டது, சின்னம்பீடகர மென்கிற க்ராமத்தி லிருக்கிற சகல ஜனங்களு மறிவார்கள்.

இன்னும், "అథాచారంశృణ్వతాగ్ని రిత్యాదినాభస్మంగృహీత్వావిమృ జ్యాఙ్గానిసంస్పృశేత్ । తత్రోపరిత్రిపుణ్డ్రంధారయేత్ బ్రాహ్మణానామయం ధర్మో వర్ణాన్తరాణామ్" என்கிற ஜாபாலஶ்ருதியில் "ப்ராஹ்மணாநாம யம் தர்மோவர்ணாந்தராணாம்" என்றிருப்பதனால், பூர்வம் ப்ராஹ்ம ணராயிருந்து, காசீநரான சிவத்விஜரோடுண்டான ஸஹவாச தோ ஷத்தாலே ப்ராஹ்மணத்வத்தை யொழித்து வர்ணாந்தரத்தை யுடை யவர்களானவருக்கே இச்சாம்பற் பூசுகையைத் தர்மமாக விதிக்கப் பட்டது என்றே பொருள் படும். ப்ராஹ்மணர்களுக்கு மற்ற வர்ண ஸ்தருக்கு மிதுவே தர்மமென்று பொருள்கொள்ளுகைக்கு "వర్ణా న్తరాణాఞ్చ" என்று ஒரு சகாரம் வேண்டியிருக்கும், இப்புலைய னெழுதிய வாக்யத்திலப்படிக்காணவில்லை. அன்றியும், "ஸர்வேஷாம் வர்ணாநாம்" என்று சொல்லலாயிருக்க "ப்ராஹ்மணா நாமயந்தர்மோ வர்ணாந்தராணாம்" என்று கூறியதற்கே ஒருபொருளு மில்லையாய் விடும்; ஆகையா லவ்வாறு பொருள் சொல்லக்கூடாது. ப்ராஹ்ம ணத்வங் கெட்டவனுக் காவதெப்படி தர்மமாகக் கூடுமென்னில், ஆட்டுவாணிகனுக்கு ஆடறுப்பதே தர்மமென்றா லெப்படிகூடுமோ

அப்படியே தூர்ப்ராஹ்மணனாய், வேறு வர்ணத்தில் புகுந்தவனுக்கிது தர்மமாகத் தட்டில்லை. இஸ்ருதியையு மிப்பேதை இன்ன உபநிஷத்தில், இன்னகண்டத்தி லுள்ளதென்று கூறவறியாமல்ஜாபாலஸ்ருதியென்றழுதத்து, வேதாக்ஷரத்தைக் கினவிலுங் கண்டறியாக் கர்மசண்டாளனென்பதை நன்றாகக் காட்டிக் கொடுக்கின்றது.

இம்மட்டோ, "అత్యాశ్రమస్థస్సర్వేషు త్రిపుండ్రం భస్మనాకరోతి యో విద్వాన్ । బ్రహ్మచారిగృహీవాన ప్రస్థోయతిర్వా స సమస్తపాతకేభ్య ఉపపాతకేభ్యః పూతోభవతి" என்னும் கைவல்யோபநிஷத் வாக்யத்தில் "அத்யாஸ்ரம:" என்கிறதும், "அவித்வான்" என்கிறதும், "ப்ரஹ்மசாரீ, க்ருஹீ, வாநப்ரஸ்த்த:, யதிர்வா" என்கிற நால்வர்க்கும் விஸேஷணமாகக்கடவது: அவித்வான்-மூடனை, அத்யாஸ்ரமஸ்த்த:-ஆஸ்ரமாதிக்ரமங்களான பாபங்களைப் பண்ணின ப்ரஹ்மசாரியும், அத்யாஸ்ரமஸ்த்தக்ருஹீ - ஆஸ்ரமாதிக்ரம பாபங்கள் பண்ணின க்ருஹஸ்த்தனும், அவ்வாறான வாநப்ரஸ்த்த ஸந்யாசிகளும், களவு முதலிய பாபங்கள் செய்தவர்களுக் கடையாளமாக விலங்கிடுமாப்போலே, இவர்களாஸ்ரமாதிக்ரமம் பண்ணினவர்களென்பதற் கடையாளமாக ஒருக்கால் த்ரிபுண்ட்ரத்தைத் தரித்தார்களாகில், இவர்கள் மஹாபாபிகளென்று எல்லாராலு மிகழப்பட்டவர்களாய்க்கொண்டு, சிலநாள் விலங்கு தரித்தவர்களுக்குக் களவுமுதலிய குற்றங்களெப்படி தீருமோ அப்படிபோலே, இத்ரிபுண்ட்ரத்தைத் தரிக்கவேண்டுங் குற்றமான ஆஸ்ரமாதிக்ரமத்தா லுண்டாகும் சகல பாபங்களும் அதையநுசரித்து வந்த உபபாதகங்களுந் தீருமென்றே பொருளாகும். வேறு விதமாகக் கொள்ளுவது வேதமர்யாதைக்குச்சேராது, அன்றியும் "அத்யாஸ்ரமஸ்த்த:" என்னும் பதமும் பயனற்றதாய் விடும். ஆகையா லிவ்வுபநிஷத் வாக்யமும் இம்மூடனது மண்டைக்கே கோடரியாய் விட்டது.

இனி, காஞ்சிபுரத்திலே அப்பயதீக்ஷிதன், தாதாசார்யருடன் வாதம் செய்தபோது, மத்யஸ்த்தர்களான விரண்டு மார்த்வர்களில் ஒருவ ரிலை மறைவு காய்மறைவாக ரல்யோ ரபேதமாகக்கொண்டு, "సంచారితే శివమతేప్యయదీక్షితే నవోర్మూలదాహకమతం సుతరాం నిరస్తమ్। శృంగీత్వమద్రిషు వృషేషుచతప్తముద్రాహరిద్రచూర్ణ మబలాకుచమణ్డలేషు" என்று, சிவமதத்தை ஸ்த்தாபிக்கக் கடவேனென்று மார்தட்டின அப்பய் தீக்ஷிதனோடேகூட சிவமதமானது தாதாசார்யராலே ஸஞ்சாலிதமா யலைக்கப்பட்ட வளவிலே, சூலத்தாலே சூடுண்டுதிரியும் சடையாண்டிகளுடைய மதமெல்லாம் நன்றாயடியற்றுப் போ

ய்விட்டது. திருமலை, அஸ்திகிரி முதலான திவ்யதேசங்க ளெல்லா வற்றிலும் பர்வத ஶிகராக்ரங்களிலே திருமண்காப்புடன் ஜயஸ்தம் பம்நாட்டப்பட்டபடியாலே ஸ்ரீஶைனசிவபெருமானதுகையடைப் பாகிய மலையெல்லாம் வைஷ்ணவமாய்விட்டது. வ்ருஷமென்கிற வைதிகதர்மங்களிலும், வ்ருஷபங்களிலு மெல்லாம் சக்ரமுத்ரை போ டும்படியாய் விட்டபடியாலே வ்ருஷத்வஜனை சிவபெருமானு டைய ஜயத்வஜத்தின் நுனியிலேயும் சக்கராங்கநம் நாட்டப்பட் டது. இப்படிப்பட்ட தாதாசார்ய விஜயத்தையும், அப்பயதீக்ஷித னுடைய தோல்வியையுங்கண்டு நாடடங்க வஸந்தோத்ஸவங் கொ ண்டாடுகையாலே முன்பென்னை விளையப்போகிறதோ வென்று, மஹாபாபியான அப்பய தீக்ஷிதனுடைய பயத்தாலே, மஞ்சள் பூசா திருந்த சுமங்கலிகளெல்லாரும் அப்பய தீக்ஷிதன் ஶவப்ராயனு னென்கிற சந்தோஷாதி ஶயத்தாலே தங்களுடைய திருமுலைத்த டங்களிலே மஞ்சள் சாந்து முதலான மங்கள த்ரவ்யங்க ளணிந்து கொள்ளும்படியாய் விட்டதென்று சொன்னதை, அரசன்கேட்டு மற்றொருமத்யஸ்த்தரை உம்முடைய வபிப்ராய மென்னென்று கே ட்டவளவிலே; அவரும், "సంచారితేహరమతే ప్పయదీక్షితే సదో ర్మూలశూలక్రమతంసుతరాన్నిరస్తమ్ । లిఙ్గిత్వమద్రిషు వృషేషుచశూలముద్రా శాఙ్క్రాఙ్క్యదూళిర బలాకుచ మణ్డలేషు" என்று, முன் ஶ்லோகத்திற் கே விவரும் வ்யாக்யாநம் பண்ணினர். இத்தாலே, ப்ரதம மத்யஸ்த ருடைய ஶ்லோகத்திலே "ஸஞ்சாரிதே" என்கிறபதத்தில் ரலயோர பேதமென்றும், "அப்பயதீக்ஷிதே" என்கிற த்ரிதீயை ஸாஹித்யார்த் தகமென்றும், "தோர் மூலதாஹகமதம்" என்றது சிவமதத்திலுள்ள ஶூலாங்கநமதமே யென்றும், "ஶ்ருங்கித்வம்" என்றது ஶிரோலிங்க தாரணத்தைச்சொன்னபடியென்றும், "வ்ருஷேஷு சதப்தமுத்ரா" என்றது காளைகளுக்குப்போடும் சூலச் சூட்டைச் சொன்னபடி யெ ன்றும் " ஹாரித்ரசூர்ணம் " என்றது ருத்ரபத்நியான ஶக்திக்கு ப்ரியமாகப்பண்ணு முத்தூளந விசேஷத்தைச் சொன்னபடி யென்றும், பூர்வஶ்லோகம் நன்றாக வ்யாக்யாநஞ் செய்யப்பட் டது. இதைக்கேட்ட வரசன், அப்போதே அப்பயதீக்ஷிதனை பஹிஷ்காரம் செய்யும்படி வாஜ்ஞாபித்த வளவிலே, அப்பயதீக்ஷி தன் நடுங்கி, அரசனை சரணாகதிபண்ணி, ஸ்ரீதாதாசார்ய ருங்களுக்கு குருவாகையாலே அவரிடத்திலிந்த மத்யஸ்த்தர்கள்பயப்பட்டு பக்ஷ பாதம் செய்துவிட்டார்கள்; ஆகையா லிப்போது நீங்களித்தை க்ஷ மித்து தாதாசார்யனை யொழிந்த வேறொரு வித்வான்களுட னென் னை வாதம் செய்யும்படி பண்ணி, அப்போதிந்த மத்தியஸ்த்தர்க

ளென்னைத் தோற்றதாகச் சொல்லுவார்களாகில் பின் பென்னை நீங்கள் தண்டிக்கும் தண்டனைக் குட்படுகிறேன், என்று வேண்டிக் கொண்டவளவிலே, ஸ்ரீ சோளங்கிபுரம், கோயில் கந்தாடை சண்ட மாருதம் தொட்டயாசார்யரை அரச னெழுந்தருளச் செய்து சபை சேர்த்து முன் மத்யஸ்த்தர்களையே மத்யஸ்த்தம் செய்யும்படிப் பண்ணி, அப்பய தீக்ஷிதனைச் சைவத்தை ஸ்த்தாபிக்கும்படி அரசனாஜ்ஞாபித்தவளவிலே அப்பயதீக்ஷிதன், ஸ்ரீ சண்டமாருதம் ஸ்வாமி திருமுன்பே கருடனைக்கண்ட பாம்புபோலேயடங்கி பசாபங்கமுண்டாய் கண்கலங்க, உடம்பெல்லாம் நீராயுருகி, வாயும் பல்லும் வரண்டு, நெஞ்சுலர்ந்து, மூச்சடங்கி, திண்டுமிண்டாடுகிற படியைக் கண்டு, சபையிலுள்ளவர்க ளெல்லாரும் விலவிறச்சிரிக்க; அரசனும் மந்தஹாசம்செய்து, மத்யஸ்த்தர்களை நோக்கி, நீங்கள் பயப்படாம லுங்களபிப்ராயத்தை வெளியிடுங்கோளென்று சொன்னவளவிலே இருவரு மெழுந்திருந்து சண்டமாருதம் ஸ்வாமி திருவடிகளிலே தலைதாக்கத்தண்டனிட்டு ஸாஞ்சலி பத்தர்களாய் "సంస్థాపితే హరిమతే ఘనదేశికేన రుద్రాక్షధారణ మహోఽకిత వాఙ్మీనమ్ । వేశ్యాభగేషు భసితఞ్చ జటావటేషు తర్కేషు లిఙ్గముదరే సరుజాఞ్చశూలమ్" என்று, ஸ்ரீ சண்டமாருதம் ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ தர்சநத்தை ஸ்த்தாபித்த வளவிலே, சைவாசாரங்கள் போனபடி யென் னென்னில்; ருத்ராக்ஷமெல்லாம் மூண்டைநோவு கொண்டாருடைய பீஜகோசங்களிலே யுண்டான ருத்ராக்ஷ வ்யாதியென்றும் பெயர்பெற்ற பல கண்களையுடைய கட்டிகளென்கிற வேஷத்தாலே ருத்ராக்ஷமெல்லாம் விடர்களுடையகோவணத்திற்குள்ளேபோய்மறைந்ததுகள்; பஸ்மோத்தூளநமும், தேவடியாளுடைய குஹ்ய ப்ரதேசங்களிலே, ரோமோல் லுஞ்சனார்த்தமாகச் செய்யப்பட்ட பஸ்மோத்தூளந வேஷத்தாலேயதிலே மறைந்துகொண்டது; சடைகளும்,ஜடைகளென்னும் பெயரையுடைய வாலம் விழுதென்கிற வேஷத்தாலே, காட்டிலே ஆலமரங்களிலே யொளித்துக்கொண்டதுகள்; லிங்கங்களும், லிங்கமென்றும் பெயரையுடைய ஹேதுவின் வேஷத்தாலே, தர்க்கங்களிலே யொளித்துக்கொண்டதுகள்;சூலங்களும்,சூலவ்யாதியென்னும் வேஷத்தாலே வ்யாதிக்ரஸ்தர்களுடைய வயிற்றிலே போயொளித்துக் கொண்டதுகளென்று நிர்ப்பயமாக சைவமதத்தை ஹேளநம் பண்ணி சப்யர்களெல்லாரும் வீழ்ந்து வீழ்ந்து சிரிக்கும்படி யாகவும்,அப்பயதீக்ஷிதன்நாணி,நடுங்கி, நான்றுகொண்டு சாகலாம்படியாகவும்,மத்யஸ்த்தர்கள் சொன்ன ச்லோகத்தை த்வஜபடத்திலே யெழுதி அக்கொடியை அப்பய தீக்ஷிதனைப் பிடிக்கச்செய்து, நாடு நகர

மும் நன்கறியும்படி ஜயபேரி கோஷங்களுடன் ஸ்ரீசண்டமாருதம் ஸ்வாமியையும், ஸ்ரீ தாதாசார்யரையும் ஆனையின்பேரி லெழுந்தரு ளப்பண்ணி, யூர்கோலஞ்செய்து, ஜகத்தெல்லாம் ப்ரசித்தமாம்படி இந்த ஶ்லோகங்களை யரசன் விளம்பரஞ்செய்த்தமை ஜகத் ப்ரசித்த மாயிருக்க இச்சைவக்கழுதை மேல் ஶ்லோகங்களெல்லா மொளித்து விட்டு முதல் ஶ்லோகமொன்றை மாத்ரம் அபார்த்தத்துடன் வெளியிட்டுப் புளுகின புளுகெல்லா மெட்டோரளுக்கு மேலே முட்டுப் பொறுக்கமாட்டா தல்லவா? பின்பு சிலகாலம் கழித்து, இன்னுஞ் சில ஶாஸ்த்ரங்களை அப்பயதீக்ஷிதன்படித்து, சைவாதி மதங்களில் கடுமுயற்சி செய்துகொண்டு, "సద్ధ్వ్యాఘ్రాస్త్రా. ఘుఃద్ధ్వంసనవి వసమణిః" என்றும், "దృష్యద్రామానుజో ద్యద్ధరణీ ధరమహాదంభ దంభోళికేళిః" என்னும் சிலவிருதுகளைக்கூறிக்கொண்டு வந்தபடியை யரசனுக்கறிவிக்க, அவனும் முன்போலே ஸ்ரீசண்டமாருதம் ஸ்வாமியை யெழுந்தருளப் பண்ணி, சபைசேர்த்து, அப்பயதீக்ஷிதனைச்சபைக்கு வரவழைத்து முன்பு சண்டமாருதம் ஸ்வாமியி னிடத்தில் தோற்று அவர்க்கு ஜயத்வஜம் பிடித்த நீரிப்போதென்ன விருது கூறிக்கொண்டுவந்தீரோ அத்தை யிந்த ஸ்வாமி திருமுன்பே சொல்லிக் காணீரென்று ஶாஸநமிட்டவளவிலே; அப்பயதீக்ஷிதனும் நடுங்கி "శాక్రద్ధ్వాన్తౌఘవిధ్వంసనవివసమణిశ్శైవరవాచారవన్యావనభిః । కాపాల కాళాముఖమణిపటలోద్దణ్డచండాణ్డజేమ్యః । దృష్యద్వామాంగమోద్యద్ధరణీ ధరమహాదంభ దంభోళికేళిశ్శైవాచారాబ్ధ్యగస్త్యోజయతి ఘనగురుస్తస్య దాసోఽప్యహం." என்று, நானிப்படியேவிருதாவளி கூறிக்கொண்டு வந்தே னென்றுசொல்லி, உயிருண்டாகில் உப்புமாறி யாகிலு முண்ணலாமென்று தப்பிப் பிழைத்துப் போனனல்லவா? இதை யெல்லா மொளித்து, மாறுபாடாக இந்த சிவத்விஜர் சித்தாந்தம் செய்வதிற்காட்டில், ஒருபிள்ளையார் கோவிலுக்கு முன்னே தவமிருந்து தன்வாயிலே லிங்கப்ரதிஷ்ட்டை செய்வாரைத் தேடிபிழைக்கலாமல்லவா? இதுநிற்க, இப்படி அப்பயதீக்ஷிதன்சைவமதத்திற்கு வகாலத்து வாங்கி சைவர்களை நட்டாற்றிலே விட்டபடியைச் சைவர்களெல்லாங் கண்டு கதறி, சைவமதமே தத்வமாயிருக்க, நீரிப்படி சபையிலே பலகாலும் வைஷ்ணவமதத்தையே ஶ்லாகித்து, அவர்களுக்கே நீர்விருதுபிடித்தால், நாமெல்லாம்போம் வழியென்னென்றுகேட்க, அப்பய தீக்ஷிதனும், கெடுவீர்காள்! சிவனே பரத்வமாய், சைவாகமம் ப்ரமாணமாய், சைவாசாரமே தர்மமுமாயிருக்கு மது மெய்யாயின், நம்மை யிப்படி வைஷ்ணவர்களுக்கே விருதுபி

டிக்கும்படி செய்த வரசனும், வைஷ்ணவர்களும், அப்போதே நசி த்துப் போகார்களோ? இப்படி நம்மைப் பங்கப் படுத்தினவர்க ளொரு குறையுமின்றிக்கே யிருக்கும்படி கொண்டே சைவமெல் லாம் பொய்யென் றுறுதியிட லாயிற்றல்லவோ? என்று, தம்முள் கருத்தை "సకలభువనకర్తా సాంబమూర్తిశ్శివశ్చే। త్సకల మపిపురాణం సాంగమశ్చేత్ప్రమాణమ్। యదిభవతి మహత్వం భూతిరుద్రాక్షభాజాం। కిమితినమృతి రస్మద్ద్రోహిణ స్స్యాదకాణ్డే।" என்னும் ஶ்லோகத்தாலே வெளியிட்டுப் பின்பு ஸ்ரீ ராமாநுஜவிஜயமான "யதிராஜஸப்ததிக்கு" வ்யாக்யாநம் செய்தும், "நகமயூகமாலிகை" யாலே விஶிஷ்டாத் வைத ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸ்த்தாபநம்செய்தும், அப்பயதீ க்ஷிதன் வைஷ்ணவ ஸித்தாந்தத்தையே நாட்டினனல்லவா? மேலு மிவ்வப்பய தீக்ஷிதன் முன்பு சைவ ஸ்த்தாபநம் செய்யவேணுமென் றிழிந்தகாலத்திலே வேதத்தில் ருத்ரரூபங்களை ஹரிகேஶங்க ளென் று, ஹநுமாருடைய மயிர்களாகச் சொல்லி யிருப்பதைக் கண்டித்த தை யெப்படியாவது பொருள் மாருட்டம் செய்யவேணுமென்று "హరిక" என்றும் "కేశ" என்றும் பதம் பிரித்துக் கொண்டிருக் கும்படியை யொரு கைம் பெண்ணாட்டி கண்டு சிரித்து, ஐயோ! தீக்ஷி தா! உன்னறிவு கேடிருந்தபடி யென்? சிறுபிள்ளைகளும் "హరి కేశ" ஶப்தத்துக்கு "ஹரி" என்றும் "கேஶ" என்றும் பதமோதும் படி பாராயென்றுகாட்ட, தீக்ஷிதனுமப்போதே தானெழுதினசுவடி யைக் கிழித்துப் புகட்டுள்ளே யோடிநாணி யொளித்துக்கொண்டா னென்ப துலக மெல்லாமறிந்திருக்க, இவனை மஹாவித்வானென்ப தெல்லாம் கள்ளியை மஹாவ்ருக்ஷமென்பது போலல்லவா? மே லும், இந்த தீக்ஷிதன் புராணங்களைப் படிக்குமளவிலே "యస్తునారాయణం ద్వేష్టి తం విద్యాదన్త్య రేతసమ్" என்றும், "తస్యోత్పత్తి స్సురూష్య తామ్" என்றும், விஷ்ணு த்வேஷிகள் சண்டாள பிந்துவுக்குப்பிறந்த வர்களேதான், இதில் சந்தேஹமுண்டாகில் பரிக்ஷை செய்துகொ ள்ளலாமென்று மஹர்ஷிகள் சொல்லியிருப்பதைக்கண்டு, இதை நாமே பரிக்ஷித்துப் பார்ப்போ மென்று தன்னுடைய தாயினிடத் திற்சென்று, விஷ்ணு த்வேஷமுடைய வென்னைச் சண்டாள பிந்து வுக்குப் பிறந்தவனென்று ஶாஸ்த்ரம் சொல்லுகிறது; ஆகையா லென்னுடைய வுத்பத்தி க்ரமத்தை நீ யுள்ளபடியே சொல்லவே ண்டுமென்று தாயைக்கேட்க, அவளும் சத்யவாதினி யாகையா லே, தான்ருதுஸ்நாதையான வுடனே யொரு நீசனைக்கண்டு அவனி டத்தில் மாநசரதியுண்டாய், அத்தாலே தீக்ஷிதன் பிறந்ததாக வுள்ளத்தைச் சொல்லக்கேட்டு ; ஸ்ரீவைஷ்ணவ தர்ஶநத்தினுடைய

மெய்ப்பாட்டையும், வீறுபாட்டையு மறிந்து விஸ்மித ஹ்ருதயனு யினிச் செய்வதென்னென்று பார்த்து நாராயண பதத்திற்கே சிவபரத்வம் ஸ்த்தாபநம்செய்து விட்டால், நமக்கு நாராயணத்வே ஷமில்லையாய் விடுமல்லவா ? என்று குயுக்தி பண்ணிக்கொண்டு ஶப்தஶாஸ்த்ரங்களை விசாரிக்குமிடத்து, நாராயண ஶப்தத்தில் "ணத்வம்" பாதிக்க, அத்தைவிட்டு, பின்பு வைஷ்ணவ ஸித்தாந் தமே சத்யமாய்விட்டது ; ஆனால் நமக்கு விஷ்ணு த்வேஷம்பிறந் துடமையாய் விட்டபடியாலேயே யிஜ்ஜந்மத்துக்கு வைஷ்ணவாந் வயம் கிடையாதென்றுதேறி, யதாஶக்தி விஷ்ணு த்வேஷத்தை நிவ்ருத்திசெய்து கொண்டிருந்து தேஹாவசாநகாலத்திலே சிவனோ விஷ்ணுவோ பரதத்வமென்று கேட்ட வந்தரங்கருக்கு, சிவனே பர தத்வமென்கைக்கு, நாராயண ஶப்தத்திலே ணத்வம் பாதியாநின் றது, ஆகையாலே நாராயணனே தான் பரதத்வமென்று சொல்லிப் போனனென்னுமிடம் சர்வலோக ப்ரசித்த மல்லவா ?

இனி, அப்பயதீக்ஷிதன் அபார்த்தம்செய்த வாக்யங்களைத் தப்பு விதமாய்ப்பிதற்றி அத்தால் சர்வகர்ம ஸமாராத்யத்வமும், நிர்மால்ய போக்யத்வமும் கற்பித்தார்; அவைகட் குசிதமானவற்றைச் சொல் லுகின்றோம். கணித சாஸ்த்ரங்களிலே ருத்ர சிவாதிஶப்த ப்ர யோக முண்டாகில், அவ்விடத்திலே பதினென்றையே யந்தஶப்த ங்காட்டுகையாலே, ருத்ராதி ஶப்தார்த்தம் அநேகமுமாய், ஸத்விதீய முமாயிருக்கு மென்னுமிடம் சர்வசம்மதமா யிருக்க, இவ்வசடர் "ఏకమేవాద్వితీయంబ్రహ్మ" என்கிறஶ்ருதிக்கு ருத்ரனேயர்த்தமென்று சொல்லுவ தெப்படிசேரும்? "ఏకోరుద్రోనద్వితీయాయతస్థే" என்று ஶ்ருதிசொல்லாநின்றதேயென்னில் ? இவ்வாக்யத்தில் ஏகாதசருத் ரர்களி லொருவனே ப்ரதாநனென்று சொல்லுகிற தித்தனையொழி ய, ருத்ரனுவானெருவனேயென்று சொல்லுகிறதல்ல. "ఏకోరుద్రః" பதினெருபேர்களில் ஶங்கரனென்று சொல்லப்பட்ட வொருருத்ர னே, "నద్వితీయాయతస్థే" ருத்ராந்தரத்திற்கு சேஷமன்றிக்கே சர்வரு த்ரப்ரதாநனாக விராநின்றனென்றல்லவோ,இவ்வாக்யத்திற்கு ஸ்வா ரசிகார்த்தம். "గాథపతిం మేధపతింరుద్రమ్" என்று "గాథం" என்கிற சட்டைமேட்டுக்கும், "పిత్రుమేధం" என்கிற பிணச்சடங்குக்கும் கடவ னாகச் சொல்லப்பட்ட ருத்ரனை, ஸர்வேஶ்வரனென்று பிதற்றுவ தென்னமடமை. இதுமட்டோ, "అహోరాజానమధ్వరస్యరుద్రమ్" என் கிற ஶ்ருதிக்கு, பூர்விக சாம்ப்ரதாய பாஷ்யார்த்தத்தைவிட்டு, ருத்ர னையே யிதிற் சொல்லுகிறதென்றழுதார். இப்படி தோன்றியபடியே அர்த்தம்கொள்ளில், இப்பஞ்சாதியடியிலே "త్వమగ్నేరుద్ర అసురోమ

[Telugu-script Sanskrit]" என்று ருத்ரனை யசுரனென்று கண்டோக்தியாகச் சொல்லியிருக்க, அவனுக்குதேவஸ்ரேஷ்டத்வம் சொல்லுவதெப்படிசேரும். மேலே "[Telugu-script Sanskrit]" என்று ருத்ரனனவன்சத்யமானபரப்ரஹ்மத்தைப்ஜிக்கக்கடவனு யிருப்பனென்றும், ஸர்வயாகங்களிலும் யஜமாநனுக்கிழிதொழில்செய்து தக்ஷிணைகொண்டு வயிறு வளர்க்கும் ஹோதாவாயிருப்பனென்றும், சொல்லப்பட்ட ருத்ரனை ஸர்வயஜ்ஞ ஸமாராத்யனென்று சொல்லும தெப்படிசேரும். மேலும் "[Telugu-script Sanskrit]" என்கிற ஶ்ருதியிலே இந்த சந்த்ரனனவன் வ்ருஷ்யாதிமுகத்தாலே யாகார்த்தமாக நெய்யும் மதுவும் தொடக்கமான யெல்லாவற்றையும் ப்ரவஹிப்பியாநின்றும் "[Telugu-script Sanskrit]" என்று ருத்ரஶேஷமாக வவன் க்ருதமதுக்களை பெருக்குவதில்லையென்று, சந்த்ரனு லுண்டாக்கப்பட்ட விந்தஜகத்திலுள்ள ஹவ்யகவ்யங்களில் ருத்ரஶேஷமா யிருப்பதே கிடையாதென்று சொல்லாநிற்க; இந்த ருத்ரனே ஸர்வகர்மஸமாராத்யனென்று சொல்லக்கூடுமோ? மேலும், "[Telugu-script Sanskrit]" என்கிற ஶ்ருதியில் பசுபதிஶப்தம் அக்நிஶப்தவிஶேஷணமாய்க்கொண்டுஅக்நிபரமாயிருக்க, அதைமாறுபாடாக்கிருத்ரபரமென்முர்; இப்படிச் சொன்னாலும், இந்தபசுபதித்வம் த்ரிபுரவதத்திற்குக் கூலியாக ருத்ரனுக்குத் தேவதைகளாலே கொடுக்கப்பட்டபடியைச் சுப்ரஸித்தஶ்ருதியாலே கீழேவிளக்கினேமாகையாலே, இங்குக் கசாப்புக்கடைக்காரனெடொக்கப் பசுவைக்கொல்லுகையிலுண்டான வதிகாரமே யிஶ்ருதியாலும் பெறப்படுகையாலே இதனல் ருத்ரனுக்குப் பரத்வம் சித்திக்கமாட்டாது. ருத்ரனனவன் கொலைகளுக்கெல்லாங் கடவன்தானென்பதை, யெல்லாரு மொப்புக்கொண்டிருக்க, யாகங்களில் கொல்லப்பட்ட பசுக்களுடைய கொலைக்கும் ருத்ரனேதான் கடவனென்பதை"இமம்பஶும்பஶுபதேதேபத்நாமி "என்கிறஶ்ருதிக்கு, அபார்த்தம்சொல்லி ஸ்த்தாபிக்கத்தேடுகிற தென்னமடமை. மேலும், "[Telugu-script Sanskrit]" என்று ப்ரஸித்தமானவக்நியை யுத்தேசித்து "[Telugu-script Sanskrit]" என்று அக்நிக்கே ருத்ரசப்தவாச்யத்வத்தை ஶ்ருதியிலே விதிக்கையாலே "[Telugu-script Sanskrit]" இத்யாதி வாக்யங்களிலே ருத்ரஶப்தமெல்லாம் அக்நியையே சொல்லுகிறதென்று நாட்டப்பட்டிருக்க; இதறியாதே இச்சர்வமூடர், ருத்ரஶப்தமாத்ரத்தைக்கொண்டு தலைகீழாகவர்த்தம் சொல்லுவதென்னமௌட்யம். "[Telugu-script Sanskrit]" என்றிருந்தாலல்லவோ இவ்வசடருடைய நினைவுக்கிடமுள்ளது. இதுமட்டோ "[Telugu-script Sanskrit]" என்னும் விஷ்ணுபர

மான வசநத்தைப் பாடபேதம்பண்ணி கூர்மபுராணத்தி னடுவிலே நுழைத்துச்சிவபரமாக்கி, இத்தாலே ருத்ரனுக்கு ஸர்வகர்மஸமாராத்யத்வம் ஸித்திக்குமென்றார். "మత్తస్సర్వమహంసర్వమయీసర్వంసనాతనే"என்றுசொன்னப்ரஹ்லாதனுக்கும்,"అహంమనురభవంసూర్యశ్చ" என்றுசொன்ன வாமதேவனுக்கும்,பரத்வம் ஸித்தித்தாலல்லவோ நானே ஸர்வகர்ம ஸமாராத்யனென்று சொல்லிக்கொண்ட ருத்ரனுக்கும், ஸர்வகர்மஸமாராத்யத்வம் ஸித்திக்கும். ஸர்வாந்தராத்மாவான ஸ்ரீமந்நாராயணனே யென்னுமிடம் "యేఽప్యన్యదేవతాభక్తా యజన్తేశ్రద్ధయాన్వితాః । తేఽపిమామేవకౌన్తేయ యజన్త్యవిధిపూర్వకమ్" என்றும் "సర్వభూతాన్తరాత్మానంవిష్ణుమేవయజన్తితే" என்றும் "సర్వదేవనమస్కారః కేశవంప్రతిగచ్ఛతి" என்றும் "వర్ణాశ్రమాచారవతా పురుషేణపరః పుమాన్ । విష్ణురారాధ్యతే పన్థానాన్యస్తత్తోషకారకః" என்றும் "స్వకర్మణాతమభ్యర్చ్య సిద్ధింవిన్దతిమానవః" என்றும் பஞ்சமவேதாதிகளில் முறையிடா நிற்க, அதுகளுக்கு விரோதமாகத் தாமஸாதி வசநங்களைச் சொன்னால் அம்பலத்துக்கேற்க மாட்டாதல்லவா? ஆகையாலே கூர்மபுராணத்திலே ருத்ரன் அஹமென்றது தனக்கந்தராத்மாவான ஸ்ரீமந்நாராயணனையே சொல்லுகிற தாகையாலே, அங்கும் ஸ்ரீமந்நாராயணனுக்கே ஸர்வகர்ம ஸமாராத்யத்வம் சொல்லுகிற தத்தனை. இப்படிக் கொள்ளாதபோது "బ్రహ్మదాశా బ్రహ్మదాసా బ్రహ్మేమే కితవాః" என்கிற ஶ்ருதிவாக்யத்தாலே யுலகத்திலுள்ள தூர்த்யாதிகளுக் கெல்லாம் பரத்வமும், அதடியாக ஸர்வகர்மஸமாராத்யத்வமும்,ஸகலபலப்ரதத்வமு மெல்லாங் கொள்ள ப்ரசங்கிக்குமென்று கீழே சொன்னோம். ருத்ரனனவன் ப்ரஹ்மஹத்யாதூஷிதனாய் நிஹீநதேவதையா யிருக்கையாலே ஸ்வதஃ அயாஜ்யனென்னுமிடமும்,ரௌத்ராஹூதியிலேஶாஸ்த்ரங்களில் ஜலஸ்பர்ஶம் விதிக்கப்பட்டதென்னுமிடமும் கீழே சொன்னோம்? ஜலஸ்பர்ஶம் ருத்ராந்தர்த் தாநத்திற்காகவல்லவோவென்னில்,யாகாதிகள்செய்யு மிடங்களிலேருத்ரன் ப்ரத்யக்ஷமாய்நிற்கிலல்லவோ? அவன் அந்தர்த்தாநமாகையின் பொருட்டொரு சடங்குசெய்ய வேண்டுவது. அவன் கண்ணுக்குந் தோற்றாமலிருக்க வவன் அந்தர்த்தாநத்துக்காக ஜலஸ்பர்ஶமென்றுரைப்ப தென்ன மடமை. ஆகையாலே, யாகத்திற் செய்கிற வைதிகஸடங்குக ளெல்லாம் நிஹீநஜாதியான ருத்ரன் கண்படாமைக்காக ஜலஸ்பர்ஶ விதாநமென்று சொல்லுமது இனிது விளங்கும். ஆதலால் "ఊర్ధ్వః పరిషిఞ్చతి రుద్రస్యాన్తర్హిత్యై" என்றிவர் காட்

டின வாக்யத்திற்கிதுவே பொருளாகு மல்லவா? இப்படிமஹாதேவ னுன ருத்ரனை ஹீநதேவனென்று சொல்லலாமோவென்னில், ருத் ரன்ஹீநதேவதை யென்று வொருதடவை சொன்னால்போதுமோ? ஆயிரந்தர மப்படியே சொல்ல வேண்டாவோ ? ருத்ரன் ஹீநதேவ தையென் றுயிரந்தரம் சொல்லாதவன் பறையனென் றல்லவோ ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. "యో మహాదేవమన్యేన హీన దేవేన దుర్మతిమ్। సకృత్సాధారణం బ్రూతే సోన్త్యజో నాన్త్యజో న్త్యజః" என்று ருத்ரன் ஹீந தேவதை யென்றொருக்கால் சொல்லி மீண்டவனே தான் பறைய னுவது, ஜாதிசண்டாளன்பறையனல்லவென்று சொல்லிற்றல்லவா?

இதுநிற்க, மேலே "சிவநிர்மால்யம் அபோஜ்யம்" என்னுமிடம் ஏகாம்பரேஶ்வரா ! ஏகாம்பரேஶ்வரா !! என்கிற கதையாலே உல கமெல்லா மறிந்திருக்க, இப்பேயர் சிவநிர்மால்யத்தைப் பக்ஷிக்கவே ண்டு மென்று ஸ்த்தாபிக்கத்தொடங்கி "రుద్రభుక్తం భుంజీత" என்று தொடங்கி "తస్మాత్ బ్రాహ్మణాః ప్రశాన్తమనసో నిర్మాల్యమేవభక్షయన్తి" என்னும் வாக்யங்களைக்கற்பித்து ஶ்ருதியென்று ப்ரமைகாட்டத்து ணிந்தார் ? "వహ్నినా సించేత్" என்றொருஶ்ருதியைக்கற்பித்து வேதம் நெருப்பாலே நனைக்கச்சொல்லி விதிக்கிறதென்று விதைச்செய்ய வல்லாரார் ? "రుద్రభుక్తం భుంజీత" என்றும் "రుద్రపీతం పిబేత్" என் றும் ருத்ரனுலே புஜிக்கப்பட்டதையே சைவர்கள் புஜிக்கக்கடவர்க ளென்றும்,ருத்ரனுலே பாநம் பண்ணப்பட்டதையே சைவர்கள் பா நம்பண்ணக்கடவர்களென்றும்விதிக்கப்பட்டதென்றல்,ருத்ரனுலே புஜிக்கப்பட்டதையேருத்ரன் வயற்றைக்கீறியெடுத்தல்லவோ புஜிக்க வேண்டும்? "ఛత్రిణో గచ్ఛన్తి" என்கிற விடத்தில்போலே யிங்கும் லக்ஷணைகொண்டாலும், மேலே "ప్రశాన్తమనసో నిర్మాల్యమేవభ క్షయన్తి" என்று ப்ராஹ்மணர்க ளெல்லாரும் ஶாந்தனுன மஹாபாக வதனுடையதளிகைப்ரசாதத்தையேஸ்வீகரிக்கின்றர்களென்று சொ ல்லுகையாலே,ருத்ரன்புஜிப்பது மஹாபாகவதப்ரசாதமேயென்றல்ல வோ இவ்வாக்யத்தால் பெறப்படு கின்றது. ப்ராஹ்மணர்கள், ருத் ரன் புஜிப்பதையே புஜிக்கக்கடவர்க ளாகையாலே ஶாந்த சித்தனு டைய தளிகை ப்ரசாதத்தையே ஸ்வீகரியா நின்றர்க ளென்றல்? ருத்ரன் பாகவத ப்ரசாதத்தையே ஸ்வீகரிக்கையாலே ப்ராஹ்மணர் களு மப்படியே செய்யா நின்றர்களென்று சொல்லப்பட்டதா மல் லவா ? நிர்மால்ய ஶப்தார்த்தம் ஸஸம்பந்திக மாகையாலே அத்தோ டே ஸமபிவ்யாஹ்ருதமான "ப்ரசாந்தமநஸ:" என்கிற ஶப்தம் ஷஷ் ட்யந்த மாகாவிடில், அத்யாஹாரதோஷமும், ப்ராப்தபாதமும் ப்ரச

ங்கிக்குமல்லவா? ஆகையால், இவ்வேழை கற்பித்தவாக்யம் பாகவத ப்ரசாதத்திற்கே ப்ரமாணமாய் விட்டது.

மேலும் லிங்கபுராணத்திலே "పుష్పంఫలం సుగంధఞ్చ వస్త్రాణ్యా భరణానిచ। శివాపీఠాని స్వీకుర్యా దన్యథా కిల్బిషీ భవేత్" என்று சிவநிர்மால்யங்களிலே பில்வபத்ராதிகள் வஸ்த்ராபரணங்களை யொழிந்த வன்னாதிகளைக் கொள்ளுமவன் மஹாபாபியாவா னென்று சொல்லிற்று. இவ்வசநத்தில் அந்யதா யென்றது புஷ்ப பல, கந்த, வஸ்த்ராபரணங்களை யொழிந்த சிவநிர்மால்யங்களான அன்னபானீயாதிகளைக் கைக் கொள்வர்களாகி லென்றபடி யல்லவா? மேலும் ப்ரஹ்மாண்டபுராணத்தில் "అతీతానాగతంజ్ఞానం భూపాలత్వఞ్చ శాశ్వతమ్। జాతిస్మరత్వంప్రాప్నోత్యమామ నైవేద్య భక్షణాత్" என்று ஸர்வகாலஜ்ஞாநமும், ஸகலலோக சாம்ப்ராஜ்யமும், பூர்வஜந்மஜ்ஞாநமும், மந்மதனேடொத்த வடிகழகுமெல்லா முடையனானவனும், என்னுடைய நைவேத்யத்தை யுண்டானாகி லுடனே யவையெல்லாம் பாழாய்விடுமென்று சிவன்தானே சொன்னா னல்லவா? இப்பாடத்தை மாறுபாடாக்கி இச்சூரர் படித்தார்! "మ నైవేద్యస్య భక్షణాత్" என்கிற பாடத்தில் "ఉత్పద్యతే" என்றொரு பதம் கூட்டவரும். நாம் சொன்ன பாடத்திலே "నీలోగటః" என்பது போலே யுள்ள பதங்களைக்கொண்டே வாக்யம் முடியும். ஆஸ்திபவதிகள் ஸார்வத்ரிக மல்லவா? இக்குமதி சொன்னபடியே பாடமாலும், சைவரிட்ட நைவேத்யத்தைச் சிவன்புஜிக்கையாலே சைவர்களுக்கைஶ்வர்யாதிகளுண்டாகின்ற தென்னும் பொருளை விளக்குமே யல்லாமல், சிவ நிர்மால்யத்தைச் சைவர்கள் பக்ஷிக்கவேண்டு மென்னும் அர்த்தமிதி லொரு போதும் விளங்கமாட்டாது? இப்படியே "మహ్యమన్నం ప్రయత్నేన నివేద్య స్నాతియస్సదా। సభూపాలస్సర్వవేత్తా భవత్యేవహి సర్వదా" என்கிற வசநத்திலும் எல்லாந் தெரிந்தவனாய், தர்மவிசாரணைகள் செய்யக்கடவனான வரசன் சிவன் கோவிலுக்கு நிவேத நாந்தமான பூஜைசெய்யும்படிச்செய்து, பின் தான்போஜநம் செய்வா னென்னும்பொருளை விளக்குமே யன்றி, சிவ நிர்மால்யத்தைச்சாப்பிடவேண்டு மென்னும்பொருளை யோர்காலும் விளக்கமாட்டாது. "శివమారాధ్య భుంజీత" என்கிற வாக்யத்தில் பூஜைசெய்து, சிவனைப்புஜிப்பானென்னும் பொருள் விளங்கினல்லவோ இவ்வசநத்திலும் நிர்மால்யபோஜநம் விளங்குவது? சிவனுக்குப் போஜ்யத்வம் பாதித மானாற் போல நிர்மால்யத்துக்கும் போஜ்யத்வம் பாதித மென்னுமிடம் ஸர்வஸம்ப்ரதிபந்ந மல்லவா!

மேலும், வேதங்களைக் காட்டிலும் சிறந்ததாக விச்சிவத்விஜரா லொப்புக்கொள்ளப்பட்ட காமிகாகமத்திலும் "అశుద్ధాత్మసుచిలో భోక్తుం మేధ్యాక్తం పావనం పరమ్।భక్షయన్నాశమాప్నోతి శూద్రో హ్యధ్యయనాదివ" என்று அசுத்தனுகிலுமாம், சுத்தனுகிலுமாம் மிகுந்தபணச்சில வுகளையுடையநிர்மால்யங்களையெப்படிவீணுகக்கொட்டிவிடுகிறதென் னும் லௌப்யத்தாலே சிவநிர்மால்யமாகிலென், இதுவும்பரமபாவ நந்தானென்று புசிப்பானுகில் அவன்நாஶமாய்ப்போவானென்றும், அதெப்படியென்னில், ஶூத்ரனுனவன் ஆகமங்களை யத்யயநம்செ ய்தா லெப்படிநஶிப்பானே அப்படியென்று சொல்லுகையாலே, சிவநிர்மால்ய மொருக்காலும் போஜ்யமாக மாட்டாதென்று நாட் டப்பட்டதல்லவா? இவ்வசநத்திலேட்டுச்சுரக்காய் வீட்டுச்சுரக்கா யென்று ஶித்தாந்தம் செய்யப்பார்க்கில்,அதுஶப்தஸ்வாரஸ்யத்துக் குச் சேரமாட்டாமையாலே,அப்படிஶித்தாந்தம் செய்வதற்கு ஜிஹ்வ வாசாபல்யமும், லௌப்யமுமே காரணமென்பதை நன்ருகவிளங் கச்செய்யும். ஶூத்ரர்க ளுபநயநம் செய்வித்துக்கொண்டு வேதாத் யயநம் செய்யலாமென்பது ஸித்தாந்தமானுலல்லவோ? நிர்மால்யத் தை வீட்டுச்சுரக்காயாக்கி, இவர்கள் தின்னத்தேடலாம்! "అశుద్ధాత్మకః" என்று அஶுத்தனேடு ஶுத்தனையுமெடுத்து, இவ்விருவரும் சிவநிர்மால்யத்தைப் பக்ஷித்தால் நாஶமடைவர்களென்றிவ்வசநத் திற் சொல்லாகிற்க,அதைக் கவனியாமல் சிவநிர்மால்யத்தைப் பக்ஷி க்கலாமென்பதென்னபேதமை. மேலும் சைவபுராணத்தில் "నిర్మాల్యం నిర్మలం శుద్ధం నిర్మలత్వాదనిన్దితమ్ । తస్మాదభోజ్యం నిర్మాల్యం ప్రాకృతైరశివాద్యైః" என்று சிவநிர்மால்யமானது புஜிக்கத்தக்கதல்லா மையாலே யாதொருவர்வயிற்றிலே சென்று மலரூபமாகாமைப்பற் றியேநிர்மலமென்று சொல்லப்படாநிற்கையாலே சிவனையொழிந்த அர்ச்சகன் முதலான ப்ராக்ருதஜநங்கள்நிர்மால்யத்தையுண்பராகில், அதவர்கள் வயிற்றிலேசென்று மலமாய்விடுமாகையாலே, அது நிர் மால்யத்திற்கு நிந்தையாகுமாதலால் சிவனையொழிந்த ப்ராக்ருதஶரீ ரமுடையாரொருவரும் நிர்மால்ய முண்ணலாகாதென்று சொல்லப் பட்டது. மேலும் சைவபுராணத்திலே "లోభాన్న ధారయేన్మూఢో భోక్తుం నిర్మాల్యం న చ భక్షయేత్ । జిహ్వాచాపల్యసంయుక్తః శ్రీపసంస్కారవర్జితః। శివనిర్మాల్యభోజీ చేత్ రౌరవం నరకం వ్రజేత్" என்று வெளியிலே வாரிக் கொட்டிவிடவேண்டிய சிவ நிர்மால்யங்களிலே ஜிஹ்வாசாபல்யந் தொடக்கமான லோபத்தாலேசிலவற்றையேனுமெடுத்துக்கொள்ள லாகாதென்றும், அப்படி யெடுத்துக்கொண்டதைப்பின்பு புஜிக்கவு

மாகாதென்றும், இங்ஙனன்றிக்கே, ஜிஹ்வாசாபல்யாதிலோபம் செய்வானாகி லப்போதே யவனுடைய சிவதீக்ஷையெல்லாம் நசித்து விடுமென்றும், அதற்குமேலே நிர்மால்யத்தை யெடுத்தது மன்றி புஜிப்பதும் செய்வனாகி லப்படிச்செய்தவன் ரௌரவாதி நரகங்களையே யடைவானென்றும் சொல்லியிருக்க; அப்பாழ் வாசகத்திலிவ்வுண்மைகளை யெல்லாமொளித்து, சிவநிர்மால்யம் போஜ்யமென்று. நாட்டிய தென்னவஞ்சனை? மேலும், ப்ரஹ்மாண்டபுராணத்திலே "శివానుభూతమఖిలం నిర్మాల్యం పరిభాష్యతే" என்று சிவனாலே யநுபவிக்கப்பட்டவற்றிற்கே நிர்மால்ய மென்னும் பெயர் ரூடியாகமுக்யமாய் விளங்கு மென்று சொல்லா நிற்கையால் "எவ்வமில் சிவன் கோவி னின்மாலியங் கிரணமிலகு சுடரில்லாத வூணிவையெலாஞ் சிலமுடையோர்க் காகா" என, பழையநூன் மொழியிலுங்கீழ்ச்சொன்ன ப்ரஹ்மாண்ட புராண வசநத்தின்படியே சிவாநுபூதத்தையே நிர்மால்ய சப்தத்தாலே சொல்லி நிஷேதிக்கின்ற தென்றே முக்யார்த்தம் கொள்ளவேண்டுகையாலே அதற்கு விரோதமாகச் சிவாநுபூதத்தைப் போஜ்ய மென்பது எப்படி சரியாகும். மேலும் "యత్సాకల్ప్యచ దేవాయ పత్రంపుష్పం ఫలంజలమ్। అన్నపానాదికత్సర్వా నైవేద్య మితికీర్తితమ్ । ఏతత్రివిధనిర్మాల్య మనర్హ మితికథ్యతే । ప్రమాదాద్భోజనం కుర్వన్ భూమావసన్యాదమంగళః" என்று சிவ நைவேத்யத்தைப்புஜிக்கு மவன் பூமிக்கெல்லாம் மூதேவியாவா னென்று சொல்லியிருக்க, சிவநிர்மால்யத்தைப் புஜிக்கலா மென்பதென்ன மடமை. சைவர்களால் புஜிக்கப்படுமது சிவ நைவேத்ய மல்ல வென்னில்? அப்போதிந்த சிவாதிக்ய ரத்நாவளியில் சுரு-ம் பக்கத்தில் ௰அ-ம் வரியில் "జాతిస్మరత్వంసౌన్దర్య మన్నైవేద్యస్య భక్షణాత్" என்று சிவ நைவேத் யத்தையே புஜிக்கலா மென்று சொன்ன தென்னபேய்த்தனம். இப்படி முன்பின்தெரியாத விவ்வரிவிலியை ஸித்தாந்தம் செய்யச் சொல்லி யாரடித்தார். மேலும், "శివాపభుక్తస్రగ్గంధ మన్నపానాదికంతథా । నివేదిత మితిప్రోక్తం సర్వపాప హరంపరమ్" என்று சைவர்களால் சிவனுக்குப் படைக்கப்பட்ட அன்னபாநாதிகளி லெவ்வளவு சூக்ஷ்மமாம்சம் சிவனால்புசிக்கப்பட்டு சிவன்வயிற்றில்சென்று விட்டதோ, அந்த அவ்வளவு சூட்சுமமாம்சமே நிவேதிதமென்னும் பெயராலே சொல்லப்படுமென்றும், அப்படி சிவன்வயற்றிற் சென்ற வந்த நிவேதிதபாகமே சிவன்வயற்றி லிருந்துகொண்டே யதிட்டவர்களுடைய பாபத்தைப் போக்கு மென்றும் சொல்லி "స్థాపితం దధివల్లీనాం సర్వదేవాసు రైన్నరైః । ఏతత్రివిధనిర్మాల్యం

ஷ்ரம்கீசாதி க்ருதம்பவேத்" என்று தேவதைகளாலே யாதல், அசுரர்க ளாலேயாதல், மனுஷ்யர்களாலே யாதல் ஸ்த்தாபநம் செய்யப்ப ட்ட தெய்வாசுர் மாநுஷ மென்று மூன்று வகையான லிங்கங்களு டைய புக்த சேஷ நிர்மால்யங்களெல்லாம் சண்டேஶ னொருவ னுக்கே யுரியதாகையாலே யாரொருவரு மதனைக் கொள்ளலா காதென்று காட்டி "బహూః కుప్త మాపాహతం స్యాదన్య ద్రవ్యత్వకార ణాత్। పిశాచానాఞ్చ సర్వేషా మధికారో త్రసర్వదా" என்று கீழ்ச் சொன்ன மூன்று வகைப்பட்ட லிங்கங்களைக் காட்டிலு மந்யமா னஸ்வயம் வ்யக்தலிங்கம், ஸைத்தலிங்கம், சரலிங்கமுதலான லிங்க ங்களுடைய புக்தசேஷமான நிர் மால்யங்களிலே அந்யத்ரவ்யத்வ மென்கிற காரணத்தினாலே சண்டேஶனுக் கதிகார மில்லாமையா லே யவற்றைச் சிவன் கோயிலுக்கு வெளியிலே கொண்டுபோய்ப் போடவேண்டு மென்றும், அப்படிப்போடப்பட்டவை யெல்லாம் பஹிக்ஷிப்த மென்று பெயர் பெற்று ப்ரமதகணங்களிலுள்ள பிஶாச ங்களாலே புசிக்கப்பட்டு, அவற்றிற் குறியன வாகு மென்றும், "నిర్మాల్యం షడ్విధం నిత్యమేవ నివేదితమ్" என்று ஆறு வகைப் பட்ட சிவ நிர்மால்யங்களிலே சிவனால் புசிக்கப்பட்டு, சிவன் வயற்றிற் சென்ற நிவேதித மொன்றுமே சிவனுடைய வுட்டுள்ள ளவும் நித்யமாய் மலஜலாதி பரிணமத்தை யடையாம லிருக்கு மென்றும் சொல்லி யிருக்க, சிவன் வயற்றிற் சென்றிருக்கின்ற நிவேதிதத்தை யிப்பாவி புசித்து மலமாக்கி யழித்துவிடத்தேடுகின்ற தென்ன மடத்தநம். இவர் நிவேதிதத்தைப் புசிக்கைக்கது இச்சண் டாளர் கையி லெவ்வாறகப்படும்? "சிவோப புக்தம்" என்று தொ டங்கி "நிவேதிதமிதம் ப்ரோக்தம்" என்று சிவனாலேபுசிக்கப்பட்ட தல்லவோ நிவேதிதமென்று ப்ரமாணங்களிற் சொல்லி யிருக்கின் றது; சிவன் புஜித்து மிகுந்த சேஷத்தை நிவேதித மென்று சொல்ல வில்லையே? அப்படியு மொருவசநம் கற்பித்தாலும், நிவேதித சேஷ மென்றொரு நிர்மால்ய முண்டாகையாலே, நிர்மால்ய மேழுவகை யாக வேண்டுகையாலே, நிர்மால்யமாவ தாறுவகை தானென்று கீழ்ச்சொன்ன வசநங்க ளெல்லாம் பாழாகு மல்லவா? இது நிற்க இச்சிவாதிக்யரத்நாவளி ௬௭-ம் பக்கத்தில் - ௰௭ - ௰அ - வரிகளிலே சிவனுக்கு நிவேதநம் செய்ய வேண்டு மென் றுத்தேஶித்து வகுத்து வைக்கப்பட்ட அன்ன பாநாதிகளுக்கே நைவேத்யமென்று பேரெ ன்றும், அதை யாராகிலும் புசிக்கலாகா தென்றும் ஸித்தாந்தம் செ ய்த விப்பாவிதானே ௯ சுவடி ௭௰ - ம் பக்கத்தில் ௬ - ம் வரி தொடங்கி சிவனுக்கிட வேண்டுமென்று வகுத்துவைத்த நைவேத்ய த்தைச் சிவனுக்கிடுவதற்கு முன்னமே யதைச் சிவபக்தர்கள் புசித்து

விடலா மென்று ஸித்தாந்தஞ்செய்து, சிவலிங்கத்தின் வாயிலே யீர மண்ணைத் துற்றுவிட்டார். ஐயோ! இந்தச் சிவலிங்கம் இத்தூர்த்தர்க் கழுத்திலே யல்லாட வேணுமா! கொஞ்சமாகிலு மீவிர்க்கமில்லா மல், சிவனுக்கென்று வகுத்து வைத்ததை யப்போதே தின்னத்தே டுகிற இந்த சோற்றுண்டி யெப்பாடுபடுவரோ தெரியாது. மேலும், "నిర్మాల్య సలిలంపీత్వా దేవదేవస్య శూలినః । కుష్ఠాపస్మారకుష్ఠాద్యై స్సద్యో ముచ్యేతబంధనాత్" என்று ப்ரஹ்மாண்டபுராணத்திலே யாவ னொருவன் சிவ நிர்மால்யஜலத்தைப் பாநம்பண்ணுகிறானோ அவனப் போதே பெரிய வ்யாதியாலும், பேரிரும்பலாலும், காக்கை வலிப் பாலும், வெள்ளை குஷ்டமுதலான குஷ்டரோகங்களாலும் பந்த நஞ்செய்யப்பட்டு சிவனாலே கைவிடப்படுவா னென்று சொல்லப் பட்டிருக்க,விம்மடையர் இதறியாதே சிவ நைவேத்யத்தைப் புசிக்க லாமென்ப தென்ன வாகாத்யம். மேலும், "నిర్మాల్యంపరమం పుణ్యం నైవేద్యం పాపనాశనమ్ । బ్రహ్మచారిగృహస్థానాం యతీనాంచవిముక్తిదమ్। నిర్మలత్వాచ్చ నిర్మాల్యం నృణాంనైర్మల్యకారణమ్" என்கிற ப்ரஹ்மாண்ட வசநத்தாலே நைவேத்ய மென்கிற நிர்மால்ய மொன்றுமே சர் வோத்தமமுமாய்,பாபநாஶகரமுமாய்,ஸர்வர்க்கும் கர்த்தவ்யமுமாய், மலயோக்யமாகாம லிருக்கையாலே ஸர்வர்க்கு மழுக்கை யறுக்கக் கடவதாயிருக்குமென்று சொல்லாநிற்க; இப்பாவி அந்நைவேத்யத் தைப் புசிக்கலாமென்று நாட்டி மலபோக்யமாக்கி, அதற்கு நிர்மால் யமென்னும் பெயருள்ளதனையுங் கெடுத்துவிடத் தேடுவதைத் தெ ய்வம் ஸஹிக்குமா? இவ்வசநங்களில் சர்வேஶ்வரனுக்கே யென்று நைவேத்யத்தை வகுத்துவைக்குமது பரமபாவந மென்று சொல்லு கிறதத்தனையொழிய, சிவநைவேத்யத்தை யெல்லாரும் பக்ஷித்தால் பாவநமாகுமென்று சொல்லப்பட் டிருக்கவில்லையே. அப்படி இவ ரிதற்கர்த்தம் சொன்னாலும், இப்பேதை கீழே நைவேத்யமென் னும் சிவநிர்மால்யத்தை யொருவரும் புஜிக்கலாகாதென்று நாட்டி னதோடு விரோதித்திரண்டும் பொய்யென்று விளங்குமல்லவா? மேலும் "ఉపవాససహస్రాణి ప్రాజాపత్యాయుతానిచ।శివప్రసాద సిద్ధస్య కోట్యంశేనాపినోసమః" என்றொரு வசநத்தை யெழுதினார். இவ்வச நத்திலே ப்ரசாதஶப்தம் அநுக்ரஹத்தைச் சொல்லுமே யல்லது சோற்றைச் சொல்லமாட்டாது; அப்படிச்சொல்லுமாகிலும், சிவ ப்ரசாதத்திலே ஸித்தியாவது த்ரிகரணசுத்தியாக ஜிஹ்வாசாபல் யாதிகளற்று ஒருநாளு மதைப்புசியா திருக்கையே யாகக்கடவது. மேலே "పత్రంపుష్పం ఫలంతోయమన్న పానాదికౌషధమ్ । శివార్పణం

వినాథుజ్ఞ్య సద్యోభవతిత్బిషీ" என்கிற வசநத்திலும் பத்ரபுஷ்பம் முதலிாகக் கையிலுண்டான த்ரவ்யங்களில் சிலவற்றைப் பிச்சைமுஷ்டியிடுமாபோலே நடுவிலே சிவனுக்குந் துளியிட்டுப் புசியாமல் கையிலகப்பட்டதெவ்வளவோ அவ்வளவுந்தானே புசிப்பனுகில்அவனுக்குப் பாபமுண்டென்கிறதேயல்லது சிவநிர்மால்யத்தைப் புசிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. இப்படியே "శివాగ్రేశివనిర్మాల్య మగృహీత్వా శివద్విజాత్। స్వయమేవాదదానశ్చేత్ నరకం ప్రతిపద్యతే" என்கிற லிங்க புராணவாக்யத்திலும் சிவநிர்மால்யங்களை வாரிக்கொட்டுகின்ற வேலைக்காரர்கள் சிவலிங்கத்தின் நுனியிலே வைக்கப்பட்ட பத்ரபுஷ்பாதி நிர்மால்யங்களைச் சிவத்விஜன் கையாலே யெடுப்பித்து வாங்கிக் கொண்டுபோய் கொட்ட வேண்டுமே யல்லாமல் நேரேசிவலிங்கத்தினின்றும் அவ்வேலைக்காரர்களே யெடுப்பார்களாகிலவர்கள் நரகத்தையடைவார்களென்று சொல்லுகிறதே யல்லாமல்,சிவநிர்மால்யத்தைப்புசிக்கவேண்டு மென்னு மர்த்தம் சொல்லவில்லை. இப்படியிருக்க, இவற்றை யெல்லாம் சிவநிர்மால்ய போஜநத்தை விளக்குவதாகக்கூறுவதெல்லாம் நூல்புரட்டேயாகு மென்க. மேலும், இவ்வழுகுராலானுலையிட்ட கர்த்தபம் சிவநிர்மால்யம் போஜ்யமென்பதை மயக்கமற விளக்கும்படியான தொருஶ்ருதி வாக்யமாதல், ஸ்ம்ருதிவாக்யமாதல், ஆகமவாக்யமாதல், அல்லது நீதிகட்டுவாக்யமாத வுதஹரிக்க மாட்டாமல் போனதுமன்றி ஸர்வஶிஷ்ட சம்மதமான விஷ்ணுபுக்த ஶேஷபோஜனுதிகளை விலக்கத்தொடங்கிற்று. "విష్ణుప్రసాదం భుఞ్జీయః" என்றும் "తదస్య ప్రియమపిపాథో అశ్యాంనరోయత్ర దేవ యవోమదన్తి । ఉరుక్రమస్య సహిబన్ధు రిత్థా విష్ణోః పదేపరమే మధ్వ ఉత్సః" என்கிற சுப்ரஸித்த ஶ்ருதிகளாலே விதிக்கப்பட்ட விஷ்ணுபுக்தஶேஷ நிஷேவணமானது, வேதத்தைக் காதால் கேட்கப்பெருத விக்கர்ம சண்டாளன் அறியாத மாத்ரத்தாலே தர்ம மாகாமல் போகமாட்டா தென்க.

*சிவாதிக்ய ரத்நாவளி என்னும் அபத்தக்கந்தலில் பிதற்றப்பட்டிருக்கும் சிவாதிக்யங்களை நாசமாக்கற் கிம்மட்டிலே போதுமானதாயிருப்பினும், மற்று மதில் குழறியிருப்பனவற்றிற் குசிதநிரஸநங்களையும் இரண்டாவது பாகத்திற் கண்டுதேறலாம்.

சுபம். சுபம். சுபம்.

சைவகண்டசபேடிகையின் முதற்பிரிவாகிய சிவாதிக்யரத்நாவளி நிரஸனமென்னும் பாஷண்டமதசபேடிகை க - ம் பாகம்.

ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

ஸ்ரீமந்நாராயணபரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமத்சங்கராசார்யர்

அருளிச்செய்த

# லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம்.

శ్రీమత్పయోనిధినికేతనచక్రపాణే భోగీన్ద్రభోగమణిరఞ్జితపుణ్యమూర్తే ।
గీవస్యశాశ్వతశరణ్యభవాబ్ధిపోత లక్ష్మీనృసింహ మమ దేహి కరావలమ్బమ్॥ (౧)

బ్రహ్మేన్ద్రరుద్రమరుదర్కకిరీటకోటిసంఘట్టితాఙ్ఘ్రికమలామలకాన్తికాన్త।
లక్ష్మీలసత్కుచ సరోరుహరాజహంస లక్ష్మీ॥ (౨)

సంసారఘోరగహనేచరతో మురారే మారోగ్రభీకరమృగప్రవరార్దితస్య ।
ఆర్తస్యమత్సరనిదా ఘనిపీడితస్య లక్ష్మీ॥ (౩)

సంసారకూపమతిఘోరనిదాఘమూలంసంప్రాప్యదుఃఖశతసర్పసమాకు
లస్య । దీనస్యదేవ కృపణాపదమాగ తస్య లక్ష్మీ॥ (౪)

సంసారసాగర విశాలకరాళకాల నక్రగ్రహగ్రసజ నిగ్రహవిగ్రహస్య ।
వ్యగ్రస్యరాగరస నోర్మినిపీడితస్య లక్ష్మీ॥ (౫)

సంసారవృక్ష మఘబీజమనన్తకర్మ శాఖాశతంకరణ పత్రమనఙ్గపుష్పమ్ ।
ఆరుహ్యదుఃఖ ఫలితంపతతో దయాళో లక్ష్మీ॥ (౬)

సంసారసర్పఘనవక్త్రభయోగ్రతీవ్ర దంష్ట్రాకరాళవిషదగ్ధవినష్టమూర్తేః।
నాగారివాహన సుధాబ్ధినివాసశౌరే లక్ష్మీ॥ (౭)

సంసారదావదహనాతురభీకరోరు జ్వాలావళీభిరతిదగ్ధతనూరుహస్య ।
త్వత్పాదపద్మసరసీశరణాగతస్య లక్ష్మీ॥ (౮)

సంసారజాలపతితస్యజగన్నివాససర్వేన్ద్రియార్థబడిశార్థఝషోపమస్య।
ప్రోత్ఖణ్డితప్రచురతాలుకమస్తకస్య లక్ష్మీ॥ (౯)

సంసారభీకరకరీసకలాభిఘాత నిష్పిష్టమర్మవపుషస్సకలార్తినాశ ।
ప్రాణప్రయాణ భవభీతిసమాకులస్య లక్ష్మీ॥ (౧౦)

అన్ధస్యమేహృదివివేకమహాధనస్య చోరైఃప్రభో బలిభిరిన్ద్రియనామధేయైః ।
మోహాన్ధకూప కుహరే వినిపాతితస్య లక్ష్మీ॥ (౧౧)

లక్ష్మీపతేకమలనాభసురేశవిష్ణో వైకుంఠకృష్ణమధుసూదనపుష్కరాక్ష।
బ్రహ్మణ్యకేశవజనార్దనవాసుదేవ దేవేశ దేహికృపణస్యకరావలమ్బమ్ (౧౨)

ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

சிவாதிக்யரத்நாவளி நிரஸனமென்னும்

# பாஷண்டமதசபேடிகையின் பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧ | ௩ | వాచస్ఫురంతి | వాచస్స్ఫురన్తి |
| ௩ | ௧௧ | போல | போலே |
| ... | ௧௫ | ஸ்ர்வ | ஸர்வ |
| ௫ | ௰ | జైంనపః | జైనదవః |
| ௬ | ௨௭ | కురుతే | కురుత |
| ௭ | ௨ | తీయ్య | తీయ |
| ... | ௩ | కర్వంతి | కుర్వన్తి |
| ... | ௨௦ | அறிவுக்கேட்டு | அறிவுகேட்டு |
| ௮ | ௨௧ | கண்டோக்தி | கண்ட்டோக்தி |
| ௯ | ௧௩ | மோக்ஷக்ர | மோக்ஷகர |
| ௧௨ | ௧௫ | యణాత్ | యణాద్ |
| ... | ௩௨ | శక్తిప్రథమ | శక్తిఃప్రథమ |
| ௧௩ | ௩௦ | லோகாய்திக | லோகாயதிக |
| ௧௫ | ௧௧ | என்கிர | என்கிற |
| ... | ௩௩ | க்ரமமாய் | க்ரமாய் |
| ௧௭ | ௨௩ | మధిపశూ | మధిపతిఃపశూ |
| ... | ௨௬ | ఇషుంస | ఇషుంన |
| ... | ௨௯ | వ్రణైకసం | వృణైకమహం |
| ... | ௩௨ | ப்ரஹ்மித | ப்ரும்ஹித |
| ௧௯ | ௩ | నిమజ్జథనా | నిమజ్జథనా |
| ௨௦ | ௧௫ | ப்ராஹ்மி | ப்ராஹ்மீ |
| ... | ௩௩ | கட்டும் | கட்கும் |
| ௨௩ | ௨௦ | భీస్నం | భిన్నం |
| ௨௪ | ௧௮ | కృద్ధా | క్రుద్ధా |
| ௨௫ | ௯ | ఋజ్మ్యం | ఋజ్మ్యం |
| ... | ௧௧ | దక్షిణతః | దక్షిణత |
| ௨௬ | ௮ | ஶாஸ்தரத்திலே | ஶாஸ்த்ரத்திலே |
| ... | ௨௩ | విధాప్తే | విధిప్తే |
| ௨௯ | ௩௦ | என்று | என்றும் |
| ௩௦ | ௧ | మశీయ్య | మశీయ |
| ௩௧ | ௨௨ | బృహ్మణా | బృంహణా |
| ௩௨ | ௨௯ | యద్బ్రాంహణా | యద్బ్రాహ్మణా |
| ௩௪ | ௩௪ | விஷ்ண்வா | விஷ்ணுவா |
| ௩௭ | ௧௨ | గుహ్యాత్ | గుహ్యాద్ |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪௪ | ௩0 | పతాచారాః | పతాచారాః |
| ௪௯ | ௩௪ | ద్రష్టా | దృష్టా |
| ௫0 | உ௩ | సాత్వకీ | స్రాత్త్వకీ |
| ௫௨ | க௮ | మృయం తేచ | ప్రియస్తేచ |
| ... | உ௬ | గాత్రీయ్యంతే | రాత్రీయంత్తే |
| ௫௩ | க௮ | స్మింఙ్నాచ | స్మిఙ్నాఛ |
| ௫௫ | ௨௨ | సనకానాఖ్యం | సనన్నాఖ్యం |
| ... | உ௪ | సాంపతణం | సాంవతణం |
| ... | ௩௩ | కార్షం | కారణ్ఙం |
| ௫௬ | ௫ | బృహ్మా | బ్రహ్మా |
| ... | ௬ | శ్మక్ర | శ్మశ్రిక |
| ௫எ | உ௫ | సేచనమీ | సేచనమ్ |
| ௯௨ | க௫ | కారణ | కారణ |
| ... | க௫ | మీశ్వరః | మీశ్వరమ్ |
| ... | உ௮ | భృష్టఅతో | భ్రష్టస్తతో |
| ... | க௯ | పదాన్తార | పరాంస్తార |
| அ௯ | ௩0 | వృతాదిభిః | వ్రతావిభిః |
| ௯௨ | க௨ | తవక్ష్యాసవృతే | తోవక్ష్యామిసువ్రతే |
| ... | க௩ | పూజేత | ప్రూజయతి |
| ... | ௨0 | శక్తపాంశూనాం | సక్తసాంసూనాం |
| ... | ௨0 | సంఘ్యాత | సంక్యాత |
| ... | ௨0 | తామత్సమాం | తావత్సమాం |
| ... | ௩௪ | శుఖమస్నుతే | సుఖమశ్నుతే |
| [illegible] | க0 | వషాణని | వషాణణి |
| ... | [illegible] | చిన్హాయ | చిహ్నాయ |
| [illegible] | க௯ | వనిభిః | వహ్నిః? |
| ... | [illegible] | చ[illegible]ణ్డాణ్డజేమ్యః | చణ్డాణ్డజేన్ద్రైః |
| க0௨ | [illegible] | [illegible]పర్దినే | కపర్దినే |
| .. | ௩௪ | య[illegible] | యగ్రుద్రః |
| ... | ௬ | మావే | మామేవ |
| ... | ௩௪ | ఆపః | అపః |
| ... | ௩0 | చ్ఛాంభోన్నిర్మాల్యం | చ్ఛమ్భోర్నిర్మాల్యం |
| க0எ | உ௪ | వేదృస్స | వేదృస్య |
| ... | உ௪ | விவ்வரிவிவி | விவ் வரிவிவி |

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

# விளம்பரம்.

இந்தக்ரந்தங்கள் வேண்டுவோர்கள் சென்னை, சிந்தாத்ரிபேட்டை, கிழவசெட்டிவீதி ௪௮-வது சங்க்யையுள்ள க்ருஹத்தில் ஸ்த்தாபித்திருக்கும் ஸ்ரீமத் சடகோபன் பொன்னடிச்சபையினும்; சூளை, ரொட்டிகிடங்கு - திருவேங்கட முதலியார்வீதி ௫-வது க்ருஹத்தில் ம - ா - ா - ஸ்ரீ, ஶ. பு. குருஸ்வாமிநாயுடவர்களிடத்தினும் க்ரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம். *

## அச்சிட்டுள்ளவை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இப்பாஷண்டமத சபேடிகை முதற்பாகம் உயர்ந்த காலிகோ கட்டடம் ப்ரதி க-க்கு ... ... | 0 | ௰௪ | 0 |
| ஷை ஷை சாதாகட்டடம் ... ... ... | 0 | ௰௨ | 0 |
| ஸ்ரீமத் கம்பநாட்டாழ்வா னியற்றிய ஸ்ரீமத்ராமாயண பாசுரங்களுக்கிணங்க, சர்வகலாசாலைத் தமிழ் ப்ரதம பண்டிதராகிய ஸ்ரீமான் கோ-இராஜகோபாலபிள்ளை அவர்களா லியற்றப்பட்ட ஸ்ரீமத் ராமாயணவசநம் க-க்கு வால்யம் - 2 - க்கு க்ரயம். ... ... | ௩ | ௮ | 0 |
| இரதத்தாசார்யரென்னும் திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார ருளிச்செய்த அஷ்டப்ரபந்தம் ... | 0 | ௮ | 0 |

வெளியூரார் தப்பால் கூலியுட்பட வனுப்பவேண்டும்.

## அச்சிடுபவை.

சைவகண்டசபேடிகையின் மற்ற பிரிவுகள்.

சைவ சூரசம்ஹார ரத்நாவளி.

இருசமய விளக்க ப்ரமாணத்திரட்டு.

நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ்.

இராமாநுஜமத சபேடிகாதாடநம்.

ஸ்ரீ கண்ட சிருங்கபங்கம்.

இரதத்தாசார்யர்மான்மியம்.

பரகாலவிஜயம்.

* இதனுலுண்டாகும் ப்ரயோஜநங்களை, இத்தகைய கண்டந க்ரந்தங்கள் பலவற்றையும் வெளியிடுகையாகிய பரமகைங்கர்யத்திற் குபயோகிக்கப்படும்.